ANGLO ASIAN
MINI MART
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 0181-900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

ஈழமுரசு
பிரித்தானியா
Eelamurasu Weekly

முரசு: 6 11 – 17 மே 2000 முழக்கம்: 278

AYNGARAN VIDEO
உங்களுக்குத் தேவையான
ORIGINAL VIDEO, VCD, DVD, CD
மற்றும் தொலைக்காட்சி
நாடகங்கள், பிரபல மேடை
நிகழ்ச்சிகள், பட்டிமன்றங்கள்
விற்பனைக்கும் வாடகைக்கும்
பெற்றுக் கொள்ளலாம்.
(அனைத்தும் ORIGINAL பிரதிகள்)
80, Burlington Road
New Malden
SURREY KT3 4NU
Tel: 07939238296
Pub.

# இராணுவம் வெளியேற புலிகள் போர் நிறுத்த ஒப்புதல்

(08.05.00)

ஓயாத அலைகள்-3 இராணுவ நடவடிக்கையின் சிகரமாக சிறீலங்காவின் ஆனையிறவுப் படைத்தளம் வீழ்த்தப்பட்டதை அடுத்து, விடுதலைப் புலிகள் யாழ். நகர் நோக்கிய தமது நகர்வுகளுக்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டமை தெரிந்ததே. இதனால் யாழ்.குடாவில் நிலைகொண்டுள்ள சுமார் 40,000 சிறீலங்காப் படையினரின் நிலை குறித்து உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் பெரும் கேள்விகள் எழுந்தன.



யாழ்ப்பாணத்தில் சிக்கியுள்ள படையினரை மீட்டுக்கொள்வதற்காக சிறீலங்கா அரசு, சில நாடுகளிடம் உதவிகோர முற்பட்டும் வருகிறது. நிலைமை இவ்வாறிருக்க, தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்.குடாவில் நிலைகொண்டுள்ள சிறீலங்காப்படையினர் பாதுகாப்பான முறையில் வெளியேறுவதற்காக தற்காலிகமான போர் நிறுத்தம் ஒன்றைச் செய்வதற்கு முன்வந்துள்ளனர். இப் போர்நிறுத்தம் குறித்து விடுதலைப் புலிகள் அறிக்கை ஒன்றினையும் இன்று வெளியிட்டுள்ளனர். அவ் அறிக்கையில்,

யாழ்.குடாவில் நிலைகொண்டுள்ள சிறீலங்காப் படையினர் பாதுகாப்பாக வெளியேறுவதற்காகவும், மேலும் இரத்தக்களரி ஏற்படாது இருப்பதற்குமாக தற்காலிக போர் நிறுத்தம் ஒன்றினைச் செய்ய தமிழீழ விடுதலைப் புலிகள் விருப்பம் கொண்டுள்ளனர். இப் போர் நிறுத்தக்காலத்தில் யாழ். குடாவில் நிலை கொண்டுள்ள சிறீலங்காப் படையினருக்கு எதிரான சகல இரா

(☞ 2ம் பக்கம்)

## போரில் விரைவில் வெல்லுவேன்

### – சந்திரிகா –



(08.05.00)

நாட்டு மக்களுக்கு இன்று வானொலி மற்றும் தொலைக் காட்சியில் உரையாற்றிய சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா, விடுதலைப் புலிகளுடனான போரில் விரைவில் தான் வெற்றியடைவேன் என சூளுரைத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சிறீலங்காப்படையினர் பாதுகாப்பான முறையில் வெளியேற விடுதலைப் புலிகள் தற்காலிகமான போர் நிறுத்தம் ஒன்றை செய்துகொள்ள ஒப்புதல் அளித்து அறிக்கை வெளியிட்ட பின்னர் சந்திரிகா நாட்டு மக்களுக்கு உரையாற்றிய போதிலும், விடுதலைப் புலிகளின் கோரிக்கை குறித்து தனது பேச்சில் எதுவும் தெரிவிக்கவில்லை.

மாறாக விடுதலைப் புலிகளை குற்றம்சாட்டி உரையாற்றியதுடன் இப்போரில் விடுதலைப் புலிகளை விரைவில் முறியடிப்பேன் எனவும் குறிப்பிட்டள்ளார். ஆனையிறவுத் தளம் விடுதலைப் புலிகளின் கைகளில் வீழ்ந்தது ஒரு தற்காலிகமான இராணுவ பின்னடைவே என வும் சந்திரிகா இப் பேச்சின் போது குறிப்பிட்டுள்ளார்.

## யாழ்ப்பாணத்தை இராணுவம் ஆக்கிரமித்தவேளை இந்தியா மனிதாபிமான உதவி செய்ததா?

### – வைகோ –

(08.05.00)

சிறீலங்காவிற்கு இந்தியா மறைமுகமாக கூட உதவி செய்யக்கூடும் என்ற கருத்து தமிழகத்தில் ஏற்பட்டால் தமிழக இளைஞர்களின் உள்ளம் கொந்தளிக்கும் நிலைமை உருவாகும் என இந்தியப் பிரதமர் வாஜ்பாய் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்ட ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

சிறீலங்கா அரசின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் இராணுவ உதவி இல்லை எனவும் வாஜ்பாய் தெரிவித்ததை நாம் வரவேற்கின்றோம். ஆயினும் மனிதாபிமான உதவி என்ற பதம் தற்பொழுது தலைதூக்கி வருகின்றது. 1995ம் ஆண்டு யாழ்.குடாவை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்தபோது பத்து இலட்சம் தமிழர்கள் உணவு, மருந்தின்றி சொல்லொணாத் துன்பங்களுக்கு அளாகினர். அப்பாவித் தமிழர்கள் பலர் உயிரிழந்ததுடன், தமிழர்களது வழிபாட்டுத் தலங்களும் அழிக்கப்பட்டன. ஆனால் அந்தவேளை, இந்திய அரசு எவ்வித மனிதாபிமான உதவிகளையும் அம்மக்களுக்குச் செய்யவில்லை. ஆனால் தற்பொழுது சிறீலங்கா அரசு யுத்த களத்தில் தோல்விகளைச் சந்திப்பதால் தங்களது இராணுவத்தை வலுப்படுத்திக் கொள்வதற்காக இந்தியாவின் உதவியைக் கோருகின்றது. தமிழ் மக்



(☞ 2ம் பக்கம்)

## சிறீலங்காவிற்கு இராணுவ உதவி இல்லை

### டில்லியில் முடிவு

(08.05.00)

இந்தியத் தலைநகரான புது டில்லியில் நடாளுமன்ற அலுவலகத்தில் சிறீலங்காவிற்கு இந்திய இராணுவ உதவி அளிப்பது தொடர்பாக அனைத்துக் கட்சிகளின் கூட்டம் பிரதமர் வாஜ்பாய் தலைமையில் இன்று கூட்டப்பட்டது. இக் கூட்டத்தில்

(☞ 2ம் பக்கம்)

## படையினருக்கு கிடைத்த இறுதி வாய்ப்பு இது

### – அரசியல் அவதானிகள்

(08.05.00)

போர்க்களத்தில் வெற்றிகளைக் குவித்துச் செல்லும் ஒரு தரப்பு பொதுவாக தமது நிலையினை மேலும் தக்கவைக்கவே முயலும். ஆனால் விடுதலைப் புலிகள் யாழ்.குடாவினுள் பிர

(☞ 2ம் பக்கம்)

தமிழினி
பல்பொருள் அங்காடி
TAMILINI Cash and Carry
195-197 The Broadway, Southall
Middx Ub1 1LZ
Tel: 0181-606 9900 Fax: 0181-813 8269
* எமக்கு லண்டனில் வேறு எப் பகுதியிலும் கிளைகள் எதுவும் கிடையாது!

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

Siege Social
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

RCS PARIS
B 399 673 110 (95B01491)

Directeur de la publication:
P. Velupillai

Redacteur:
P. Sivaguru

Impression:
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்: பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி: Leama
Tel: 0208 2053650
Fax: 0208 2053651

டென்மார்க்: T. சுரேஸ்காந்த்
Møller vcj - 23
5800 Nyborg, Denmark.
Tel: 65316155 - Fax: 65302588

சுவிஸ்: தபாற்தொடர்பு
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin,
Swiss.
Natel: 079 635 02 16

லண்டன்:
தபாற்தொடர்பு
EELAMURASU
5, Saxony Parade,
Hayes, UB3 2TQ.
Fax/Tel: 0181-56 16 877
ஜெயந்தன்: - Tel: 0956908145
ஹரி - Tel: 07887874177
பாஸ்கரன் - Tel: 0181-7698302

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
'EELAMURASU'
P.O Box S-109
Homebush South
N.S.W 2140, Australia.
E-Mail:tccsydney@one.net.au

குறிப்பு:
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.

# புலிகளை மூன்று மாதத்தில் அழித்துவிடுவோம்!
## மங்களவின் கணக்கு

*(08.05.00)*

சிறீலங்காவின் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர கடந்த வியாழக்கிழமை தெரிவித்த கருத்தொன்றில், விடுதலைப் புலிகளை இன்னும் மூன்றுமாத காலத்தில் அழித்துவிடுவோம் என தெரிவித்துள்ளார். வெளிநாட்டு செய்தியாளர்களுடனான சந்திப்பின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

யாழ். குடாவில் இருந்து இராணுவத்தை மீளெடுக்க மாட்டோம் என தெரிவித்த அமைச்சர், படையினருக்கு அரசு நவீன ஆயுதங்களை வழங்கி விடுதலைப் புலிகளை முறியடிக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### யாழ்ப்பாணத்தை...

கள் தியாகம் செய்து போராடிக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வேளை, தமிழ்நாட்டு மக்களின் தற்போதைய மனோநிலையை பிரதமருக்கும் இங்குள்ள கட்சித் தலைவர்களுக்கும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

கடந்த பத்து நாட்களில் தமிழ் நாட்டில் மக்களின் மனோநிலை ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான உணர்வு மேலோங்கியுள்ளது. இந்த நிலையில் சிறீலங்கா அரசிற்கோ அல்லது இராணுவத்திற்கோ இந்திய அரசு மறைமுகமாகக்கூட எள்ளளவு உதவி செய்யும் எண்ணம் ஏற்பட்டாலும் தமிழ்நாட்டு இளைஞர்களின் உள்ளம் கொந்தளிக்கும் நிலை ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவும் வைகோ அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### இராணுவம்...

ணுவ நடவடிக்கைகளும் நிறுத்தப்படும். எமது போர் நிறுத்தத் திட்டத்திற்கு சிறீலங்கா அரசு சம்மதிக்கும் பட்சத்தில் அது உடனடியாகவே நடைமுறைப்படுத்தப்படும். அத்துடன் யாழ். குடாவில் உள்ள படையினர் வெளியேறுவதனையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் தமது கண்காணிப்பினைச் செய்து கொள்ளலாம். நன்மதிப்பின் அடிப்படையிலும், வன்முறைகள் மேலும் பரவி இரத்தம் சிந்தாமல் இருப்பதற்காகவுமே இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எமது இக் கோரிக்கையை பரிசீலிக்குமாறு சிறீலங்கா அரசினைக் கோரிக் கொள்ளும் அதேவேளை, எமது இக் கோரிக்கை அரசினால் நிராகரிக்கப்படுமானால் நாம் எமது போர் நடவடிக்கையை தொடருவோம்.

இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் இந்த அறிவித்தலை பல தரப்பினரும் வரவேற்றுள்ளனர். ஆனால், சிறீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளின் இந்தக் கோரிக்கையை ஒட்டுமொத்தமாக நிராகரித்துள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### படையினருக்கு...

வேசிக்கக்கூடிய சாதகத்தினை ஆனையிறவு வீழ்ச்சிக்கு பின்னர் பெற்றுக்கொண்ட போதிலும், நல்லெண்ண அடிப்படையில் சிறீலங்காப் படையினருக்கு ஒரு இறுதி வாய்ப்பினை, தற்காலிக போர்நிறுத்த ஒப்புதல் மூலமாக அளித்துள்ளனர். இதுவே சிறீலங்காப் படையினருக்கு கிடைக்கும் இறுதி வாய்ப்பாகக் கூட இருக்கலாம். புலிகளின் இந்த வாய்ப்பினை சிறீலங்கா அரசு தவற விடுமானால் யாழ். குடாவில் அது பாரிய இராணுவ அழிவினை சந்திக்கவேண்டி நேரிடும். இவ்வாறு, விடுதலைப் புலிகள் அறிவித்த தற்காலிகப் போர் நிறுத்தம் தொடர்பாக கருத்து வெளியிட்ட கொழும்பு அரசியல் அவதானிகள் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### சிறீலங்காவிற்கு...

சிறீலங்காவிற்கு இந்திய இராணுவத்தை அனுப்பக்கூடாது என்ற ஒருமித்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. உள்துறை அமைச்சர் அத்வானி, பாராளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் பிரமுகத் மகஜன் மற்றும் தமிழகத்தை சேர்ந்த மத்திய அமைச்சர்கள் ஆகியோரும் ம.தி.மு.க சார்பில் வைகோ, காங்கிரஸ் கட்சி சார்பில் மன்மோகன் சிங், பிரணாப்முகர்ஜி, மற்றும் தி.மு.க. சார்பில் விடுதலை விரும்பி, உட்பட த.மா.க, அ.தி.மு.க, பா.ம.க, தெலுங்கு தேசம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டுள்ளனர்.

சிறீலங்காவிற்கு எக்காரணத்தைக் கொண்டும் இந்திய இராணுவத்தை அனுப்பும் தவறினைச் செய்யக்கூடாது என இக்கட்சிகள் தமது ஒருமித்த கருத்துக்களைத் தெரிவித்துள்ளன. கூட்டம் முடிவடைந்த பின்னர் அது பற்றி செய்தியாளர்களுக்கு பிரதமர் வாஜ்பாய் பேட்டியளிக்கும் போது, இலங்கையில் நடைபெற்றுவரும் பிரச்சினைகளை இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருவதாகக் குறிப்பிட்டதுடன், என்ன நடக்கும் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார். இக் கூட்டத்தில் கலந்து கொண்ட வைகோ அவர்கள் மிகவும் உணர்வுமயமாக உரையாற்றியது குறிப்பிடத்தக்கது.

ஈழமுரசு நடாத்தும்
இசைமுரசு 2000
காலம்:– 24.09.2000
இடம்:– 54, Place de Torcy
75018 Paris

பிறந்த நாள் வாழ்த்து



செல்வன் அன்றியன் றிக்கி ஜோ ஆனந்

லண்டனில் வசிக்கும் திரு. திருமதி ஜோ ஆனந், தர்சினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் 'றிக்கி' 12.05.2000 அன்றைய தனது முதலாவது பிறந்த நாளை, 13.05.2000 சனிக்கிழமை 18.00 மணிக்கு Denmark arms, 381 Barking Road, East Ham E6 1LA எனும் மண்டபத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

அன்பு அப்பா அம்மா, ஜேர்மனி தாத்தா அம்மம்மா, லண்டன் அப்பப்பா அப்பம்மா, மாமா, மாமி, மச்சான்மார், மச்சாள், ஜேர்மனியில் வசிக்கும் மாமா, மாமி, சித்தப்பாமார், சின்னம்மாமார், அண்ணன்மார், தம்பி, லண்டன் கரன் மாமா, மற்றும் லண்டனில் உள்ள உற்றார், உறவினர்கள், நண்பர்கள், ஜேர்மனியில் உள்ள உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் றிக்கிக் குட்டியை வேளாங்கன்னி அருளால் சகல சௌபாக்கியங்களுடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள்.

*தகவல்: ஜேர்மனியில் வசிக்கும் அன்புத் தாத்தா குடும்பத்தினர்.*

Pub.

நித்தி வாகன சேவை

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய 20M³ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லூர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.



நித்தி:
0148050214 / 0613342518
0607348051 / 0148385825

ERRANCES TRAVELS

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | |
|---|---|
| Bombay | 3,900 Frs. |
| Delhi | 3,900 Frs. |
| Bangkok | 3,400 Frs. |
| Colombo | 3,900 Frs. |
| Singapour | 3,980 Frs. |
| Madras | 4,300 Frs. |
| Londres | 790 Frs. |
| New york | 2,300 Frs. |
| Montreal | 2,800 Frs. |
| Oslo | 2,010 Frs. |
| Toronto | 2,800 Frs. |
| Nepal | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

(ADV)

# வன்னியில் வரலாறுகாணாத மேதின எழுச்சி

(07.05.00)

இம்முறை வன்னியில் நடைபெற்ற மேதின எழுச்சி நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கலந்துகொண்டுள்ளனர். முள்ளியவளை, விசுவமடு ஆகிய பகுதிகளில் மேதினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது.

இப்பேரணிகளில் இம்முறை ஆனையிறவு வெற்றிக்கோசங்கள் பெருமளவில் இடம்பெற்றிருந்தன. முதலாவது பேரணி விசுவமடு உடையார்கட்டு ரெட்பானா வலயத்தில் இருந்து ஆரம்பமாகி விசுவமடு மகா வித்தியாலயத்தில் முடிவடைந்துள்ளது.

ஆனையிறவு வெற்றிக்கான கோசங்கள், பொதுமக்கள் மீது சிறீலங்கா அரசு மேற்கொள்ளும் காட்டுமிராண்டித் தனங்களுக்கு எதிரான கோசங்களை எழுப்பிய வண்ணம் ஊர்வலம் நகர்ந்தது. ஆனையிறவு வெற்றி தொடர்பான பதாகைகளையும் மக்கள் ஏந்திச் சென்றுள்ளனர்.

விசுவமடு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழீழ நிருவாகத்துறைப் பொறுப்பாளர் பரா சிறப்புரை நிகழ்த்தினார். கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன் விசுவமடு பிரதேச மக்களின் மேதின அறிக்கையும் வெளியிடப்பட்டது.

இரண்டாவது பேரணி முள்ளியவளை - தண்ணீரூற்று குமுளமுனைச் சந்தியில் இருந்து ஆரம்பமாகி முள்ளியவளை வித்தியாலய மைதானத்தை சென்றடைந்ததும் முடிவடைந்தது.

இப்பேரணியில் அலங்கார ஊர்திகளும் தமிழீழ எல்லைப் படையணியின் வாத்திய இசையும் இடம்பெற்றது. இறுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், முள்ளியவளைப் பிரதேச சிறப்புப் பொறுப்பாளர் ரூபன், முள்ளியவளைப் பொறுப்பாளர் வின்சன் உட்பட பலரும் உரையாற்றினர்.

# வெள்ளைவானில் கடத்தப்பட்டோர் சடலமாக மீட்பு

(07.05.00)

கொழும்பின் புறநகரப்பகுதியான கடவத்தை பொது மயானத்திற்கு அருகே நேற்றுமுன்தினம் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான நான்கு சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இச்சடலங்கள் அடையாளம் காணப்பட்டபோது, கொல்லப்பட்டவர்களில் இருவர் தமிழ், முஸ்லிம் நபர்கள் எனத் தெரிய வருகிறது. இவர்கள் சடலமாக மீட்கப்படுவதற்கு முதல்நாள் இரவு, வெள்ளைவான் ஒன்றில் வந்த இனந்தெரியாத ஆயுதபாணிகள் இவர்களைக் கடத்திச் சென்றதாகத் தெரியவருகிறது.

அடையாளம் காணப்பட்ட தமிழர் வத்தளை கெந்தளை வீதியைச் சேர்ந்த தங்கையா சிவபூரணம்(42) ஆவர். இவரது வீட்டிற்கு வந்த ஆயுதபாணிகள், இவரை விசாரணைக்கு என அழைத்துச் சென்றதாகத் தெரிய வருகிறது. இக்கொலைச் சம்பவங்கள், கொழும்பில் வசிக்கும் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

# கொழும்பு வரும் இஸ்ரேல் குழு

(07.05.00)

இஸ்ரேலுடனான இராஜதந்திர உறவுகளை மீண்டும் ஆரம்பிக்கப்போவதாக சிறீலங்கா அறிவித்ததை அடுத்து, இன்னும் ஓரிரு நாட்களில் இஸ்ரேல் தூதுக்குழு ஒன்று கொழும்புவர உள்ளது. இதுகுறித்து இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், உறவுகள் புதுப்பிக்கப்படுவது பற்றி சிறீலங்கா ஜனாதிபதி தெரிவித்தது, இஸ்ரேலுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூன்று தசாப்தங்களாக தடைப்பட்டிருந்த இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதையிட்டு இஸ்ரேல் சிறீலங்காவிற்கு பாராட்டுக்களைத் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

# கொழும்பில் தமிழருக்கு எதிரான சுவரொட்டிகள்

(07.05.00)

சிறீலங்காவின் தலைநகர் கொழும்பு உட்பட, கொழும்பு மாவட்டம் முழுவதும் தமிழ் மக்களுக்கு எதிரான இனவெறிச் சுவரொட்டிகள் பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய இயக்கம் என்ற இனவாத அமைப்பினால் ஒட்டப்பட்டுள்ளது.

சிங்களவர்களே விழித்தெழுங்கள், புலிகளிடம் இருந்து தாய்நாட்டைக் காக்கப் புறப்படுங்கள் போன்ற வாசகங்களும் இச்சுவரொட்டிகளில் காணப்பட்டுள்ளன.

# போர்க்கால நிலையில் சிறீலங்கா படையினருக்கு கூடுதல் அதிகாரம்

(07.05.00)

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களினால் சிறீலங்காப் படையினருக்கு ஏற்பட்ட பாரிய பின்னடைவுகளை அடுத்து, சிறீலங்கா அரசு, நாட்டை போர்க்கால நிலையில் வைத்திருக்கும் கடுமையான சட்ட விதிகளை அமுல்ப்படுத்தியுள்ளது. இது சம்பந்தமான உத்தரவு அதிவிசேட வர்தகமானி மூலம் கடந்த 3ம் திகதி நள்ளிரவு விடுக்கப்பட்டுள்ளது.

புதிய விதிகளின்படி நாட்டின் பாதுகாப்பிற்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய செய்திகள், விடயங்கள் பொதுப்பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளதுடன், முழு நாடும் யுத்தகால நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவின் பணிப்பின்பேரிலேயே இச்சட்டவிதிகள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இவ்விதிகளின்படி எந்தவொரு அத்தியாவசியத் தேவைக்கும் அதிகாரிகளைச் சந்திரிகாவே நியமிக்க முடியும். அத்துடன் நாட்டின் பாதுகாப்பிற்குத் தேவைப்படும் சொத்துக்களை சுவீகரிக்கும் அதிகாரம் நடைமுறைக்கு வந்துள்ளது. இதற்கமைய கப்பல்கள், விமானங்கள், வாகனங்கள் போன்றவற்றையும் சுவீகரிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கூட்டங்கள், பிரசுரங்கள், ஊர்வலங்கள் போன்றவைக்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. நாட்டின் பாதுகாப்பிற்கு முரணான வகையில் செய்தித்தாள்களை அச்சிடுவதும், விற்பனை செய்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது. புதிய விதிகளின்படி பொலிசாருக்கும் முப்படையினருக்கும் கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# படையில் இருந்து தப்பியோடிய நால்வர் பொலிசாரால் சுட்டுக்கொலை

(07.05.00)

சிறீலங்காவின் களனிப்பகுதியில் பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நால்வர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இந்நால்வரும் சிறீலங்காப் படையில் இருந்து தப்பியோடியவர்கள் எனத் தெரியவருகிறது. எனினும் சிறீலங்காப் பொலிசார் இந் நால்வரும் பாதாள உலகக்கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்துள்ளனர்.

கடந்த 3ம் திகதி அதிகாலை வேளை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. நீர்கொழும்புப் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றையடுத்து களனி கோணவலப் பகுதியைப் பொலிசார் சுற்றிவளைத்தனர். அப்போது பொலிசார் மீது திடீரென துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதனையடுத்து பொலிசார் பதில் தாக்குதலை நடாத்தியவேளை நால்வரும் உயிரிழந்ததாகவும் தெரியவருகிறது.

# யுத்தகால தீர்மானத்தைப் பாராட்டும் பௌத்தமகா சங்கம்

(07.05.00)

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா நாட்டை யுத்தகால தயார் நிலையில் வைத்திருப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டதை சிறீலங்காவின் பௌத்த மகா சங்கத்தினர் பாராட்டியுள்ளனர். இந்த யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு அனைவரும் அரசிற்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என மஸ்கரிய பீடத்தின் மாநாயக்கர் தெரிவித்ததுடன், தேவையேற்படும் பட்சத்தில் வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்வதில் எந்தத் தவறும் இருக்க முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சந்திரிகாவின் தீர்மானம் பற்றி கருத்துக்களைத் தெரிவித்த மத குருமார் சங்கம் முழுமையான வெற்றியைப் பெற்றுக்கொள்வதற்கு வேறுபாடுகளை மறந்து அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

அரசு மேற்கொண்டுள்ள சிறந்த நடவடிக்கையை தாமும் வரவேற்பதாக இன்னொரு பௌத்த அமைப்பான தேசப் பற்றுமிக்க பிக்குமார் முன்னணியும் தெரிவித்துள்ளது.

# செஞ்சிலுவைச்சங்கம் புலிகளுக்கு உதவுவதாகக் கூறுவது பொய்ப்பிரச்சாரமே

## - சங்கப் பேச்சாளர்

(07.05.00)

வடபகுதியில் இருந்து கொழும்பிற்கு விடுதலைப் புலிகளை கொண்டுவரும் செயலில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் அதை முற்றாக நிராகரிப்பதாகவும் சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நோயாளிகள் என்ற போர்வையில் யாழ். குடா நாட்டில் இருந்து புலிகளைக் கொழும்பிற்கு கொண்டுவரும் செயலில் செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டுள்ளதாகவும் விசமத்தனமான பிரச்சாரம் ஒன்றை சிங்களப் பத்திரிகை ஒன்றும், ஆங்கிலப் பத்திரிகை ஒன்றும் செய்தி வெளியிட்டது. இச் செய்திகள் முற்றிலும் தவறானதுடன் விசமத்தனமானதாகும் எனவும் அப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.


2000ம் ஆண்டில் காலடிபதித்திருக்கும் இலாபநோக்கமற்ற 14வது வருட சேவையின் தொடர்ச்சி..... (1986 – 2000)

பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்

Centre Parisien d'Education pour les Tamouls

No d'O 86-3394

பிரெஞ்சு மொழி அறிவின்மை உங்கள் அன்றாட அலுவல்களுக்கு தடையாக உள்ளதா?
ஏற்கனவே பல பாடசாலைகளில் பிரெஞ்சு கற்றும் சரளமாக உரையாட, எழுத முடியாமல் உள்ளதா?

2000 ஆண்டிற்கான புதிய வகுப்புகள்

இலாப நோக்கமற்ற பொது ஸ்தாபனம், 13 வருட நிறைந்த கல்விச் சேவை, ஆற்றல், அனுபவமுள்ள ஆசிரியர்கள், காலத்திற்கேற்ப மாற்றி அமைக்கப்பட்ட பாடத்திட்டங்கள்.

ஏற்கனவே கல்வி கற்ற பல்லாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுடன் நீங்களும் ஏன் பயன்பெறக் கூடாது? குறுகிய காலத்தில் உங்களைத் தயார்செய்ய ஆரம்பமாகிறது.

புதிய பிரெஞ்சு வகுப்பு

- உச்சரிப்பு (*La phonétique*)
- அடிப்படை இலக்கணம் (*La grammaire*)
- உயர் இலக்கணம் (*La grammaire*)
- உரையாடல் (*Les conversations*)
- கடிதம் எழுதுதல் (*Les lettres*)

ஏற்கனவே நடைபெறும் வகுப்புக்களில் புதிய பாடங்கள்
மாலை 14 : 30 - 16 : 00 *Le conditionnel*
மாலை 16 : 00 - 17 : 30 *Le présent simple*
மாலை 17 : 30 - 19 : 00 *Les semi-auxiliaires*

- உங்களை DELF, DALF பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதற்கு..

காலம் 13.05.2000
நேரம் 14:30 - 16:00 (சனி)
ஆசிரியர் கஜன்

புதிய ஆங்கில வகுப்பு

- உச்சரிப்பு
- உரையாடல்
- பொதுப்பரீட்சைக்கு தயார் செய்தல்
- ஆங்கில நாடுகளில் சரளமாக ஆங்கிலத்தில் உரையாட

காலம் 13.05.2000
நேரம் 17:30 - 19:00 (சனி)
ஆசிரியர் ஆரல்

அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும் (சனி, ஞாயிறு 13:00 – 21:00) 165, Rue de Charonne, 75011 Paris.
Tél : 01.43.56.17.91 E-Mail: sptec@aol.com M° : Charonne ou Alexandre Dumas - நிர்வாகம்

# விமானப்படை கொமாண்டோக்கள் தயார் நிலையில்

இந்திய எல்லைப் பகுதியில் கண்காணிப்பு பகுதியில் ஈடுபட விசேட விமானப் படைக் கொமாண்டோக்கள் 50 பேர் உச்சிப்புளி கடற்படைத் தளத்திற்கு வந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. சிறப்பு பயிற்சி பெற்ற இவர்கள் இந்தியாவிற்குள் ஊடுருவ முயலும் தமிழ்க் குழுக்களைக் கண்காணிப்பதற்காக விசேடமாகக் கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இவர்களது பாவனைக்காக இரு விசேட உலங்குவானூர்திகளும் கொண்டுவரப்பட்டுள்ளன. யாழ்.குடாவில் இருந்து தப்பித்துவரும் இக் குழுக்கள் வேதாரண்யம், ஓலைக்குடா, அரிசல்முனை கடற்கரைப்பகுதிகளுக்கே அதிகளவில் வந்திறங்கலாம் எனக்கருதி, இப்பகுதியின் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இந்தியா உதவவேண்டும் – குஸ்ரால் –

இலங்கைக்கு இந்தியா தன்னாலான முழு ஒத்துழைப்பையும் தரவேண்டும் என இந்திய முன்னாள் பிரதமர் குஸ்ரால் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், ஆனையிறவு புலிகள் வசம் வந்தது இலங்கை இராணுவத்திற்குப் பெரும் சவாலாக உள்ளது.

இதில் இந்தியா கவனம் செலுத்தவேண்டும். இலங்கையின் இறையாண்மை மற்றும் ஒற்றுமைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சிறுபான்மை தமிழர்கள் பயமின்றி வாழும் வகையில் இருக்க இந்தியா கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# புறநானூற்றுப்போர் நடக்கிறது செஞ்சி இராமச்சந்திரன்

தமிழீழத் தமிழர்கள் புறநானூற்றுப்போர் நடாத்தி வருகிறார்கள் என அமைச்சர் செஞ்சி இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார். சென்னையில் ஞாயிறன்று நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவொன்றில் பேசிய செஞ்சி இராமச்சந்திரன், தமிழீழத்தை அடைவதற்காக தமிழர்கள் புறநானூற்றுப் போர் ஒன்றை நடாத்தி வருகிறார்கள். தமிழர்கள் நலனைக் கருத்தில்கொண்டு மத்திய அரசு தீவிர கவனம் செலுத்திவருகிறது எனவும் தனது உரையில் தெரிவித்தார்.

# இராணுவம் சரணடைந்தால் மட்டுமே மருத்துவ உதவி – ராமதாஸ்

சிறீலங்கா இராணுவத்தினர் ஆயுதங்களை கீழேபோட்டு சரணடைந்து, போர்நிறுத்தம் ஏற்படும்வரை அவர்களுக்கு மருத்துவ உதவி செய்யக்கூடாது என பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ஞாயிறன்று பத்திரிகை ஒன்றிற்கு அவர் வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

ஈழத் தமிழர் பிரச்சினையில் எல்லாக் கட்சிகளும் சிறந்த நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றன. இலங்கையில் போரை முடிவிற்கு கொண்டுவந்து சமாதானமான அமைதியான அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்றே அனைத்துக் கட்சிகளும் நிலைப்பாடாக கொண்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

# கடலின் நடுவே குழந்தை பலி

யாழ்.குடாவில் இருந்து இந்தியாவிற்கு அகதிகளாக இடம்பெயர்ந்து வரும் தமிழர்களில் கடந்தவாரம் 3வயது குழந்தை ஒன்று கடல்நடுவில் பலியாகியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. வெயில் வெட்கையினாலும், குடிநீரும், உணவும் இன்றியே இக் குழந்தை மரணமடைந்துள்ளது. இரவு நேரங்களில் இவர்களை ஏற்றிவரும் படகோட்டிகள், கரையோரப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதால் கடலின் நடுவில் உள்ள மணல் திட்டுகளில் இறக்கிவிட்டுவிட்டு, காலையில் நடந்து செல்லுங்கள் எனக்கூறி விட்டு சென்றதாகவும், விடிந்த பின்னர்தான் அந்த மக்களுக்கு தாங்கள் நடுக்கடலில் விட்டுவிடப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

இவர்களில் சிலர் நீச்சல் தெரிந்ததால் அங்கிருந்து நீந்தி கரையை அடைந்து காவற்துறையினருக்குக் கொடுத்த தகவலையடுத்து அங்கிருந்த ஏனையவர்கள் கரையோர காவற்துறைப் பொலிசாரால் காப்பாற்றப்பட்டு அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# நெடுமாறனை விடுதலை செய்யக்கோரி ஆர்ப்பாட்டம்

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் பழ.நெடுமாறன் பொலிசாரால் கைது செய்யப்பட்டதற்கும் விழா நடத்துவதற்கு அனுமதி மறுத்தமைக்கும் எதிராக சிதம்பரத்தில் ஆதரவாளர்கள் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இதனையடுத்து அப்பகுதியில் பொலிசார் குவிக்கப்பட்டு அசம்பாவிதங்கள் நடைபெறாதவாறு தடுக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை சிதம்பரத்தில் இரு மாதங்களும் வெற்றிவிழா நடத்துவதற்கான தடை அமுலில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காங்கிரஸ் ஆலோசனை

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நிலவரம் தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் பிரமுகர்கள் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். திங்களன்று (8.5.00) நடைபெறும் அனைத்துக் கட்சி கூட்டத்தொடருக்கு முன்னர் ஞாயிறன்று, தமது கட்சியின் முக்கிய பிரமுகர்களுடன் இவர்கள் ஆலோசனை நடத்தியுள்ளனர். இதில் கட்சியின் மூத்த தலைவர்களான மன்மோகன் சிங், அர்ஜின் சிங், மணிசங்கரய்யர் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். இதன் முடிவில், அனைத்து கட்சி கூட்டத் தொடரில் வலியுறுத்த வேண்டிய கருத்துகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

# இது தோல்வியின் வெளிப்பாடுகள்...

**யாழ்ப்பாணத்தில் 40,000 சிப்பாய்கள் சிக்கிக்கொண்டுள்ளனர். அவர்களை உடனடியாக மீட்க வேண்டும். மேலும் விடுதலைப் புலிகள் கொழும்பு நகரையும் கைப்பற்றும் ஆபத்தும் உள்ளது எனவே உலக நாடுகள் உடனடியாக உதவி செய்யுங்கள்.**

*– பௌத்த பிக்குகள் உலக நாடுகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில்*

**அப்போது இந்திய அமைதிப்படையை கடுமையாக எதிர்த்தேன். ஆனால் இப்போதுள்ள சூழ்நிலையைப் பரிசீலிக்கும் போது, யாழ்ப்பாண தீபகற்பத்தில் புலிகளின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்த உதவி செய்யுமாறு இந்திய இராணுவத்தை அழைக்க வேண்டியது கட்டாயமாகிறது.**

*– பௌத்த பிக்கு ஏலி குணவர்த்தன (இவர்தான் 1987-90 காலப்பகுதியில் இந்திய எதிர்ப்புப்பிரச்சாரத்திற்கு தலைமை தாங்கியவர்)*

**இலங்கையின் வீரர்களைக் காப்பாற்ற மனிதாபிமான அடிப்படையில் உதவுமாறு இந்தியாவிடம் வற்புறுத்தியுள்ளேன். இந்தப்பிரச்சினையில் இந்தியாவின் கடந்தகால அனுபவங்கள் அவர்களுக்கு சந்தோசமானதாக இல்லை. இருந்தபோதிலும் இந்தியா எங்களுக்கு உதவும் என்று நம்புகின்றேன்.**

*– கதிர்காமர் (இந்தியாவில் நிருபர்களுக்கு வழங்கிய பேட்டி ஒன்றில்)*

**யாழ்ப்பாணத்தில் எந்தச் சூழ்நிலையிலும் படையினர் சரண் அடையமாட்டார்கள். யாழ்ப்பாணத்தை காப்பாற்றுவதற்கு நாட்டுப்பற்று உள்ள மக்கள் அனைவரும் இராணுவத்திற்கு தேவையான ஒத்துழைப்பையும், உதவிகளையும் தரவேண்டும்.**

**ஆனையிறவுப் போரில் நாங்கள் சில மாற்றங்களைச் செய்துள்ளோம். அதனைச் செய்தது மிகுந்த பாதுகாப்புக் காரணமாகவே.**

*– சிறீலங்காவின் உதவிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை*

**புலிகளின் சக்தி இப்போது குறைந்துவிட்டதுபோல் தோன்றுகிறது. இலங்கை அரசின் விடாப்பிடியான முயற்சியால் இராணுவத்தினருக்கு இப்போது புதிய மனோபலம் ஏற்பட்டுள்ளது. புலிகளை அவர்கள் வெற்றிகரமாக சமாளித்து வருகிறார்கள். யாழ்பாணத்திற்கு 25 கிலோ மீற்றர் தென்கிழக்கில் புதிய எல்லைக்கோட்டை படையினர் அமைத்துள்ளனர்.**

*– இராணுவப் பேச்சாளர் பாலித்த பெர்னாண்டோ*

**எங்கள் மூத்த சகோதரனான இந்தியாவின் உதவியை நாடுவதைவிடுத்து அரசு நோர்வேயுடன் போகக்கூடாது.**

*– மொறத்தட்டுவே ஆனந்ததேரோ*

**வடக்கில் புலிகளுக்கு ஆயுதம் கொண்டுவரக்கூடிய தரை, கடல் மார்க்கப் பாதைகள் சகலதும் பாதுகாப்பு படைகளின் கட்டுப்பாட்டில் இருக்கையில் ஆனையிறவு முகாம் மீது தாக்குதலை மேற்கொள்வதற்கு தேவையான ஆயுதங்களை புலிகள் எவ்வாறு எடுத்து வந்தனர் என்பது பாதுகாப்பு பிரிவினருக்கு பெரும் புதிராக உள்ளது.**

*– சிங்கள இதழான திவயினவில்*

# சுவரொட்டி ஒட்டியவர்கள் கைது

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகவும், ஆனையிறவு வெற்றிவிழா சுவரொட்டிகளையும் ஒட்டிய 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பெரியார் திராவிடக் கழகத்தைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது. இதேவேளை ஆனையிறவு மீட்கப்பட்டு யாழ்.குடா இராணுவத்தினை விடுதலைப் புலிகள் முற்றுகைக்குள்ளாக்கிய வெற்றிச் செய்தி பற்றிய ஏராளமான சுவரொட்டிகள் தமிழகத்தின் பல பகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.


NÆRKØB -DKS Video

Danmark பதுறேஸ்சியா

மாநகரில் (Nærkøb) நியர்குப்ப் DKSVideo

ஸ்தாபனத்தாரின் மற்றும் இரு சேவைகள்

இடமாற்றம் 01.09.99 முதல் NÆRKØB ரவல்ஸ் கு Mony Exchence

புதிய முகவரி

NÆRKØB ரவல்ஸ் 5

Vestcenter,Venvsvej-10, 7000 Freclericia, Danmark.

தொலைபேசி: 75915840 -75915841 / Fax: 75915842

Nærkøb Travels®

Nærkøb Travels புதிய நவீன படுக்கை வசதிகள் கொண்ட பஸ்சேவை - வாரம் 3 நாட்கள்

| | ஒருவழி | இருவழி |
|---|---|---|
| Danmark - London- | 540Kr | 890Kr |
| Danmark - Paris | 358Kr | 574Kr |
| Danmark - Hambvrg | 205Kr | 327Kr |

இலையுதிர்கால மலிவுப் பயணச்சீட்டுகள் October கடைசிவரை பாரிஸ் சென்று அதே பஸ்சில் திரும்பிவர 398 Kr மட்டுமே

பிரான்ஸ் நாட்டில் இருக்கும் டிஸ்னிலான்ட் (Disny Land Paris) சென்று திரும்பிவர 6.78 Kr மட்டுமே

2 வயதிற்குமேல் 12 வயதுக்குட்பட்டவருக்கு 598 Kr மட்டுமே

உடன் தொடர்புகொண்டு ஆசனங்களைப் பதிவு செய்துகொள்ளுங்கள்: 75915840 - 75915004

Fax 75915842 Fax 75915806

Nærkøb Money Transfer

15 நிமிடங்களுக்குள் உங்கள் பணத்தை அன்றைய வங்கி மதிப்பின்படி உலகில் எந்த இடத்துக்கும் கொடுக்கவோ/ பெற்றுக்கொள்ளவோ முடியும்.

இந்த Money Exchange அரச அங்கீகாரம் பெற்ற ஒரு நிறுவனம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறார்கள்.

இவ்வாரம் முதல் Okotober 30th திகதி வரை

மலிவான விமானப் பயணச்சீட்டுக்கள்.

Copenhagen - Colombo - 3,200 Kr மட்டும் (Tax 165 Kr)

Copenhagen - Colombo - India (திருவனந்தபுரத்திற்கு) - 3800 Kr + Tax 185 kr

# போர்முனைச் செய்திகளில் பொய்களே மலிந்துள்ளன

## - ஹரைய பத்திரிகை ஆசிரியர்

இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்படும்போது அதனைத் தியாகம் என வர்ணிக்கும் சில சிங்கள-ஆங்கிலப் பத்திரிகைகள் புலிகள் கொல்லப்படும்போது அதனைத் தியாகம் என ஏற்றுக் கொள்வதில்லை. சிங்கள இராணுவம் தமது உரிமைகளுக்காகப் போராடுகிறது என்பதைத் தெரிவிக்கும் இப் பத்திரிகைகள் விடுதலைப் புலிகளும் தமது உரிமைகளுக்காகவே போரிடுகின்றனர் என்பதை நன்கு அறிந்துள்ளபோதிலும் செய்திகளைத் திரிபு படுத்தியே வெளியிடுகின்றனர். இப் பத்திரிகைகள் வெளியிடும் செய்திகள் பொதுமக்களை வீணாகக் குழப்பமடையச் செய்யும் வகையிலேயே உள்ளது.. யுத்தம் தொடர்பான செய்திகளை வெளியிடும்போது உண்மை நிலவரங்களை மறைத்து நடக்காத விடயங்களைக்கூட நடந்ததாகக் காட்டுவதில் இப்பத்திரிகைகள் போட்டிபோடுகின்றன. இவ்வாறு ஹரைய பத்திரிகையின் பிரதம ஆசிரியரான ஞானசிறி கொத்திகொட தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு உண்மைகளைத் தெரிவிக்கவேண்டிய பத்திரிகைகள் இனவாதத்தை முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் செய்திகளை வெளியிடுகின்றன. தணிக்கை என்ற பெயரில் அரசு உண்மை நிலவரங்களை மூடி மறைப்பதில் தீவிரமாகச் செயற்படும்வேளை, இப் பத்திரிகைகளும் அதற்கு ஒத்து ஊதுகின்றன. யுத்த களத்தில் தோல்வி ஏற்பட்டால் அது தோல்வியே; அது ஒருபோதும் தந்திரோபாயமான பின்வாங்கல் அல்ல. தொழில்நுட்ப வளர்ச்சியினால் தொலைத் தொடர்புச் சாதனங்கள் பாரிய வளர்ச்சி அடைந்துள்ள இக் காலகட்டத்தில், வெகுஜன தொடர்புச் சாதனங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு முயல்வது ஏளனத்திற்குரியது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# குடாநாட்டுக்கு பொருட்கள் அனுப்புவது இடைநிறுத்தம்

யாழ்.குடா நாட்டிற்கு உணவுப் பொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்களையும் கப்பல் மூலம் அனுப்புவதற்கான சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வழங்கல் கடந்த புதன்கிழமை முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது. யாழ். குடாநாட்டிற்குள் கப்பல்கள் மூலம் எந்தப் பொருட்களை அனுப்புவதென்றாலும் சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறவேண்டும். பாதுகாப்பு அமைச்சு அனுமதியளிக்கும் பொருட்களை மட்டுமே கப்பல் மூலம் குடாநாட்டிற்கு அனுப்பமுடியும்.

தற்போது யாழ்ப்பாணத்தில் நிலைமைகள் மாறி வருவதையடுத்து குடாநாட்டிற்கு கப்பல் மூலம் பொருட்களை அனுப்புவதற்கு வழங்கப்பட்டு வந்த அனுமதியைக் கடந்த புதன் தொடக்கம் சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு இடைநிறுத்தியுள்ளது. மறு அறிவித்தல்வரை இந்த அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் தற்போதைய நடவடிக்கையை அடுத்து இனிமேல் குடாநாட்டிற்கு அனுப்பும் பொருட்களில் பலவற்றிற்கு தடைவிதிக்கப்படலாம் என வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# 42 சிப்பாய்களின் சடலங்கள் ஒப்படைப்பு

சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக விடுதலைப் புலிகள் சிறீலங்காச் சிப்பாய்களின் 42 சடலங்களை கிளிநொச்சியில் வைத்து ஒப்படைத்தனர். கடந்த வாரம் ஒப்படைக்கப்பட்ட இந்த 42 சடலங்களில் 13 சடலங்களில் மாத்திரம் அடையாளம் காணப்பட்டதாக சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை தலைமைச் செயலகம் தெரிவித்துள்ளது. ஒப்படைக்கப்பட்ட 42 சடலங்களும் வவுனியாவிற்குக் கொண்டுவரப்பட்டு அங்கு வைத்தே அடையாளம் காணும் பணிகளை இராணுவம் மேற்கொண்டது.

இதேவேளை வடபகுதி போர்முனையில் சிக்கி படுகாயமடைந்து சுயநினைவற்ற நிலையில் அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமடைந்த படையினர் நான்கு பேரின் சடலங்கள், எவரும் உரிமை கோரப்படாத நிலையில் இராணுவத்தினரால் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. இறந்த நான்கு சிப்பாய்களினதும் பெயர் விபரங்கள் எதுவும் தெரியாத நிலையிலேயே சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

# உளவாளி பலி

சிறீலங்காப் படையினரோடு இணைந்து செயற்பட்டு வந்த உளவாளி ஒருவர் கைக்குண்டு வெடிப்பொன்றில் கொல்லப்பட்டுள்ளார். முன்னர் தமிழ்க் குழுக்களுடன் சேர்ந்து இயங்கிய எம்.சதீஸ்வரன் என்பவரே இவ்வாறு பலியாகியுள்ளார். மட்டக்களப்பு - கல்லடி கடற்கரையோரமாக உள்ள தனது வீட்டில் இவர் இருந்தவேளையே குண்டு வெடிப்பு நடந்துள்ளது.

இக்குண்டுவெடிப்பு விபத்து ரீதியில் நிகழ்ந்ததா? அல்லது தாக்குதல் மூலம் நிகழ்ந்ததா என்பதுபற்றி உறுதியாகத் தெரியவரவில்லை. இச் சம்பவத்தில் இவரது தாயார் உட்பட சிலரும் காயமடைந்துள்ளனர்.


உங்கள் தலைமுடி உதிர்கின்றதா? கவலை வேண்டாம்
இதோ ஜேர்மனியின் புதிய கண்டுபிடிப்பு

எமது புதிய அறிமுகம்
NATURINA 2000 வெளிவந்துவிட்டது!



தலைமுடி உதிர்வு, சுணைவெடிப்பு, இளநரை, மற்றும் முடிவளர்ச்சி நிறுத்தம் போன்றவற்றால் விரக்தியடைந்து போயுள்ளவர்களுக்கு ஓர் நற்செய்தி!
இந்தப் பிரச்சினைகள் வயதானவர்களுக்கும் ஏற்படலாம். இள வயதினருக்கும் ஏற்படலாம். ஆனால் இக் குறைபாடுகளை Naturina® வை தொடர்ந்து உபயோகிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.
இத் தயாரிப்பு நீண்டகாலமாக ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு.
Naturina® இயற்கையான மருத்துவத்தின் கலவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உயிர்ப்புக் கலவையாகும்.
இத் தயாரிப்பு எந்தவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.
எமது புதிய தயாரிப்பைப் பயன்படுத்துவதன் மூலம் சர்மம் பளபளப்புத் தன்மையையும், ஆரோக்கியமான தோலினையும், பலமான நகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
எமது Naturina® தயாரிப்புக்களான கூட்டுக்குளிகைகள், ஷம்பு, கூந்தல் தைலம் (Capsules, Shampoo, Hair tonic) ஆகியவற்றை ஏக காலத்தில் 3 மாதங்களுக்குத் தொடர்ச்சியாக பயன்படுத்தினால் பயன் நிச்சயம்.
இன்றே பாவியுங்கள் Naturina® உங்களை நிச்சயம் திருப்திப்படுத்தும்!

நீங்கள் சுவிசிலிருந்து வாங்கவிரும்பின் Postfinance, A/ C No. 40_176111_3 என்ற வங்கிக் கணக்கு இலக்கத்திற்கும், பிரித்தானியாவிலிருந்து வாங்க விரும்பின் Barclays Bank, Sort Code 20-40-71, A/C No. 80327069 என்ற வங்கிக்கணக்கு இலக்கத்திற்கும் உரிய பணத்தைச் செலுத்தி, பணம் செலுத்தியதற்கான அத்தாட்சியைத் தபால்மூலமோ அல்லது தொலைநகல் மூலமோ எமக்கு அனுப்பி உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.




01.03.2000 இல் இருந்து விசேட சலுகை வழங்கப்படுகின்றது.

மேலதிக விபரங்களுக்கு:
Intercare Handels GmbH
Munster str 5, 59065 Hamm-Germany
Tel: 0049 2381 688347 / Fax: 0049 2381 688349 - Internet: http://www.intercare-naturina.com

உலகில் தினந்தோறும் ஆயிரக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் தமது தலைமுடிப் பிரச்சினைகளின் தீர்வாக Naturina® தயாரிப்புக்களைப் பாவிக்கின்றனர்.
எமது நிறுவனம், Naturina 2000 புதிய தயாரிப்பின் மூலம் மேலும் பல பயன்களை அளித்து ஐரோப்பாவில் முதன்மை நிறுவனமாகத் திகழ்கின்றது.

எம்முடன் தமிழிலும் தொடர்புகொள்ளலாம்
(வாரநாட்களில் பிற்பகல் 3-6 மணி) (ஜேர்மனி நேரம்)

Naturina வின் விளம்பரதாரராக விரும்புகின்றீர்களா?
ஐரோப்பிய நாடுகளில், வீட்டிலிருந்தவாறே மேலதிக வருமானம்பெற விரும்புகின்றீர்களா? விபரங்களுக்கு எம்முடன் தொடர்புகொள்ளவும்.

பிரான்சிற்கான எமது முகவர்:
Ayngran Centre, 71, Rue Louis Blanc, 75010 Paris.
Tel: சிவா - 06 10 18 25 06

# சிறீலங்காவின் மனித உரிமை மீறல்களுக்கு படையினரே காரணம்

## சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத் தலைவர்

(07.05.00)

சிறீலங்காவில் மனித உரிமைகள் மீறப்படுவதற்கு பொலிசார் மற்றும் இராணுவத்தைச் சேர்ந்தோரே அனேகமான சந்தர்ப்பங்களில் காரணமாக இருப்பதாகச் சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் டெஸ்மன் தெரிவித்துள்ளார். கொழு-ம்பு ரஷ்ய கலாச்சார நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற மனித உரிமை தொடர்பான கருத்தரங்கொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சிறீலங்காவில் மனித உரிமைகள் மீறப்படும் சம்பவங்கள் மிக வேகமாக அதிகரித்து வருகின்றன. இவற்றிற்குப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தோரே பெரும்பாலும் காரணமாக உள்ளனர். மனித உரிமைகளை மீறுபவர்களுக்கு எதிராக எவ்வித தண்டனைகளும் வழங்கப்படாததால் மேலும் மேலும் மனித உரிமை மீறல்கள் பெருகிவருகின்றன.

சில சந்தர்ப்பங்களில் படையினரின் மனித உரிமை மீறல்கள் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டாலும் அவற்றின் மீது எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாததால், படையினர் எவ்வித தயக்கமும் இன்றி மனித உரிமை மீறல்களைத் தொடர்ந்தும் செய்துவருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## போரைத் தொடர்ந்தால் தனிமைப்பட நேரிடும் - சிறீலங்கா மத்திய வங்கி எச்சரிக்கை

(07.05.00)

வடக்கு-கிழக்கில் தற்பொழுது நடைபெற்றுவரும் போர் உடனடியாக முடிவிற்குக் கொண்டு வரப்படாவிடில், சிறீலங்கா சர்வதேச சமூகத்தில் இருந்து ஓரங்கட்டப்பட்டு தனித்திருக்கவேண்டிய நிலை ஏற்படும் என சிறீலங்காவின் மத்திய வங்கி எச்சரிக்கை தெரிவித்துள்ளது. வங்கி வெளியிட்ட ஆண்டறிக்கையிலேயே இவ் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது நடைபெறும் யுத்தத்திற்கு வருடாந்தம் ஏறத்தாள ஐயாயிரம் கோடி ரூபாவிற்கு மேல் செலவிடப்படுகிறது. இது, நாட்டின் மொத்த உற்பத்தியில் கிட்டத்தட்ட ஐந்து சதவீதமானதாகும். சிறீலங்கா தனது வருமானத்தைவிட அதிகமான செலவீனங்களுக்கு முகம்கொடுத்துவரும் இவ்வேளை, தேவையற்ற யுத்தத்திற்கு பெரும் தொகையை செலவழித்து வருவது பொருத்தமானது அல்ல. இந்நிலைமை தொடருமானால் நாட்டின் வளங்களும் சக்திகளும் வீணாக அழிவதோடு பாரிய பொருளாதாரச் சீர்கேடுகளும் தலைதூக்கும் எனவும் அவ் அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## லலித்கொலை வழக்கு சந்தேக நபரும் மனைவியும் சுட்டுக்கொலை

(07.05.00)

சிறீலங்காவின் முன்னாள் அமைச்சர் லலித் அத்துலக்முதலி கொலைவழக்கின் முக்கிய சந்தேக நபரும் அவரது மனைவியும் வெல்லம்பிட்டிய பகுதியில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

ஜனகப் பிரியங்க ஜெயவர்த்தன என்ற இந் நபரது வீட்டிற்குச் சென்ற ஆயுதபாணிகள் அவரையும் மனைவியையும் சுட்டுக் கொன்றுவிட்டு தாம் வந்த மோட்டார் சைக்களிலேயே தப்பிச் சென்றுள்ளனர். லலித் அத்துலத்முதலி கொலை வழக்கின் முக்கிய சந்தேக நபரான இவர்மீது அண்மையிலும் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டதும், அதிலிருந்து அவர் தப்பியதும் குறிப்பிடத்தக்கது.

## சந்திரிகாவின் பாதுகாப்பு பிரதம அஞ்சலகம் மூடப்பட்டது

(07.05.00)

சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் உத்தரவினை அடுத்து கொழும்பு, கோட்டையில் அமைந்திருந்த பிரதம தபால் அலுவலகம் கடந்த 3ம் திகதி முதல் மூடப்பட்டுள்ளது. ஜனாதிபதி மாளிகைக்கு எதிரே பிரதம தபால் அலுவலகம் இருப்பதால் சந்திரிகாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்பதாலேயே இம்முடிவு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது.

பிரதம அஞ்சலகம் மூடப்பட்டு அதன் பணிகள் யாவும் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

## வெலிகந்தை தாக்குதலில் இரு சிப்பாய்கள் பலி

(07.05.00)

வெலிகந்தையில் உள்ள சிறீலங்கா இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய மோட்டார்த் தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார். தொப்பிக்கல் காட்டுப் பகுதியில் இருந்தே விடுதலைப் புலிகள் மோட்டார்த் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரியவருகிறது.


மாய மந்திரம், சூன்யம், நாகதோஷம், மற்றும் வேறு வகையான தோஷங்களையும்,
பேய் பிசாசு போன்ற துர்ச்சக்திகளை பூசைகள் மூலமாக நீக்குபவர்.

பிரச்சினைகளா? உறவு முறைகளில் குழப்பமா? காதல், திருமண விசயங்களா? வேலை, வியாபாரம் குறித்த வினாக்களா? மற்றும் உங்கள் வருங்காலத்தைப் பற்றி அறிந்துகொள்ளத் தொடர்பு கொள்ளுங்கள்

ஜோதிடர் கோவிந்தா



ஜோதிடர் கோவிந்தாவைத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

96, The Broadway,
Southall Middlesex,
London UB1 1QF
Tel: 0208-5711999

உண்மையான கணிப்புகள்

1. அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் மற்றும் செனதார் பிராங் நாதன் பரக்கின் வெற்றியைக் கணித்துச் சொன்னேன்.
   - 16.12.1988-நியூஸ் இந்தியா-நியூயோர்க் நாளிதழ்
2. சோவியத் யூனியனிலுள்ள ஆர்மீனியாவின் நிலநடுக்கத்தை முன்பே கணித்தேன்.
   - 27.09.1990 தி மலாய் மையில் - மலேசிய நாளிதழ்
3. மலேசியாவில் 1990 ஒக்டோபர் பொதுத் தேர்தலில் தேசிய முன்னணி ஆட்சிக்கு வரும் என்று திண்ணமாக உரைத்தேன்.
   - 25.09.1990 தமிழ்நேசன் - மலேசிய நாளிதழ்
4. வளைகுடாபோர் ஜனவரி 16.91ல் வெடிக்கும் என்று முன்பே கணித்தேன்.
   - டிசெம்பர் 90. டி ஸ்டார் - மலேசிய நாளிதழ்
5. உலக அரசியல் அரங்கில் அரசியல்வாதிகள் கோள்களின் சஞ்சாரத்தால் பல்வேறு நெருக்கடிகளை மேற்கொள்ளக் கூடும் என்று கணித்தேன்.
   - 10.09.1991 மலேசிய நண்பன் - மலேசிய நாளிதழ்.
6. தமிழக முதல்வர் ஜெயலலிதா குறித்தும் கணித்துச் சொன்னேன்.
   - 1992 ஒகஸ்ட் 14ம் திகதிய மலேசிய நண்பன் - மலேசிய நாளிதழ்
7. சிறீலங்காவின் முன்னாள் அதிபர் பிரேமதாசாவின் அழைப்பிற்கிணங்க கொழும்பு சென்று அவருக்குக் கணித்துச் சொன்னேன்.
   - நியூஸ் இந்தியா டைம்ஸ்-09.09.1994 - நியூயோர்க் நாளிதழ்.

# சிறிலங்காவின் போர்க்கால நிலையும் இஸ்ரேலின் நுழைவும்

சிறீலங்காவின் அரசியல் வரலாற்றில் முன்னொருபோதும் சந்திக்காத மிக இக்கட்டான காலகட்டம் தற்பொழுது நிலவி வருகின்றது. ஆனையிறவுத் தளத்தின் வீழ்ச்சியை அடுத்தே இந்த நிலைமைகள் எழுந்தன என்பது சொல்லித்தான் தெரிய வேண்டிய விடயமல்ல. சிறீலங்கா அரசு தற்போது நாட்டைப் போர்க்காலச் சூழ்நிலைக்குள் பிரகடனப் படுத்தியுள்ளதுடன், படையினருக்குக் கூடுதல் அதிகாரங்களை வழங்கும் புதிய சட்ட விதிகளையும் நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளது. அரசின் இந்த நடவடிக்கையானது சிறீலங்கா தேசம் முன்னொருபோதும் சந்திக்காத அரசியல் கொந்தளிப்பிற்குள் அகப்பட்டிருப்பதையே அம்பலப்படுத்தியுள்ளது. ஆனையிறவுத் தளத்தின் வீழ்ச்சியை அடுத்து சிறீலங்கா அரசு மேற்கொண்ட அதிர்வலைகள் இந்தியா, இஸ்ரேல், சீனா, பாகிஸ்தான், ரஷ்யா ஆகிய நாடுகளிலும் எதிரொலித்துள்ளன. குறிப்பாக இந்தியா தொடர்பான அதிர்வலைகள் பல தரப்பாலும் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டன. தற்


**பேம்பி**

பொழுதுள்ள சூழ்நிலையில் இராணுவத் தலையீடு எதுவும் இருக்கமாட்டாதென இந்தியத் தரப்பினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் இஸ்ரேல் நாட்டுடனான தொடர்புகளை மீளவும் தான் ஆரம்பிக்க முடிவுசெய்துள்ளதாக சிறீலங்கா அரசு அறிவித்தமையும் சிறீலங்கா அரசின் இந்த முடிவினை அமெரிக்கா வரவேற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். அரபு உலகத்தின் பொது எதிரியாக இஸ்ரேல் இருக்கின்றபோதிலும் சிறீலங்காவின் இந்த முடிவினை பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் முஸ்லீம் கட்சிகள் ஒப்புக்குச் சப்பாக முனகுவதோடு மாத்திரம் நின்றிருக்கின்றார்கள்.

1970ம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராக இருந்தவேளை இஸ்ரேல் நாட்டுடனான உறவுகளை உத்தியோக பூர்வமாக சிறீலங்கா துண்டித்திருந்தது. ஆனால் சிறீலங்காவின் 'குறிப்பிடத்தக்க' பேரினவாதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக வந்ததும் தமிழர் தாயகத்தின் போராட்டத்தினை நசுக்குவதற்காக தான் 'எந்த சாத்தானிடமாவது உதவியைக் கோருவேன்' எனத் தெரிவித்ததுடன் நின்றுவிடாது, அதற்குச் செயலுருக்கொடுக்கவும் முனைந்தார். ஜே.ஆரின் திட்டப்படி 1983ம் ஆண்டு இஸ்ரேலுடனான உறவுகள் புதுப்பிக்கப்பட்டது. விடுதலைப் புலிகளை அழித்தொழிக்கும் நோக்குடனே ஜே. ஆர் இதனை மேற்கொண்டார். சிறீலங்காவிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் ஒரு பகுதியில் இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. ஆனால் ஜே.ஆர். நினைத்தபடி தமிழர் தாயகத்தின் சுதந்திரப் போராட்டத்தைத் அடக்க முடியவில்லை. மாறாக தமிழர்களின் சுதந்திர வேட்கை பெருந் தீயாகவே பற்றி எரிந்துகொண்டிருப்பதற்கு இன்றைய வரலாறே சாட்சியாக உள்ளது.

எனினும் 1989ம் ஆண்டு சிறீலங்காவின் ஜனாதிபதியாக ஆர். பிரேமதாசா தெரிவு செய்யப்பட்டதும் மறு வருடமே அமெரிக்கத் தூதரகத்தில் இயங்கிய இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவு மூடப்பட்டது. முஸ்லீம் மக்களிடமும் அரபு நாடுகளிடமும் 'நல்ல பிள்ளை' என்ற பெயரை எடுப்பதற்காகவே பிரேமதாசா இதனை மேற்கொண்டார். ஆனால் மீண்டும் இஸ்ரேலுடனான இராஜதந்திர உறவுகளை ஆரம்பிக்கப்போவதாக சந்திரிகா அரசு அறிவித்துள்ளமை மீண்டும் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் பாணியையே சந்திரிகா பின்பற்ற முனைவது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இனிமேல் சிறீலங்காவின் விடயத்தில் இஸ்ரேல் என்னவிதமாக காய்களை நகர்த்தப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டுமென்றாலும் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் காலப்பகுதியில் என்ன நடந்தது என்பதைப் புரிந்துகொண்டால் உடனடியாகவே இஸ்ரேலின் காய் நகர்த்தல்கள் பற்றி ஊகித்துவிடலாம். ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் காலப்பகுதியில் சிறீலங்காப் படையினருக்கு இஸ்ரேலிடமிருந்து பெருமளவு ஆயுதத் தளவாடங்கள் வாங்கிக் குவிக்கப்பட்டமையும் இராணுவ ஆலோசனைகள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இது ஒருபுறமிருக்க கடந்த 3ம் திகதி இரவு விசேட வர்த்தமானி அறிவித்தலின்மூலம் புதிய விதிகளைக் கொண்டுவந்த சந்திரிகா வெளிநாட்டு செய்தியாளர்கள் உட்பட சிறீலங்காவின் செய்தித்துறைக்கு மிகக் கடுமையான தணிக்கை முறையினை நடைமுறைப்படுத்த உத்தரவிட்டுள்ளார். விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலில் இருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கு இவ்விதிகள் அவசியமானவை என சந்திரிகாவும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையும் பல்லவி பாடிக்கொண்டார்கள். யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளின் கைகளில் விழுவதை இந்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது என ரத்வத்தை சூளுரைத்தும்கொண்டார். ஆனையிறவுத் தளத்தின் வீழ்ச்சியினை அடுத்து, ஒருசில நாட்களாக மௌன விரதம் காத்த ரத்வத்தை மீண்டும் வீறாப்புப் பேச ஆரம்பித்துவிட்டார். விடுதலைப் புலிகளிடம் சரணடைவது என்ற பேச்சுக்கு இடமில்லை எனக் கொக்கரித்த ரத்வத்தை நாட்டின் சகல மக்களும் படையினருக்கு ஆதரவினை வழங்கவேண்டும் என்பதையும் குறிப்பிட்டுக்கொண்டார். இந்தக் கொக்கரிப்பில் ரத்வத்தை ஆனையிறவுத் தளத்தின் வீழ்ச்சி இராணுவத்திற்குக் கிடைத்த பின்னடைவு என்பதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. ஆயினும் சந்திரிகா நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சியில் உரையாற்றும்போது ஆனையிறவு வீழ்ச்சி ஒரு பின்னடைவு என்பதை ஒத்துக்கொண்டாலும் இது அதனை ஒரு தற்காலிகமானது என்றும் குறிப்பிட்டார். வழமைபோலவே இப்பேச்சின்போது சமாதானத்தின் தேவை பற்றியும் அவர் முதலைக்கண்ணீர் வடிக்கத் தவறவில்லை. இப் பேச்சினிடையே நாட்டினை தான் போர்க்கால நிலையில் வைத்திருப்பதற்குச் செய்த பிரகடனத்தைப் பற்றியும் அவர் குறிப்பிடத் தவறவில்லை. பிரச்சினை தீர்ந்ததும் ஒரு நிமிடமேனும் தான் இந்தக் கட்டுப்பாடுகளை வைத்திருக்கப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தான் பதவிக்கு வந்ததும் சிறீலங்காவின் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமையை ஒழித்துவிடப்போவதாகச் சொன்ன சந்திரிகா அதன்படியே 'செய்து காட்டியமையினால்' தற்பொழுது வழங்கப்பட்ட வாக்குறுதியையும் சிங்கள தேசத்தின் குடிமக்கள் நம்பிக்கொள்ளலாம். சிறீலங்காவினைப் போர்க்கால நிலையில் வைப்பதாக சந்திரிகா வெளியிட்ட அறிவிப்பு அதிவிசேட வர்த்தமானியில் 101 பக்கங்களில் வெளிவந்தது. நாட்டைப் போர்க்கால நிலையில் வைத்திருப்பதாக அரசு வெளிப்படையாக அறிவித்ததும் இதுவே முதற் தடவை. இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால், சர்வதேச ரீதியில் மே மாதம் 3ம் திகதியே பத்திரிகைச் சுதந்திர தினமாகும். உலகமெல்லாம் ஊடகத்துறையின் சுதந்திரம் பற்றி நினைவுகூர்ந்த வேளை சிறீலங்கா அன்றைய தினம் ஊடகத்துறைக்கு சாவுமணி அடித்துள்ளது. தமிழர் தாயகத்தின் சுதந்திரவேட்கையை நசுக்குவதற்காக சிறீலங்கா தேசம் மண்டையைக் குடைந்து மாத்தி மாத்தி நகர்த்திய காய்களில் இந்தத் தணிக்கைமுறையும் ஒன்று. தணிக்கை முறை கொண்டுவரப்பட்டமை சிறீலங்காவின் அரசியலில் இது முதற்தடவை அல்ல. ஆனால் இந்தத் தணிக்கை முறையினை சிறீலங்கா அரசு கொண்டுவந்தால் ஒரு விடயத்தினை மாத்திரம் புரிந்துகொள்ளலாம். அதாவது அரசியல் இராணுவ ரீதியில் சிறீலங்காவிற்கு (தணிக்கை கொண்டுவரப்பட்டவேளை) இயலாமை ஏற்படும் காலகட்டமே அது. பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம், செய்தித் தணிக்கை ஆகிய 'ஜனநாயக அணிகலன்களோடு சிறீலங்கா தேசம்' இன்னும் எவ்வளவு காலம்தான் நொண்டி நடைபோடும் என்பது கடவுளுக்குத் தான் வெளிச்சம்.




> இந்தத் தணிக்கை முறையினை சிறீலங்கா அரசு கொண்டுவந்தால் ஒரு விடயத்தினை மாத்திரம் புரிந்துகொள்ளலாம். அதாவது அரசியல் இராணுவ ரீதியில் சிறீலங்காவிற்கு இயலாமை ஏற்படும் காலகட்டமே அது.

எது எப்படியோ சந்திரிகாவின் சமாதானத்திற்கான யுத்தத்திற்கு இது முக்கியமானதொரு காலகட்டம். ஆனையிறவின் வீழ்ச்சி 'சந்திரிகாவின் சமாதானத்திற்கான யுத்தத்திற்கு' ஒரு பாரிய திருப்பு முனையைக் கொடுத்துள்ளது. இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாணமுடியும் என ஒப்புக்குக் கூறியபடி சந்திரிகா மேற்கொண்ட தமிழர் தாயகத்தின் மீதான போர் வெறிக்குக் கிடைத்த வரலாற்றுப் பாடமே இது. 1948ம் ஆண்டு பிரித்தானிய குடியேற்றவாதத்தில் இருந்து சிறீலங்கா சுதந்திரம் பெற்ற மறு நிமிடத்திலிருந்து இன்றுவரை அது தொடர்ந்துகொண்டிருக்கும் தமிழின ஒடுக்கு முறைக்கு அரசியல் களத்திலும், யுத்த களத்திலும் தீர்க்கப்பட்டுவரும் கணக்கின் ஒரு பகுதிதான் ஆனையிறவில் கிடைத்த பாடம். இராணுவ மேலாதிக்கத்தினூடாகத் தமிழ்த் தேசியத்தின் காவலர்களான விடுதலைப் புலிகளை அழித்துவிட்டு அற்ப சலுகைகளை தமிழர்கள்மீது கட்டிவிடலாம் எனச் சந்திரிகா போட்ட பௌத்த இனவாதக் கணக்கு ஆனையிறவில்.தலைகுப்புறக் கவிழ்ந்து நிற்கிறது. எனினும் தோல்வி தந்த ஆவேசத்தினால் உதவிதேடி சந்திரிகா தரப்பு எங்கெல்லாமோ அலையத் தொடங்கியுள்ளது.

எனினும் கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பதை சந்திரிகா தரப்பு ஒரு கணம் ஏனும் சிந்தித்துப்பார்க்கவில்லை. தமிழ்த் தேசியத்தின் அரசியல் இராணுவ நிலைப்பாடுகள் எவ்வளவோ இக் கட்டான காலகட்டங்களை எல்லாம் தாண்டி எவ்வளவோ தூரம் பயணித்திருப்பதால் இனிமேலும் எவ்வாறான 'சூழ்நிலையிலும்' அது நம்பிக்கையுடன் பயணிக்கும் என்பது சந்தேகத்திற்கு இடமில்லாத ஒரு விடயம்.

ஜேர்மனி பொன் (Bonn) நகரில்
யாழ் ரவல்ஸ்
YARL TRAVELS
Köln - Str 79, 53111 Bonn.
உலகின் எப்பாகங்களுக்கும் மலிவு விலையில்
பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்
சிறீலங்கா, இந்தியா, சிங்கப்பூர், கனடா
ஆகிய நாடுகளுக்கு விசேட சலுகைகள்.
தொலைபேசி இலக்கம்: 0228/9652885 – தொலைநகல்: 0228/9652895
GE-Pub.

# பாலசந்தருக்கு எதிராக திரளும் திரையுலகம்

தென்னிந்திய திரைப்பட இயக்குநர் கே. பாலச்சந்தருக்கு எதிராகத் திரையுலக இயக்குநர்கள் திரண்டு வருகின்றனர். பெப்சி (தென்னிந்திய திரைப்பட தொழிலாளர் சம்மேளனம்) என்ற, இந்தியா முழுவதையும் உள்ளடக்கி வைக்கப்பட்டுள்ள பெயரை 'தமிழ்த்திரைப்பட படைப்பாளிகள் - தொழிலாளர் கூட்டமைப்பு என தமிழில் மாற்றவேண்டும் என பாலச்சந்தர் தவிர்ந்த இயக்குநர்கள் கூறிவந்தனர். இந்நிலையில் அதன் பெயரை மாற்றாமலே 'பெப்சி' என்ற அமைப்புக்கு புதிய கட்டடம் அமைக்க, நடாத்த இருந்த விழாவும் நின்று போனநிலையில், கடந்த வாரம் பாலச்சந்தருக்குக் கண்டனம் தெரிவித்து 48 இயக்குநர்கள் இணைந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அவ் அறிக்கையில்,

தமிழ், தமிழ்நாடு என்றால் உங்களுக்கு ஏன் கோபம் வருகிறது.

தங்களை ஒரு நல்ல மனிதராகவும், பண்பட்ட படைப்பாளியாகவும், இவை இரண்டிற்கும் மேலாக தன்மானமிக்க ஒரு தமிழராகவுமே நாங்கள் இதுவரை எண்ணிக்கொண்டிருந்தோம். அதனால்தான் நீங்கள் என்ன பேசினாலும் நாங்கள் எதுவும் பேசுவதில்லை என்று வாயில் கறுப்புத் துணி கட்டி இருந்தோம்.

ஆனால், இயக்குநர் சிகரமே, தங்களைப்பற்றிய கணிப்புகள் அனைத்துமே தவறானவை என்பதைத் தங்களுடைய சமீபகால நடவடிக்கைகளும், சிகரம் வைத்தாற்போல் தங்களுடைய மே தினப் பேச்சும் நிரூபித்திருக்கின்றன.


ஒருங்கிணைந்த சம்மேளனம் 'தமிழ்நாடு திரைப்படப்படைப்பாளிகள் - தொழிலாளர்கள் சம்மேளனம்' என்றே அழைக்கப்படும் என்ற அறிவிப்பு. தங்கள் ஆலோசனையின்படி தங்கள் தலைமையில் எழுதப்பட்ட அறிவிப்புத்தான். இது அடங்கிய ஒருங்கிணைப்பு ஒப்பந்தத்திலுள்ள முதற்கையெழுத்து தங்களுடைய கையெழுத்துத்தான்.

இது இப்படியிருக்க 'பெப்சி என்ற பெயரை எந்தக் கொம்பனாலும் மாற்ற முடியாது' என்று இந்த மே தினத்தன்று மார் தட்டியிருப்பதும் தாங்கள்தான்.

சம்மேளனப் பதவி ஏற்ற நாளிலிருந்து தாங்கள் தொடர்ந்து நடத்தி வந்த, எங்கள் உணர்வுகளுக்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் பொறுத்துக்கொண்டு, வாயில் கறுப்புத்துணிகட்டி மவுன விரதம் காத்தது, தங்கள் மீதுள்ள மரியாதை காரணமாக மட்டும் அல்ல, நாங்கள் வாய் திறந்தால், மீண்டும் ஒரு பிரச்சினை உருவாகி, அதன் காரணம் திரைப்படத் தொழிலும், தொழிலாளர்களும் பாதிக்கப்படக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையும் நல்ல எண்ணமும்தான்.

உங்களுக்கு பிழைக்கவும், பணம் சம்பாதிக்கவும் சின்னத்திரை இருக்கின்றது. ஆனால் திரைப்படத்துறையை நம்பி உள்ளது, இயக்குநர்களும், நடிகர் நடிகைகளும், தொழிலாளர்களும் தான்.

தயவு செய்து உங்கள் சுய இலாபத்திற்காகவோ - சுய கௌரவத்திற்காகவோ சம்மேளனத் தொழிலாளர்களையும், இயக்குநர்களையும் மோதவிட்டு வேலை நிறுத்தத்தை ஏற்படுத்தி தொழில் அமைதியைக் கெடுக்க நினைக்காதீர்கள். உங்களை வாழவைத்த இந்தத் திரைப்படத் தொழில், எங்களையும் வாழ வைக்க வழிவிடுங்கள் எனக் குறிப்பிட்டுள்ளனர்.




# சிறீலங்காப் படையினருக்கு எதிராகப் பேரணி

சிறீலங்காக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது தொடர்ந்து மேற்கொள்ளும் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், 3 மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்தும் மீனவர்களால் பேரணி ஒன்று நடாத்தப்பட்டுள்ளது. கடந்த வியாழனன்று நாகையில் நடைபெற்ற இப் பேரணியில் சுமார் 5000 இற்கும் மேற்பட்ட மீனவர்களும் பாதிக்கப்பட்ட அவர்களது குடும்பத்தினரும் கலந்து கொண்டனர்.

வாயில் கறுப்புத்துணியைக் கட்டியவாறு நாகை பழைய பேருந்து நிலையத்தில் ஆரம்பமான பேரணி நாகை மாவட்ட அலுவலகர் அலுவலகத்தின் முன்னால் முடிவடைந்தது. பேரணியின் முடிவில் கொல்லப்பட்ட மீனவர்களுக்கு அஞ்சலி செலுத்தியபின், சிறீலங்காப் படையினரின் இந் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துமாறு கோரும் மனுவினை நாகை மாவட்ட அதிபரிடம் சமர்ப்பித்தனர். இதன்போது இதனது நகல்கள் பிரதமர் வாஜ்பாய், வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங், தமிழக முதல்வர் கருணாநிதி மற்றும் மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

இதேவேளை, கடந்த வெள்ளியன்று தமிழகத்தில் உள்ள சிறீலங்கா தூதரகத்தின் முன்னால் மீனவர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியுள்ளனர். தூதரகத்தின் முன்னால் குழுமிய சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மீனவர்கள் ஒரு மணி நேரமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது சிறீலங்காக் கடற்படைக்கு எதிரான கோசங்களையும் எழுப்பினர். அகில இந்திய மீனவர் சங்க பொதுச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தின் இறுதியில், தூதரக அதிகாரியிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

# யாழ்.குடாவில் இருந்து அகதிகள் வருகை

யாழ்குடாவில் சிறீலங்காப் படையினர் பொதுமக்கள் மீது தாக்குதல் நடாத்தலாம் என்ற அச்சம் காரணமாக தமிழகத்திற்கு வந்து கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. படையினர் யாழ்குடாவை விட்டு வெளியேறும்போது மக்கள் மீது கடுமையான தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என்ற அச்சம் காரணமாக இவர்கள் இடம்பெயர்ந்து வருவதாக தெரியவருகிறது.

கடந்த இரு தினங்களுக்கு முன் படகோட்டிகளால் ஏற்றி வரப்பட்ட சுமார் 19 பேர் கடலின் நடுவில் உள்ள மணல்திட்டி ஒன்றில் இறக்கிவிடப்பட்டுள்ளனர். பின்னர் இவர்கள் தமிழக மீனவர்களால் மீட்கப்பட்டு கரைசேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களை விசாரணை செய்த பொலிசார், மண்டபம் அகதிமுகாமில் இவர்களை அனுமதித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க, யாழ் குடாவிலுள்ள தமிழ்க் குழுக்கள் தமது தப்பியோடும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர். தரைவழியான தொடர்புகள் இல்லாத நிலையில், கடல் வழியினூடாக தமிழகத்திற்குத் தப்பிச்செல்ல முனைந்து வருவதாகவும், மக்களோடு மக்களாக அகதிகள் போல் இவர்கள் தமிழகத்தில் நுழைந்து விடுவதாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

# இந்திய விமானப்படைத் தளபதியை சிறீலங்காவுக்கு அனுப்பக்கூடாது

## – பா.ம.க நிறுவனர் ராமதாஸ் –

உக்கிரமான போர்ச்சூழலில், இந்திய விமானப்படைத் தளபதியை சிறீலங்காவுக்கு அனுப்பக் கூடாது என்று இந்திய மத்திய அரசிடம் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ராமதாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார். சென்னையில் அவர் வெளியிட்ட அறிக்கையில் தற்போதைய நிலையில் நமது இந்திய அரசு இலங்கையில் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த முறை இந்திய அமைதிப்படை இலங்கை சென்றபோது அங்கிருந்து பௌத்த பிக்குகள் இந்திய அமைதிப்படை இலங்கையை விட்டு வெளியேற வேண்டும் என்று போராட்டம் நடத்தினார்கள். இப்போது அதே பிக்குகள் தங்களுக்கு ஆபத்து அதிகரித்துவிட்டது என்ற நிலை ஏற்பட்டவுடன் தற்போது இந்திய இராணுவத்தை உதவிக்கு அழைக்கிறார்கள்.

இந்திய அமைதிப்படை கடந்தமுறை இலங்கைக்கு அனுப்பப்பட்டபோது அங்கு வாழும் ஈழத் தமிழர்களுக்கு ஏராளமான உயிர் சேதத்தையும் பெரும் பாதிப்பையும் ஏற்படுத்தியது போன்ற பெரும் தவறை தற்போது இந்திய அரசு செய்துவிடக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். இந்திய விமானப் படைத் தளபதி டிப்னிஸ் இலங்கை செல்வது நல்லதல்ல. அவர் இலங்கை செல்லக் கூடாது. அவர் இலங்கை சென்றால் தமிழர்களுக்குப் பெரும் அவநம்பிக்கையை உண்டாக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சிறீலங்காவில் இந்திய இராணுவத் தலையீடு இருக்காது என்று மத்திய அரசு அறிவித்துள்ளதற்கு ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ, பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ராமதாஸ் ஆகியோர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

# 128 தமிழ் மீனவர்கள் சிங்களப் படைகளால் படுகொலை:

## தொடரும் பயங்கரம்

சிறீலங்கா கடற்படையினரால் 128 தமிழக மீனவர்கள் இதுவரை கடலில் வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளதாக தேசிய லீக் அமைப்பைச் சேர்ந்த நிஜாமுதீன் தெரிவித்துள்ளார். கடந்த புதனன்று தமிழக மீனவர்கள் சிறீலங்கா படையினரால் படுகொலை செய்யப்பட்டு வருவது தொடர்பாக தமிழக சட்டசபையில் நடைபெற்ற விவாதத்தில் பேசியபோது தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், நமது நாட்டிலும் தமிழர்களை அழித்து வருகிறார்கள். நமது நாட்டில் எல்லைக்குள் வந்தும் தமிழர்களை அழிக்கிறார்கள். சிறீலங்கா அரசு இவ்வாறு தொடர்ந்து செய்துகொண்டிருந்தால் நாம் விடுதலைப் புலிகளை ஏன் ஆதரிக்கக்கூடாது என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது. தமிழனைக் காப்பாற்ற யாருமே இல்லை. அங்குள்ள சிங்களவர்களுக்கு பிரச்சினை என்றவுடன் அங்குள்ள இந்தியத் தூதரை உடனே இங்கு அனுப்பி வைக்கிறார்கள். ஆனால் இங்கே உள்ள தமிழர்களுக்குப் பிரச்சினை என்றால், இலங்கைத் தூதர் அங்கே போனார் என்ற தகவல் இல்லை. அப்படியானால் இனி மேல் இலங்கைக்கு ஒரு தூதரகம் தமிழ்நாட்டில் தேவைதானா எனவும் தனது பேச்சில் கேள்வி எழுப்பினார். இவ் விவாதத்தில் கலந்துகொண்ட பலரும் சிறீலங்கா கடற்படையின் இவ் அத்துமீறல் நடவடிக்கையை வன்மையாகக் கண்டித்ததுடன், சர்வதேச நீதிமன்றத்தில் சிறீலங்கா அரசிற்கு எதிராக வழக்குத் தொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

### மேற்கு வங்க அமைச்சர் தற்கொலை

மேற்கு வங்க அமைச்சர் கங்குலி, தீக்குளித்து தற்கொலை செய்துகொண்டுள்ளார். கடந்த சில தினங்களுக்கு முன்னர் தனக்குத் தானே தீ மூட்டிய இவர், எரிகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார். இம் மரணம் குறித்த விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.


# கார்கிலில் இரு சிகரங்கள் படையினர் வசம்

கார்கில் - காஷ்மீர் பகுதியில் ஊடுருவியுள்ள பாகிஸ்தான் படையினரை விரட்டியடிக்கும் நடவடிக்கையில் இந்தியப் படையினருக்குத் தொடர்ந்து வெற்றியளித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்தவாரம் இடம்பெற்ற மோதலின் பின்னர், இந்தியப் படைகளால் மேலும் இரண்டு சிகரங்கள் மீட்கப்பட்டுள்ளதாக அச் செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

இதேவேளை மிக முக்கிய மலைச்சிகரமான 'புலிமலைக் குன்றை' மீட்பதற்கு இந்தியப் படையினர் கடும் தாக்குதலை நடாத்தி வருவதாகவும், ஓரிரு தினங்களுக்குள் அதனை படையினர் மீட்டெடுத்து விடுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இம் மலைச் சிகரத்தின் மீதான தாக்குதல்களின் போது பல பாகிஸ்தானிய படையினர் கொல்லப்பட்டு, பலர் காயமடைந்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இத் தாக்குதலில் 10 இந்தியப்படை வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

# ரகுபதி - கருப்புசாமி தலைமையில் 8000 பேர் தி.மு.க.வில் இணைந்தனர்

அ.தி.மு.க. வின் முன்னாள் அமைச்சர் ரகுபதி மற்றும் கருப்புசாமி பாண்டியன் ஆகியோரின் தலைமையில் சுமார் 8000 பேர் அறிவாலயத்தில் இவர்களுக்கு வரவேற்பு வழங்கப்பட்டது. தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி ரகுபதி, கருப்புசாமி ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி வரவேற்பளித்தார்.



வரையிலானோர் தம்மை தி.மு.க.வில் இணைத்துக்கொண்டுள்ளனர். கடந்த புதனன்று அண்ணா அறிவாலயத்தில் இவர்களுக்கு வரவேற்பு வழங்கப்பட்டது. தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி ரகுபதி, கருப்புசாமி ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி வரவேற்பளித்தார்.

இவர்களை வரவேற்று பேசிய கலைஞர், திமுக குடும்பம் பாசமுள்ள இயக்கம். உங்களைத் திருப்பி அனுப்பி நன்மையே செய்துள்ளனர். பிரிந்து சென்ற தம்பிகளை நாங்கள் திரும்பப் பெற்றிருக்கிறோம் எனத் தெரிவித்தார்.

# வழக்குத் தொடுக்க வேண்டாம் எனக்கோரும் ஆங்கிலப் பள்ளிகள்

தமிழ்வழிக் கல்விக்கு உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மேன்முறையீடு செய்யவேண்டாம் என சென்னை ஆங்கிலப் பள்ளிகள் பெற்றோர் கூட்டமைப்பு சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வேண்டுகோள் தொடர்பாக இக் கூட்டமைப்பின் செயலாளர் நிருபர்களுக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். பெற்றோர்களின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாப்பதில் அரசுக்கு பெரும்பங்கு உண்டென்பதால் தமிழக அரசு எந்தவித நெருக்குதலுக்கும் அடிபணியாமல் உயர் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வதைத் தவிர்க்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

# 1000 ரூபா அறிமுகம்

இந்தியாவில் எதிர்வரும் யூலை மாதம் இறுதியில் இருந்து 1000 ரூபா தாள் நாணயம் புழக்கத்தில் விடப்பட உள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. இப்புதிய தாள்கள் அச்சடிக்கும் பணி முடிவடைந்து வருவதாகவும் ஓகஸ்ட் மாதத்தில் இது முழு அளவிலான புழக்கத்திற்கு வந்துவிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது 500 ரூபா வரையில் மட்டுமே இருப்பதால், அதிகமான கள்ளத்தாள்கள் உலாவுவதாகவும் அதனைத் தடுப்பதற்கே இப்புதிய 1000 ரூபா தாளின் வருகை எனவும் அறியப்படுகிறது.

# ஜெயலலிதா முடிவை எதிர்த்து நீதிமன்றம் போகக்கூடாது

'அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா எடுக்கும் முடிவை எதிர்த்து நீதிமன்றம் சென்றால், அடிப்படை உறுப்பினர் பதவி இரத்தாகும்' என்று அ.தி.மு.க சட்ட விதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. செயற்குழுக் கூட்டம் சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க தலைமை நிலையத்தில், பொதுச் செயலாளர் ஜெயலலிதா தலைமையில் நடைபெற்றது.

செயற்குழுக் கூட்டத்தில் அ.தி.மு.க. அவைத் தலைவராக முன்னாள அமைச்சர் காளிமுத்து தேர்ந்து எடுக்கப்பட்டார். இதனையடுத்து, காளிமுத்துவுக்கு பொன்னாடை போர்த்தி, ஜெயலலிதா வாழ்த்துத் தெரிவித்தார்.

செயற்குழுவில் முக்கிய தீர்மானமாக அ.தி.மு.க. சட்ட விதிகளில் சில மாற்றங்கள் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டன.

அ.தி.மு.க. சம்பந்தமாக எந்தப் பிரச்சினைகள் பற்றியும் நீதிமன்றம் செல்ல, கழக உறுப்பினர்களுக்கு உரிமை இல்லை. அப்படி யாராவது பொதுச் செயலாளரின் (ஜெயலலிதா) முடிவை எதிர்த்து கோர்ட்டுக்குச் சென்றால் அவர் அடிப்படை உறுப்பினர் தகுதியை இழப்பார்.

பொதுச் செயலாளர் நிர்வாக வசதிக்காக பொது உறுப்பினர்களில் இருந்து ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட துணைப் பொதுச் செயலாளர்களையும், பொருளாளரையும் தேவைக்கு ஏற்ப தலைமைக் கழக செயலாளர்களையும் நியமித்துக் கொள்ளலாம். எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# சென்னை வந்த தொடருந்தில் கொள்ளை பொலிசார் துப்பாக்கிச் சூடு

டெல்லியில் இருந்து சென்னைக்கு வந்த தமிழ்நாடு தொடருந்தில் கொள்ளையில் ஈடுபட்டவர்களுக்கும் பொலிசாருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடந்தது.

கடந்த வியாழக்கிழமை இரவு 10 மணியளவில் டெல்லியில் இருந்து சென்னைக்குப் புறப்பட்ட தொடருந்தில் நள்ளிரவு 12.30 மணியளவில் தொடருந்து உத்தரப்பிரதேச மாநிலம் கோசிகோலன் - சட்டா நிலையங்களுக்கு இடையே வந்துகொண்டிருந்தது.

அப்போது தொடருந்துப் பெட்டிகளின் மேல் கூரையில் மறைவாக இருந்து வந்த 20 பேர் கொண்ட கொள்ளையர்கள் திடீரென பெட்டியின்மேல் உள்ள 'ஏர்' பைப்பைத் திறந்து விட்டனர். இதனால் தொடருந்து இடைநிறுத்தப்பட்டது.

உடனே கொள்ளையர்கள் பெட்டிகளின் கதவுகள் மூடப்பட்டு இருந்ததால், ஒவ்வொரு பெட்டியாக ஜன்னலில் தொங்கியபடி ஓரத்தில் இருந்தவர்களின் நகைகளைப் பறிக்க முயன்றனர்.

கொள்ளையர் கையில் துப்பாக்கியுடன் பெட்டியில் இருப்பவர்களை மிரட்டியதால் பயணிகள் பீதியுடன் அபாய குரல் எழுப்பினார்கள். அவர்களின் அலறல் சத்தம் கேட்டு தொடருந்தில் இருந்த சென்னை 'தொடருந்துப் பாதுகாப்புப் படை' பொலிசார் கொள்ளையர்களை பிடிப்பதற்கு முயற்சிக்க கொள்ளையர்கள் பொலிசாரை நோக்கி கற்களை வீசி தாக்குதல் நடத்தினார்கள்.

இதைத் தொடர்ந்து பொலிசார், கொள்ளையர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். ஆனால் அவர்கள் இருட்டில் தப்பி ஓடி விட்டார்கள்.

# சுயமாக சிந்தித்துத்தான் செயல்படுகிறேன் -ஜெயலலிதா

சுதந்திரமான, சுயமாக சிந்தித்துத்தான் நான் செயல்படுகிறேன் என்று அ.தி.மு.க பொதுச் செயலர் ஜெயலலிதா கூறினார்.

சென்னையில் சனிக்கிழமை அன்று நடைபெற்ற அ.தி.மு.க செயற்குழுக் கூட்டத்திற்குப் பின்னர் அவர் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது, சசிகலாவின் பிடியில் நீங்கள் இருப்பதாகக் குற்றம் சாட்டப்படுகிறதே என்று கேட்டதற்கு அவர் இவ்வாறு கூறினார். மேலும், அ.தி.மு.கவில் நாடாளுமன்ற உறுப்பினர் டிடிவி, தினகரனுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்ற புகாரை ஜெயலலிதா கடுமையாக மறுத்தார்.

அ.தி.மு.கவிலிருந்து நீக்கப்பட்டவர்களை நதியிலிருந்து தூக்கி எறியப்பட்ட குப்பைகள் என்று குறிப்பிட்ட ஜெயலலிதா, அவர்கள் திரும்பி வந்தால் மீண்டும் கட்சியில் சேர்க்கமாட்டேன் என்று கூறினார்.

முன்னதாக நடைபெற்ற அ.தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில், தற்போது அக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளராக இருக்கும் காளிமுத்து கட்சியின் அவைத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார்.

# இந்தியா-பாகிஸ்தான் உடன்பாடு

விவசாயிகள் பயிர்களை அறுவடை செய்வதற்கு வசதியாக, அறுவடைக் காலத்தில் எல்லையில் தாக்குதல் நடத்துவதில்லை என்று இந்தியா - பாகிஸ்தான் இடையே ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது. இத் தகவலை இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையின் அதிகாரி ஜெனரல் அவதார் சிங் ஆவ்லாக் நிருபர்களிடம் சனிக்கிழமை கூறினார். இரு நாடுகளின் எல்லைப் பாதுகாப்புப் படை அதிகாரிகளுக்கு இடையே 4 நாள்கள் நடந்த பேச்சுவார்த்தையின்போது இந்த ஒப்பந்தம் ஏற்பட்டது. இதுபோன்ற பேச்சுவார்த்தை 6 மாதத்துக்கு ஒருமுறை நடைபெறுகிறது.


# அத்வானிக்கு பிடி ஆணை

மத்திய உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானியைக் கைது செய்ய மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றம் பிடி ஆணை பிறப்பித்துள்ளது.

இரண்டு இடங்களில் அமைச்சர் அத்வானி தனது பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்த்திருந்தார். மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்பிரிவு 31 மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 193-ன் கீழ் இது சட்ட விரோதமாகும். இது குறித்து சமூக நல ஊழியர் எஸ்.பி.ஜொஹாரி உயர் நீதிமன்றத்தில் அமைச்சர் அத்வானி மீது வழக்குத் தொடர்ந்தார். அவரது மனுவை ஏற்றுக் கொண்ட உயர்நீதிமன்றம் அத்வானிக்கு ஜாமீனில் வெளிவரக் கூடிய பிடி ஆணையைப் பிறப்பித்துள்ளது.



தமிழகத்தின் ஒரு கிராமத்தில் அண்மையில் பிறந்துள்ள இக்கன்றுக்குட்டிக்கு இரண்டு கால்கள் மட்டுமே உள்ளது. இதற்கு முன்னங்கால்கள் இரண்டையும் செயற்கை முறையில் பொருத்துவதற்கு வைத்தியர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.




# பல நூறு ஐ.நா. படையினர் புரட்சியாளர்களால் கைது

*(05.05.2000)*

ஆபிரிக்காவின் மேற்குப் பிராந்திய நாடான சியேராலியோனில் புரட்சிகர ஐக்கிய அமைப்பு எனப்படும் தீவிரவாத அமைப்பினால் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த ஐ.நா அமைதிப்படையினர் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். நாட்டின் பல பாகங்களிலும் கடமையில் ஈடுபட்டிருந்த ஐ.நா. அமைதிப் படையினர், கடந்த வார ஆரம்பத்தில் இருந்து இத் தீவிரவாத அமைப்பினால் சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் ஞாயிற்றுக்கிழமை வரை 318 படையினர் இவர்களால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. இதில் 23 இந்திய இராணுவத்தினரும், 218 சாம்பிய இராணுவத்தினரும் அடங்குகின்றனர். சியேரா லியோனின் கிழக்குப் பகுதியில் மகேனி எனும் கிராமப் பகுதியில் 39 பேருடன் சென்ற உலங்கு வானூர்தியொன்று கடந்த திங்களன்று தீவிரவாதிகளால் கைப்பற்றப்பட்டது. பின்னர் அவ் உலங்குவானூர்தியின் விமானிகளான நான்கு ரஷ்யர்களும் 2 பயணிகளும் விடுவிக்கப்பட்டனர்.

சியேரா லியோனில் சடுதியாக ஏற்பட்டுள்ள இந்த நிலைமைகளை ஐ.நா சபை பொதுச் செயலர் வன்மையாகக் கண்டித்துள்ளதுடன், உடனடியாக எல்லா அமைதிப் படையினரையும் விடுதலை செய்யுமாறு தீவிரவாத அமைப்பினரிடம் கோரிக்கை விடுத்தார். அதேவேளை பிரித்தானிய உயர்மட்டக் குழுவொன்றும் ஐ.நாவின் குழுவொன்றும் சியேராலியோன் தலைநகர் பிரீடவுனுக்குச் சென்று நிலைமைகளை அவதானித்து வருவதுடன் அடுத்தகட்ட நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்ந்து வருகின்றனர்.

# பிலிப்பினில் பாரிய குண்டுவெடிப்புக்கள் யுத்த நிறுத்தத்தின் மத்தியில்

*(06.05.2000)*

பிலிப்பினின் தென்பகுதி மின்டாவோவில் சுரிலாவோவில் இடம்பெற்ற பாரிய குண்டுவெடிப்புக்களில் நான்குபேர் கொல்லப்பட்டு 25 பேர் வரை படுகாயமடைந்துள்ளனர். மின்டாவோவில் சாம்பங்கோ, சான்டோஸ், டாவோ போன்ற நகரங்களில் சுமார் 10 இற்கும் மேற்பட்ட குண்டுகள் வெடித்துள்ளன. இதற்கிடையே தீவின் பாரிய கெரில்லா இராணுவமான Mila எனப்படும் மோரோ இஸ்லாமிய விடுதலை இராணுவம் சனிக்கிழமை முதல் 48 மணி நேர யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளது. ஆனால் அபூ சய்யால் எனப்படும் இஸ்லாமிய அமைப்பினால் கடத்தப்பட்டுள்ள சுமார் 21 உல்லாசப் பயணிகளுக்கும் என்ன நடந்தது என்பது மர்மமாகவே உள்ளது. இவ் உல்லாசப்பயணிகள் மலேசியாவில் உல்லாசப்பகுதி ஒன்றிலிருந்து மேற்கண்ட தீவிரவாத அமைப்பினால் கடந்த 23ம் திகதி கடத்தப்பட்டனர்.

மோரோ இஸ்லாமிய அமைப்பு யுத்த நிறுத்தத்தை அறிவித்து கடந்தவாரம் பேச்சுக்கள் முறிந்த நிலையில் இடைப்பட்ட நாட்களில் மாத்திரம் 40 பேர் வரை குண்டுத்தாக்குதல்களினால் கொல்லப்பட்டனர். மீண்டும் அரசின் முயற்சியை அடுத்து 48 மணி நேரம் தனது யுத்த நிறுத்தத்தை மீண்டும் அவ் அமைப்பு அறிவித்துள்ளது. இதற்கிடையே தம்மால் பயணக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள உல்லாசப் பயணிகளை மீட்பதற்கு பிலிப்பின் அரசு தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட முயலுமானால் பயணக் கைதிகளை தாம் சுட்டுக்கொல்லப்போவதாக அபூ சய்யாட் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

# கணினிக் கோப்புகளை அழிக்கும் `I love you'

*(06.05.2000)*

உலகின் பல மில்லியன் கணினிகள் கடந்த சில நாட்களாக `I love you' எனும் வைரசின் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளன. கணினிக் கோப்புக்களை அழிக்கும், குழப்பும் இவ்வித வைரஸ் எனப்படும் கட்டளைகள் தகவல் வலையினூடாக இப்போது பரவத் தொடங்கியுள்ளன. அண்மையில் மெலிசா எனும் பெயரில் உலவிய வைரசினால் உலகின் பல மில்லியன் கணினிகள் தங்களது கோப்புக்களை இழந்தன. இறுதி நாட்களில் அந்த வைரசின் பரவலுக்குக் காரணமான அமெரிக்க இளைஞனை அமெரிக்க புலனாய்வுப் பிரிவினர் கைது செய்தனர்.

இப்போது புதிதாக பரவவிடப்பட்டுள்ள 'I love you' எனப்படும் வைரஸ் அமெரிக்க பென்டகன் பாதுகாப்பு நிலையத்தின் அதி உயர் கணினிகளையும் தாக்கியுள்ளன. அத்துடன் ஐரோப்பிய நாடுகளில் பல அரச தனியார் நிறுவன கணினிகளில் தாக்கியதால் பொதுச் சேவைகள் தடையாகின. பிரித்தானிய பாராளுமன்ற கணினிகளும் இதனால் பாதிக்கப்பட்டன.

இவ் வைரசைக் கண்டுபிடித்தவர் பிலிப்பினில் இருப்பதாக பிரித்தானிய அதிகாரிகள் கூறினாலும் மெலிசா வைரசைக் கண்டுபிடிக்க உதவிய சுவீடன் கணினி ஆய்வாளர் இப்புதிய வைரஸ் ஜேர்மனியில் இருந்து பரவ விடப்பட்டுள்ளதாயும் பிலிப்பினில் இருந்து உலகமெங்கும் பரவியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இதற்கிடையே 'I love you' வைரசின் பிரதிகளாக பல புதிய வைரசுக்கள் உலகெங்கும் நேற்று சனி முதல் பரவ ஆரம்பித்துள்ளன.

# தென் ஆபிரிக்காவின் ம்பெக்கி சிம்பாப்வே விஜயம்

*(05.05.2000)*

தென் ஆபிரிக்க ஜனாதிபதி தபோ ம்பெக்கி உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டு சிம்பாப்வே வந்து சேர்ந்தார். அங்கு அதிபர் ரொபேர்ட் முகாபேயுடன் பல மணி நேர பேச்சுக்களில் ஈடுபட்டார். சிம்பாப்வேயில் தற்போது தொடர்ந்து வரும் நிலப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரும் திட்டங்களையும் ம்பெக்கி வெளியிட்டார் என்றும் சொல்லப்படுகிறது.

ரொக்சியா பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் அடைந்ததன்பின் சிம்பாப்வே எனப் பெயர் மாற்றம் அடைந்தபோதிலும் சுமார் 4000 வெள்ளையினத்தவரே அந்நாட்டின் பெரும் பகுதி நிலத்திற்கு உரிமையாளராக இருந்தனர். பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக போராடிய கறுப்பு இன விடுதலைப் போராளிகள் இப்போது அந்த நிலத்திற்கு உரிமை வேண்டும் என போராட்டம் நடத்துகின்றனர். வெள்ளையர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தை தாம் மீண்டும் மீட்க போராடுகிறோம் என அவர்கள் தரப்பில் கூறப்பட்டு வருவதை அதிபர் முகாபேயும் ஏற்றுக்கொண்டுள்ளார். தாராளமான நிலப்பகுதியை கறுப்பு இனத்தவர் தற்போது தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ள நிலையில் வெள்ளையினத்தவரும் திருப்பித் தாக்கி வருகின்றனர். எதிர்க்கட்சிகள் வெள்ளையினத்தவருக்கு ஆதரவாக இருக்கும் அதேவேளை உண்மையான நிலப்பங்கீடு நடத்தப்பட்டால் அதற்கு தாம் ஆதரவளிப்போம் எனக் கூறியுள்ளன.

தென்னாபிரிக்காவின் புதிய அதிபர் பிராந்திய பொருளாதார நலன்களைக் கருத்திற்கொண்டு இப்பிரச்சினை உடன் தீர்க்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ளார்.

# ரஷ்ய அதிபராக விளாடிமீர் புடீன் பதவியேற்றார்

*(07.05.2000)*

ரஷ்யாவின் மக்கள் வாக்கெடுப்பின் மூலம் தெரிவாகிய இரண்டாவது ஜனாதிபதியாக விளாடிமீர் புடீன் ஞாயிறன்று பதவியேற்றார். கிரெம்ளின் மாளிகையில் இடம்பெற்ற இப் பதவியேற்பின்போது பல அரசியல் தலைவர்களும், உயர் அதிகாரிகளும் கூடியிருந்தனர்.



பதவியேற்பு வைபவத்தின் பின் உரையாற்றிய அவர் ரஷ்யாவில் உத்தியோக பூர்வ பதவி மாற்றம் என்பது சாதாரணமானது. ரஷ்யாவின் தனித்துவத்தை நிலைநாட்ட தான் பாடுபடுவதாயும், மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் என்றும், உள்ளூர் பொருளாதார சிக்கல்களைத் தீர்க்க உறுதியான நடவடிக்கை அறிவிக்க உள்ளதாயும் கூறினார். இம் மாத இறுதிக்குள் தனது புதிய அமைச்சரவையை புடீன் அறிவிப்பார் என்று நம்பப்படுகிறது.

தற்போதைய உதவிப் பிரதமராக உள்ள மிக்கயில் கசியாநோவ் பிரதமராவார் என்றும் பல புதிய முகங்கள் அமைச்சரவையில் இடம்பெறலாம் என்றும் கூறியுள்ள அரச அதிகாரியொருவர் தற்போது பதவியில் உள்ள ஒரு சில அமைச்சர்கள் தொடர்ந்தும் பதவி வகிப்பார்கள் என்றும் தெரிவித்தார்.

தமிழ்ச்சோலை
பாரிஸ்—17
பிரெஞ்சு தமிழர் சங்கம்
பாரிஸ் - 17

எதிர்வரும் 14.05.2000 நடைபெறவிருந்த எமது பாடசாலை ஆண்டுவிழா தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது.

மேலதிக தொடர்புகளுக்கு:
06 84 89 00 64

— நிர்வாகம்

# எகுட்பராக் - அரபாத் சந்திப்பு சமாதான முட்டுக் கட்டைகளை நீக்க முயற்சி

*(06.05.2000)*

பாலஸ்தீன அதிகார சபையின் அதிபர் யாசீர் அரபாத்தும் இஸ்ரேலிய பிரதமர் எகுட்பராக்கும் ஞாயிறன்று இரவு சந்தித்துக்கொள்கின்றனர். இதன்போது தொடரும் சமாதான நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகளை நீக்கி ஒப்பந்தம் ஒன்றினை கைச்சாத்திடுவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்துவார்கள் என நம்பப்படுகின்றது.

இஸ்ரேலிய, பாலஸ்தீன குழுவினர் கடந்தவாரம் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தனர். ஆனால் இஸ்ரேலிய குழுவினர் எதிர்கால பாலஸ்தீனத்தின் வரைபடமொன்றினை சமர்ப்பித்ததை அடுத்து எழுந்த முரண்பாடுகளால் பாலஸ்தீன குழுவினர் புதனன்று வெளிநடப்பு செய்தனர். இப்பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது குறித்த பேச்சுக்களை நடத்த ரமல்லா நகரிலுள்ள பாலஸ்தீன அதிகார சபையின் தலைவர் அரபாத்தின் அலுவலகத்தில் சனியன்று இஸ்ரேலிய பாலஸ்தீன அதிகாரிகள் அலுவலகத்தில் சனியன்று இஸ்ரேலிய பாலஸ்தீன அதிகாரிகள் சந்தித்து அரபாத் - பராக் சந்திப்புக்காகக் கோரினர். இம்முறை இரு தலைவர்களும் சந்திக்கும் போது, அமெரிக்க விசேட தூதுவர் டெனிஸ் ரொஸ், மற்றும் இஸ்ரேலுக்கான அமெரிக்க தூதுவர் மார்ட்டின் இன்டிக் போன்றோர்களும் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வார்கள்.

# செச்சினியா ரஷ்யாவின் நேரடி ஆட்சியில் இருக்கும்

(05.05.2000)

செச்சினியாவை ஆட்சிசெய்ய சரியான ஒருவர் கிடைக்கும் வரை அப் பகுதியை ரஷ்யா தனது நேரடியான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் என்று ரஷ்ய உயர் அதிகாரி ஒருவர் வெள்ளியன்று தெரிவித்தார். 1991ம் ஆண்டு முதல் தனது கட்டுப்பாட்டில் இல்லாதிருந்த செச்சினியாவின் பெரும் பகுதியை ரஷ்யப்படைகள் ஒருமாத கால யுத்தத்தின் மூலம் கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வந்துள்ளனர். செச்சினியாவின் பிரிவினைவாத ஜனாதிபதியான அஸ்லான் மஸ்காடோல் தனது படையினருடன் தெற்கு மலைப்பகுதிநோக்கி இடம்பெயர்ந்துள்ளார். இங்கு இன்னமும் பலத்த மோதல்கள் இடம்பெற்றுவருகின்றன.

இப்படியான நிலையில் இப்போது ரஷ்யா அங்கு மத்திய அரசின் ஆதரவுடனான இடைக்கால நிர்வாகம் ஒன்றினை அமைத்துள்ளது. ஆனால் இந்த நிர்வாகத்தில் ரஷ்ய அதிபர் விளாடி மீர் புருன் திருப்தியடையவில்லை என்றும் திறமைமிக்க ஒருவர் தெரிவாகும்வரை தனது நேரடி கண்காணிப்பில் செச்சினியா நிர்வகிக்கப்பட வேண்டும் என்றும் அவர் விரும்புவதாக உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

செச்சினியாவின் தற்போதைய ஜனாதிபதி அஸ்லான் மஸ்காடோவ் ரஷ்யா யுத்தத்தை நிறுத்தி சமாதான முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்றும் தனது படையினருக்கு யுத்த நிறுத்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றும் கூறியிருந்தார். ஆனால் அவரது கூற்றை ஏற்றுக்கொள்ளாத ரஷ்ய அதிகாரிகள் மஸ்காடோவில் கட்டுப்பாட்டில் படைகள் இல்லை என்றும் அவரால் யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்பாடு செய்ய முடியாது என்றும் தெரிவித்துள்ளனர்.

# ஈரானிய இரண்டாம் கட்டத் தேர்தலில் சீர்திருத்தவாதிகள் வெற்றி

(06.05.2000)

ஈரானில் இவ்வார இறுதியில் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் இரண்டாம் கட்டத் தேர்தலின் முடிவுகள் நாட்டின் முற்போக்கு சீர்திருத்தவாதிகள் வெற்றிபெற்றுள்ளனர். இத் தேர்தலில் இதுவரை வெளியாகியுள்ள முடிவுகளில் 35 சீர்திருத்தவாதிகள் வெற்றிபெற்றுள்ளனர். பதினொரு இடங்களில் பழமைவாதிகளும், பத்து இடங்களில் நடுநிலைமைவாதிகளும் வெற்றி பெற்றுள்ளனர்.

ஈரானின் பாதுகாவல் அமைப்பின் பழமைவாதிகளே இன்னும் அதிகாரத்தில் உள்ளனர். பெப்ரவரி மாதம் வெளியாகிய தேர்தல் முடிவுகளில் முற்போக்குவாதிகளின் பத்துக்கு மேற்பட்ட வெற்றிகளைச் செல்லாது என அவ் அமைப்பு அறிவித்திருந்தது.

மஜ்லிஸ் என அழைக்கப்படும் பாராளுமன்றத்தில் உள்ள 290 ஆசனங்களில் 70 விகிதமான இடங்களை முற்போக்குவாதிகள் வெற்றிபெற்றுள்ளனர். வெள்ளியன்று 66 இடங்களுக்கான இரண்டாம் கட்ட தேர்தல் இடம்பெற்றுள்ளன. இதற்கு ஆறு பெண்கள் உட்பட 132 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். தலைநகர் தெஹ்ரானில் உள்ள 30 இடங்களில் 29 இடங்களை சீர்திருத்தவாதிகள் வெற்றிபெற்றுள்ளனர்.

1979ம் ஆண்டு முதல் ஈரானை ஆண்டுவரும் பழமைவாதிகள், இளைஞர்கள் புதிய ஜனாதிபதி கட்டாமிக்கு வழங்கிவரும் மகத்தான ஆதரவுமூலம் முதன் முறையாக படுதோல்வியடைந்துள்ள அதேவேளை இதுவரை காப்பாற்றப்பட்டுள்ள பழமை வாதம் கூட அழிக்கப்பட்டுவிடுமோ என்று அச்சமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்கா நஷ்ட ஈடு வழங்க வேண்டும்

## - கியூபா நீதிமன்றம் -

(06.05.2000)

அமெரிக்க அரசு கடந்த நாற்பது வருடங்களாக கியூபாவின் மேல் பிரயோகித்துவரும் பொருளாதாரத் தடைகளின் விளைவாகவும், கடந்த வருடங்களில் அவ்வரசின் தூண்டுதலுடன் மேற்கொள்ளப்பட்ட கியூப தலைவர்களின் கொலை முயற்சிகளின் விளைவாகவும், அமெரிக்க தனிப்பட்ட நிறுவனங்களின் கியூப எதிர்ப்பு நடவடிக்கைகளின் விளைவாகவும் ஏற்பட்டுள்ள இழப்புக்களுக்கு அமெரிக்கா நஷ்ட ஈடு வழங்கவேண்டும் என்று கியூபாவின் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தலைநகர் ஹவானாவில் கடந்த சில மாதங்களாக இடம்பெற்றுவந்த இவ் வழக்கு விசாரணையில் அமெரிக்காவின் தடைகளால் பாதிக்கப்பட்ட பல அரசியல் அதிகாரிகள், நிறுவனங்களின் தலைவர்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் சாட்சியமளித்தனர். இதன்பின்பு நீதிமன்றத்தின் ஐந்து நீதியரசர்களும் தங்களது தீர்ப்பில் அமெரிக்கா, கியூபா சுதந்திரம் அடைந்ததன்பின் கடந்த நாற்பது வருடகாலமாக பலவகையான பொருளாதாரத் தடைகளை மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் கியூப அரசியல் தலைவர்கள் குறிப்பாக பிடஸ் காஸ்ட்ரோவை கொலை செய்ய பல முயற்சிகளை அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறை மேற்கொண்டது. இவைகளுக்காக 12 பில்லியன் அமெரிக்க டொலர்களை அது கியூபாவுக்கு நஷ்டஈடாக வழங்கவேண்டும் என்று தீர்ப்பளித்தனர். கடந்த வருடமும் இது போன்று அமெரிக்க திட்டமிடல்களால் கியூபாவில் ஏற்பட்ட மரணங்களுக்கும் படுகாயங்களுக்குமாக 181.1 பில்லியன் டொலர்களை நஷ்டஈடாக செலுத்தப்பட வேண்டும் என்ற தீர்ப்பும் வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# புதிய தாக்குதல்களை நடத்துவதில்லை என இஸ்ரேல் தீர்மானம்

(06.05.2000)

லெபனானின் ஹிஸ்புல்லா தீவிரவாதிகளுக்கு எதிராக புதிய தாக்குதல்கள் எதனையும் தமது படைகள் நடத்தாது என இஸ்ரேல் அறிவித்துள்ளது. இதனால் மேலும் லெபனானில் இருந்து ராக்கெட் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டால் தங்களை பாதுகாத்துக்கொள்ள அப்பகுதி மக்களை பாதுகாப்பு அரன் பகுதிகளை நோக்கி இடம்பெயரும்படி பாதுகாப்புப் படையினர் அறிவித்துள்ளனர்.

ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் கடந்த வெள்ளியன்று ஷலோமி எல்லைப்புற நகரை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டதையடுத்து இஸ்ரேலிய விமானப்படை லெபனானில் பல பகுதிகளின்மேலும் தாக்குதல்களை மேற்கொண்டது. இத் தாக்குதல்களில் இரண்டு மின்சார உற்பத்தி மையங்கள், மற்றும் லெபனான் டமாஸ்காஸ் நெடுஞ்சாலை, . ஹிஸ்புல்லா அமைப்பின் ஆயுத களஞ்சியம் என பல இடங்கள் குண்டுவீச்சுக்கு இலக்காகின. இஸ்ரேல் தாக்குதல்களை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று அரபு லீக்கும், பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளும் கேட்டுக்கொண்டன. எதிர்கால அமைதி நடவடிக்கைகளையும் காரணமாகக்கொண்டும் சிரியாவின் சமாதான நடவடிக்கைகளுக்கு வழிவிட்டுத் தமது தாக்குதல்களை நிறுத்திக் கொள்வதாக இஸ்ரேலிய பிரதமர் எகுட்பராக் தெரிவித்துள்ளார்.

ஹிஸ்புல்லாவின் தாக்குதல்களால் படையினர் உட்பட பல பொதுமக்கள் காயமடைந்துள்ளனர் என்றும் இஸ்ரேலின் தாக்குதலினாலும் பல பொதுமக்கள் காயமடைந்துள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இங்கிலாந்தில் உள்ளூராட்சித் தேர்தல்களில் தொழிற்கட்சிக்கு பலத்த பின்னடைவு

## லண்டன் நகர பிதாவாக இடதுசாரி வேட்பாளர் தெரிவு

(05.05.2000)

இங்கிலாந்தின் பல பகுதிகளிலும் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் பிரதமர் டொனி பிளேயர் தலைமையிலான தொழிற்கட்சி பலத்த பின்னடைவுகளைச் சந்தித்துள்ளது. சுமார் 15 உள்ளூராட்சி சபைகளில் பழமைவாத கான்சர்வேட்டிவ் கட்சி தோல்வியடைந்துள்ளது.

இதற்கிடையே லண்டன் நகர சபையின் புதிய பிதாவாக தொழிற்கட்சியில் இருந்து விலக்கப்பட்ட தீவிர இடதுசாரியான சுயேட்சை வேட்பாளர் கென். லிவிங்ஸ்டன் வெற்றிபெற்றுள்ளார். இவர் 57.92 விகித வாக்குகளையும், அடுத்ததாக வந்த ஸ்டீவ் நொரிஸ் 42.08 விகித வாக்குகளையும் பெற்றனர். தொழிற்கட்சியின் பிராங்க் டொப்சன் மூன்றாவதாக 1278 வாக்குகளைப் பெற்று முதல் சுற்றிலேயே வெளியேறினார்.

மூன்று வருடங்களுக்கு முன் அமோக ஆதரவுடன் பதவியேற்ற டொனிபிளேயர் தலைமையிலான தொழிற்கட்சி சந்தித்துள்ள படுமோசமான பின்னடைவு இது என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். சுமார் 600 ஆசனங்களை அது கான்சர்வேட்டிவ் கட்சியிடம் இழந்ததானது பிளேயரின் கொள்கை மாற்றங்களின் விளைவே என்றும் அடுத்தவருடம் இடம்பெற இருந்த பொதுத்தேர்தல்கூட சில வேளைகளில் ஒத்திவைக்கப்படலாம் என்ற கருத்தும் வெளியாகியுள்ளது.

# அமெரிக்க உளவாளி ஆப்கானிஸ்தானில் கைது


(05.05.2000)

ஆப்கானிஸ்தானில் கைது செய்யப்பட்ட ஒரு அரபுப் பிரசைதான் அமெரிக்காவினால் ஒசாமா பின் லாடெனைக் கண்டுபிடிக்கும் வேலைக்கு அமர்த்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். இவரைக் கைதுசெய்த தலிபான் பாதுகாப்புப் பிரிவினர் அமெரிக்காவிற்காகவும் இஸ்ரேலுக்காகவும் உளவு வேலைகளில் ஈடுபட்ட மற்றொருவரையும் தாம் கைது செய்துள்ளதாகக் கூறியுள்ளனர்.

தலிபானின் வெளியுறவு அமைச்சரான வாகில் அகமத் முட்டாவாகில் தமது படையினர் ஒரு சிரியப்பிரசையையும் ஒரு ஈராக்கிய பிரசையையும் உளவு வேலைகளில் ஈடுபட்டதற்காக கைது செய்துள்ளதாகக் கூறியுள்ளார். அதேவேளை மேலும் ஒரு அமெரிக்க பிரசையையும் தலிபான்கள் கைது செய்து வைத்துள்ளதாக வெளியாகியுள்ள செய்திகளை அவர் மறுக்கவோ அல்லது ஆமோதிக்கவோ இல்லை.

தலிபான்களால் கைது செய்யப்பட்ட இரு அரபுநாட்டவர்களில் ஒருவரான 22 வயதுடைய அப்துல் ரஹிம் ஜங்கோ எலுமசிரியர் தான் அபுதாபியில் ஒரு விருந்துபசார வைபவமொன்றில் மது அருந்திக்கொண்டிருந்ததை இரு அமெரிக்கர்கள் புகைப்படம் எடுத்ததாயும் பாரம்பரிய கொள்கைகளைக்கொண்ட தனது தந்தையிடம் அப்படத்தைக் காட்டப்போவதாகவும் தன்னைப் பயமுறுத்தியே ஆப்கானிஸ்தானுக்கு எதிராக வேலை செய்ய வைத்ததாக கூறினார். தான் உயிர்வாழ தலிபானியர்கள் அனுமதிப்பார்களேயானால் தான் செய்த பாவத்திற்கு 20 வருடங்கள் இஸ்லாமிய தொண்டு செய்ய தயாராய் இருப்பதாயும் கூறினார். இதற்கிடையே ஐக்கிய அரபு எமிரேட்சில் தொலைக்காட்சி நிலையத்துக்காக வேலை செய்யும் அமெரிக்கர்கள் மீண்டும் திரும்பி வருந்துவிட்டனரா என்பதை அமெரிக்கா ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


உலக விடயங்கள் பலவற்றைத் தாங்கி வரும் அறிவுக்களஞ்சியம்




யுனெஸ்கோ கூரியர்

உலகின் பிரபல எழுத்தாளர்களின் உருவாக்கங்களின் தொகுப்பு


உங்கள் தொடர்புகளுக்கு:
ஈழமுரசு
22 Rue Perdonnet,
75010 Paris.
Tel: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64



# புதிய நூற்றாண்டின்

# மாபெரும்

# தமிழர் விளையாட்டு விழா



**பிரசித்தி பெற்ற Dulwich கல்லூரியின் இயற்கை எழில்மிகு மைதானத்தில்**
(பிரித்தானிய காவல்துறையினரின் பாதுகாப்புடன்) **5வது வருடமாக நடைபெற உள்ளது.**

*புதிய நூற்றாண்டில் சிறப்பாக தாராளமான அளவில், விதம் விதமான தரமான சுவைமிகு தமிழீழ உணவுவகைகள்....*

33க்கு மேற்பட்ட தமிழீழ பழைய மாணவர் சங்கங்கள் கலந்துகொள்ளும் துடுப்பெடுத்தாட்டம்,
வலைப்பந்தாட்ட போட்டிகள்..... முதன் முறையாக அறிமுகப்படுத்தப்படும்.

சிறுவர்களுக்கான நீச்சல் போட்டிகள் - வயது (6 -14)

பெரியவர்களுக்கான கரப்பந்தாட்டப்போட்டி (போதிய அளவு விண்ணப்பம் கிடைத்தால் மட்டும்)

சிறுவர்களுக்கான (TETHERED BALLOON) பறப்புகள்

SAM THE SNAKE (28 Foot Long Land Train) + JUNGLE TERRAIN + HUGE BOUNCY CASTLE

தமிழீழ வாழ்க்கை வடிவங்களைச் சித்தரிக்கும் கண்காட்சிகள்

நல்வாய்ப்புச் சீட்டிழுப்பு பரிசு - Brand New BMW 316 i SE Compact Car with many extras கண்கவர் வாணவேடிக்கைகள் அனைத்தும் பாரிய அளவில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. மண்ணின் நினைவுகளையும், உணர்வுகளையும் பகிர்ந்திட திரண்டுவாரீர்! கூடிக்களிப்போம்!!

நுழைவு £3 (10 வயதுக்குட்பட்டோர் இலவசம்)

வாகனத்தரிப்பு வசதிகள் போதிய அளவில் உண்டு. கட்டணம் £3/ நுழைவு

இவ்வருட தமிழர் விளையாட்டு விழாவில் கலந்துகொள்ளும் மக்களின் பாதுகாப்பையும், அசம்பாவிதங்கள் எதுவுமின்றி நிகழ்வு நடைபெறுவதையும் முக்கிய கவனத்தில் எடுத்து, பிரித்தானிய காவல்துறையினராலும் (POLICE) ஐக்கிய தமிழர் அமைப்பின் பாதுகாப்புப் பிரிவு பணியாளர்களாலும் (UTO SECURITY) விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, ஆகையால் இவ்வருட நிகழ்வில் கலந்துகொள்ளும் பொதுமக்கள் காவல்துறையினரால் சோதனைக்குட்படுத்தப்படுவதுடன், வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்படும் என்பதையும் அறியத்தருகிறோம். நிகழ்வில் கலந்துகொள்ளும் மக்களின் நலன் கருதியும், நிகழ்வு சிறப்பாக நிறைவேறும் பொருட்டும் மேற்கொள்ளப்படும் இவ் விசேட பாதுகாப்பு ஒழுங்குகளுக்கு அனைவரையும் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

மேலதிக விபரங்கட்கு: **ஐக்கிய தமிழர் அமைப்பு** (UTO)
Tel: 020 - 7403 4554, 0956 - 314 370, 0956 - 329 660)

Pub. Gra.

ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# மீண்டும் ஒரு வாய்ப்பு

கிறிஸ்து பிறப்பதற்கு முன்னதான நூற்றாண்டுகளில் 'சுன்சு' என்ற போரியல் வல்லுநர் எழுதிய 'யுத்தக் கலை' என்ற நூலில் குறிப்பிட்ட சில விடயங்களை இப்போது பார்ப்பது உசிதமானது.

எதிரிக்கு ஒருபோதும் மன்னிப்பு அளிக்காதே. எதிரி உன்னை அழிக்கக் காத்திருக்கின்றான், அவனை ஒழிக்கும்போரில் நீ அரைவாசியில் நின்றுவிடக்கூடாது. நீ இரக்கம் காட்டினால் எதிரிகள் பலம் பெற்று உன்னைப் பழிவாங்கிவிடுவார்கள். அவர்களை ஒருபோதும் நம்பாதே. தக்க காலம் வரட்டும் என அவர்கள் காத்திருக்கின்றார்கள் என அந் நூலில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

அந்த நூல் எழுதப்பட்டு நூற்றாண்டுகள் பல கடந்துவிட்டன. அதன்படியே எதிரிக்குக் கொஞ்சம் இரக்கம் காட்டுவது உலகில் பொதுவாக நடக்காத ஒரு விடயம். ஆனால் தமிழ்த் தேசியம் ஆனையிறவுத் தளத்தின் மீதான வெற்றியைப் பெற்றிருந்தாலும் எக்காளத்தொனி எதுவும் இல்லாமல் சிறீலங்காவிற்கு ஒரு புதிய பாதையைக் காட்டியுள்ளது. சிறீலங்கா தனது இராணுவ இயந்திரத்தைக் கொண்டு தமிழர் தாயகத்தில் விதைத்த துன்பங்களை வார்த்தைகளில் வடிக்க முடியாதுவிடினும், அவ்வாறான கொடுமைகளைப் புரிந்த அந்த இராணுவ இயந்திரத்திற்குத் தமிழர் தாயகம் மீண்டும் ஒரு வாய்ப்பினை அளித்துள்ளது.

சிறீலங்காவின் இராணுவ இயந்திரம் யாழ்.குடா நாட்டிற்குத் தரைப்பாதையொன்றைத் திறக்கப்போவதாக ஆரவாரப்பட்டுக் கொண்டு நகர்ந்தபோதே, எமது தேசியத் தலைவர் தீர்க்க தரிசனம் ஒன்றைச் சொன்னார். தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் இந்தப் போரில் வன்னியில் சிங்கள இளைஞர்களின் இரத்தம் ஆறாகப் பெருகப்போகின்றது என்பதே அத் தீர்க்கதரிசனம். ஆயினும் தமிழர் தாயகத்தின் இந்த ஆதங்கம் சிங்களதேசத்தின் காதுகளில் 'புறக் குடத்தில் வார்த்த நீருக்கு' ஒப்பானது. தேசியத் தலைவரது தீர்க்க தரிசனம் பலித்துக்கொண்டது. இன்று ஆனையிறவு வீழ்ச்சிக்குப் பின்னரும் சிறீலங்கா அதன் ஆக்கிரமிப்பு வெறியை மாற்றிக்கொள்ளாத போதிலும் யாழ்.குடாவில் நிலைகொண்டுள்ள அத் தேசத்தின் படையினருக்கு அவர்கள் கௌரவமாக வெளியேற தமிழர் தாயகம் ஒரு வாய்ப்பினை அளித்துள்ளது. இவ்வாறான ஒரு நிலையை உலகில் நடைபெற்ற எத்தனை விடுதலைப் போராட்டங்கள் ஏற்படுத்தின என்பது ஒரு கேள்வியாயினும் தமிழ்த் தேசியம் தான் கொண்டிருக்கும் பண்பாட்டிற்கும் விழுமியத்திற்கும் ஏற்ப, சிங்கள தேசத்திற்கு இந்த வாய்ப்பினை அளித்துள்ளது. ஆனால் வழமைபோலவே சிறீலங்காவின் பௌத்த பேரினவாதம் தமிழ்த் தேசியம் அளித்த இந்த வாய்ப்பினை எகத்தாளத்தோடு எள்ளி நகையாட முனைந்துள்ளது. கடைசிச் சிப்பாய் இருக்கும்வரை யாழ்ப்பாணத்தில் போரிடுவோம் என, விழுந்தவன் மீசையில் மண்படாத கதையான வீறாப்புக்களும் சிங்களத் தரப்பிலிருந்து எழுந்துள்ளன.

இவ்வேளை தமிழ்த் தேசியம் அளித்துள்ள இந்த வாய்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஒரு விடயத்தை சிறீலங்கா தேசம் உணர்ந்து கொள்ளவேண்டும். முன்வைக்கப்பட்ட இந்த வாய்ப்பு சிறீலங்காவினால் நிராகரிக்கப்படுமானால் தமிழ்த் தேசியம் யாழ்.குடா மீதான தனது போரை மீண்டும் தொடரும் என்பதே சுட்டிக்காட்டப்பட்டுள்ள அவ் விடயமாகும். பந்து இப்போது சிறீலங்காவின் தரப்பிலிருக்கின்றது. அது எவ்வாறு அடிப்பது என்பதை அத் தேசமே முடிவுசெய்து கொள்ளலாம்.




# சிறீலங்கா: வருக இஸ்ரேல்!

## பார்வை

இஸ்ரேலுடன் சிறீலங்காவின் இராஜதந்திர உறவுகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. சிறீலங்கா இஸ்ரேலில் இருந்து ஆயுத தளவாடங்களை எதிர்பார்த்துக் காத்திருப்பதாக லண்டனிலிருந்து வெளியாகும் ரெலிகிராப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இந்தியாவில் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்காகக் தங்கியிருந்த கதிர்காமர், டெல்லியில் உள்ள இஸ்ரேலிய தூதரகம் ஊடாக இவ்வுறவைத் தான்தான் புதுப்பித்ததாகச் செய்திகளைக் கசியவிட்டுள்ளார். இஸ்ரேலிடம் இருந்து நவீன தொழில்நுட்பத் தரம் மிக்க ஆயுதங்களை வாங்கினால் போரை வென்றுவிடலாம் என்ற கணிப்புடன் இஸ்ரேலை சிங்களம் துணைக்கழைத்துள்ளது.

அமெரிக்க அரசு இப் புதுப்பித்தலை வரவேற்றுள்ளது. 1972ம் ஆண்டும் 1990ம் ஆண்டும் இருதடவைகள் சிறீலங்காவை விட்டு வெளியேற்றப்பட்ட இஸ்ரேல் மீள கொழும்பால் அரவணைக்கப்படுவதை தாம் வரவேற்பதாக அமெரிக்கப் பேச்சாளர் கூறினார். அப்போது ஆயுதம் வாங்குவதற்காகத் தானே இவ்வாறு உறவுகள் புதுப்பிக்கப்படுகின்றன என செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர். அப்படியா! என மழுப்பலாகப் பதிலளித்து, விடயத்தை மறைத்துவிட்டார் அமெரிக்கப் பேச்சாளர்.

1994 தொடக்கம் அமெரிக்காவின் புகழ் பெற்ற SEAL அணி ஒன்று, அமெரிக்க விமானப் படையின் 6வது சிறப்புப் படையினர், மனோவியற் பயிற்சிப் பிரிவினர் ஆகியோரால் பயிற்றுவிக்கப்பட்ட சிறீலங்காப் படையினர் ஆனையிறவில் ஆயுதங்களைப் போட்டுவிட்டு ஓடிய ஓட்டத்தை அமெரிக்கா அறியும். தற்போதும் சுமார் 20 அமெரிக்க இராணுவத்தினர் சிறீலங்காவுக்கு பயிற்சிகளை அளிப்பதாக Global intelligence update எனும் ஏடு கூறுகின்றது.

இத்தகைய சூழலில் இஸ்ரேலிய போர்நுட்பம் மட்டும் சிங்களத்தைக் காப்பாற்றும் எனச் சிறீலங்கா அனுதாபிகள் நினைப்பது வேடிக்கையானது. கடந்த பல வருடங்களாக இஸ்ரேல் பீரங்கிப்படகுகளையும், யுத்த விமானங்களையும் சிறீலங்காவுக்கு வழங்கியே வந்துள்ளது. இதனை ஜெருசலம் போஸ்ட் என்ற செய்தி ஏடு தனது மே 5ம் திகதியிடப்பட்ட செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த ஐந்து வருடங்களாகவே இஸ்ரேலுடனான இராஜதந்திர உறவைப் புதுப்பிக்க சந்திரிகா முயன்று வந்துள்ளார். ஆனால் அரபு நாடுகளிடம் இருந்து பல வகை உதவிகளைப் பெறும் சிறீலங்காவால் உடனடியாக, செயற்பட முடியவில்லை. ஈராக்கிற்கு தேயிலையை விற்று மில்லியன்கள் சம்பாதிக்கும் அரசுக்கு சிறந்த காரணம் ஒன்று தேவைப்பட்டது. யாழ் மீட்புக்கான தமிழர் யுத்தத்தைக் காரணம் காட்டி சந்திரிகா மற்றுமொரு அமெரிக்க சார்பு நகர்வை மேற்கொண்டுள்ளார்.

இஸ்ரேல் சிங்களத்திற்கு உயர் தொழில் நுட்ப போராயுதங்களைத் தொடர்ந்து வழங்கி உதவும். ஆனால் தேசிய இனத்தின் விடுதலை வேட்கையை அதனால் நசுக்க முடியாது. அப்படி முடியுமாயின் இவ்வருட இறுதிக்குள் பாலஸ்தீனம் உருவாகுவதை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு யூதர்கள் தள்ளப்பட்டிருக்க மாட்டார்கள்!

★ ★ ★

### அமெரிக்காவின் பயங்கரவாத அறிக்கை

ஆனையிறவில் சிறீலங்காவின் தோல்வியைப் பற்றி மொஸ்கோ கவலை கொண்டுள்ளதாக ஒரு இராஜதந்திர அறிக்கையை ரஷ்யா வெளியிட வாசிங்டனில் அமெரிக்க அரசின் பேச்சாளர் பத்திரிகையாளர்களுடன் இது பற்றிப் பேசியுள்ளார்.

சிறீலங்காவின் மிக மோசமான செய்தித் தணிக்கை பற்றி என்ன நினைக்கின்றீர்கள் என செய்தியாளர்கள் முதற் கேள்வியை எழுப்பினர். தமக்கு அதுபற்றித் தெரியாது என்றார் பேச்சாளர். போரின் தீவிரம் பற்றி தாம் உணர்வதாகவும் ஆனால் ஒரு அமைதிவழிப் பாதை மூலம் தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என அவர் கூறினார். அவ் அமைதிவழி தீர்வு சந்திரிகாவின் அரசமைப்புத் திருத்தம் மூலம் இடம்பெற வேண்டும் என்றார் அவர். செய்தியாளர்கள் கேட்ட பிறிதொரு கேள்விக்குப் பதிலளித்த பேச்சாளர் தமது அரசு சிறீலங்காவுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கத் தயாராக உள்ளதாகக் கூறினார். மிகக் கவனமான பரிசீலனைக்குப் பின்னர் தமது அரசு ஆயுதங்கள் சிலவும் பயிற்சியும் வழங்கியது எனவும் அவர் கூறினார்.

அப்பேச்சாளரின் பதில்கள் தமிழர்களின் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றிக் கருத்துக் கூறாது அமெரிக்க நலன்களிற்கு ஏற்ப கதைக்கப்பட்டதாக அமைந்திருந்தது.

மே 1ம் திகதியன்று தமது உலக பயங்கரவாத அறிக்கையை வெளியிட்டு தமது எதிர் முகாம் நாடுகளை பயங்கரவாத பட்டியலில் அடைத்த அமெரிக்கா, புலிகளின் மீதும் தமது விமர்சனங்களை முன்வைத்திருந்தது. எனினும், இலங்கைத் தீவின் வட புலத்தில் தீவிர போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள் புலிகள் என்பதையும் மேற்கத்தேய நாடுகளின் நலன்களுக்கு எதிராக புலிகள் செயற்படவில்லை என்பதையும் புலிகள் போதைவஸ்து விற்பனையில் ஈடுபடவில்லை என்பதையும் அவ்வறிக்கை ஒப்புக்கொண்டுள்ளது. வெறுமனே சிங்களம் மீதான தாக்குதல் சிலவற்றைக் காரணம் காட்டியே அமெரிக்காவின் பயங்கரவாத விமர்சனம் தமிழர்களுக்கு எதிராக அமைந்தது.

எப்போதும் அமெரிக்க நியாயத்தின் பக்கத்தில் நிற்பதில்லை என்பதுக்கு சிறீலங்காவை விமர்சிக்காது அணைத்துச் செல்லும் போக்கு நல்ல உதாரணமாகும்.

★ ★ ★

## திசை தெரியாத குழப்பம்!

பத்திரிகைச் சுதந்திரத்தையும், மக்களின் பேச்சுரிமைகளையும் பறிக்கும் சந்திரிகாவின் சர்வாதிகார போக்குக்கு எதிராக உலகின் சனநாயகக் காப்பாளர்களான அமெரிக்கா வாயே திறக்கவில்லை. சிறீலங்காவுக்கு உதவ வேண்டும் எனக் கோரும் இந்திய முன்னாள் பிரதமர் குஜ்ரால் போன்றவர்கள் சர்வாதிகார ஆட்சி நெறிமுறைக்கு எதிராக மூச்சே விடவில்லை. 4 மாதகாலத்தில் தேர்தலை நடாத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ள சந்திரிகா தன்னை எதிர்த்து எவர் கதைத்தாலும் சிறைக்கு அனுப்ப வேண்டும் எனச் சட்டம் இயற்றுகையில் சிறீலங்காவின் பிரதேச ஒருமைப்பாடு பற்றி மட்டும் சந்திரிகா அனுதாபிகள் பேசுகின்றனர்.

ஏன் இலங்கைத் தீவு பிரியக் கூடாது? எவரிடமும் உத்தியோகபூர்வ பொருத்தல்கள்(?) கிடையாது.

தமிழ் மக்கள் சிங்களத்தினால் நசுக்கப்படுவதை அறிந்துள்ள பலதரப்பும் தமிழீழம் உருவாகுவதை எதிர்ப்பதற்கான ஒரு பொதுக்காரணத்தைக் கூறவில்லை. தமிழர்களின் வாழ்வுக்கான ஒரே தீர்வான தமிழீழம் உருவாகுவதை எதிர்க்கும் நாடுகள், எதற்காக தமிழீழம் உருவாகக் கூடாது எனக் கூறுகின்றனர் என்று தெளிவாக இதுவரை கூறவில்லை.

இந்தியா உடைந்துவிடும் என்ற காரணம் இந்திய பத்திரிகையாளர்களால் கூறப்படுகின்றது. ஆனால் இந்தியாவை உடைப்பதற்காகவே சதிசெய்யும் சக்தி என அதே பத்திரிகைகள் விமர்சிக்கும் பாகிஸ்தான் கூட தமிழீழம் உடையக் கூடாது என்கின்றது. அமெரிக்காவும், அமெரிக்காவின் இந்துசமுத்திர நடமாட்டத்தை வெறுக்கும் சீனாவும் தமிழீழம் உருவாகுவதை எதிர்க்கின்றன எனக் கூறப்படுகின்றது.

இவ்வாறான முரண்பாடுகளிலிருந்து தெரியவரும் உண்மை என்னவெனில் தமிழீழம் உருவாகுவதை எவரும் ஆழமான காரணங்களுடன் எதிர்ப்பதாகத் தெரியவில்லை. வெறுமனே தென்னாசியா தொடர்பான தமது குழப்பத்தைத் தான் எமது விடயத்திலும் தெரியப்படுத்தி வருகின்றனர். தமிழர்களும், புலிகளும் மட்டுமே குழப்பங்கள் அற்றவர்களாக உள்ளனர்.

- ராஜா

# எங்கள் இறப்பையிட்டு எவரும் கவலைப்படவில்லை

## மேஜர் ஜெனரல் கர்கிரத் சிங்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

***கேள்வி: 17 புலிகளும் சயனைட் விழுங்கிய பின் என்ன நடந்தது. சரியாகச் சொல்லுவீர்களா?***

**பதில்:** யாழ். குடாநாடு முழுவதும் இரத்த மயமானது. நாங்கள் பாதுகாப்பு நிலையெடுக்க வேண்டியவர்களானோம். எங்களிடம் பாதுகாப்பு நிலையங்கள் எதுவும் அப்போது இருக்கவில்லை. நாங்கள் வெறும் தானியங்கி துப்பாக்கிகளுடனேயே சண்டைக்குச் சென்றோம் எம்மிடம் வேறு உதவி ஆயுதங்கள் எதுவும் இருக்கவில்லை. சுற்றிவர பொறிவெடிகள் சூழ்ந்த நிலையிலும் எதுவித பாதுகாப்பு பாசறைகள் அற்று யுத்தம் புரிய வேண்டிய நிலை ஏற்பட்டது. நான் உடனடியாக எமது கூடாரங்களை எடுத்து விடும்படி உத்தரவிட்டேன். எமது விமானங்களும் சில தடவைகள் வந்து போயின.

எப்போதும் விடுதலைப் புலிகளுடன் நேசஉறவை பேணவே விரும்பினேன். மதராசிப் படையணிகள் எனது பிரிவில் கடமையாற்றிய படியினால் என்னிடம் நிறைய தமிழர்கள் இருந்தனர் அவர்களூடாக புலிகளுடன் தொடர்பு கொள்ள முற்பட்டேன். நாங்கள் ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக ஒரு செய்தியைப் பரவவிட்டோம். நாங்கள் உங்களைக் காப்பாற்றுவோம். உங்கள் ஆயுதங்களை ஒப்படையுங்கள் என்றும் கோரினோம்.

புலிகள் ஒன்றும் முட்டாள்கள் அல்ல, எமது கோரிக்கைக்கு செவி சாய்க்க! சிறீலங்கா பொலிஸ் துறையென்பதே இல்லாது போய்விட்ட நிலையில், அவர்கள் ஆயுதங்களை ஒப்படைத்தாலும் யார், அவர்களைப் பாதுகாப்பார்கள்?. இக் கேள்விக்கு ஜெயவர்த்தனே பதிலளிக்கவில்லை, தாம் பிரபாகரனின் பாதுகாப்பிற்கு 20துப்பாக்கி வழங்குவதாகக் கூறினார். ஆனால் பிரபாகரனுக்கு 20 பேர்பாதுகாப்பு என்பதும் போதுமானதல்ல. பிரபாகரன் எப்போதும் முச்சுற்றுப் பாதுகாப்போடுதான் உலாவுபவர். முதல் சுற்றுப் பாதுகாப்பு தற்கொடையாளிகள் நிறைந்தது. இரண்டாவது சுற்று வீரப் போராளிகளைக் கொண்டதாகும். மூன்றாவது சுற்று, தொடக்க எச்சரிக்கையாளர்களைக் கொண்டதாகவும் காணப்படும். நாங்கள் பிரபாகரன் யாழ்ப்பாணத்தில் இருக்கும் வரை அவரைத் தொடமுடியவில்லை. கடைசியாக நான் அவரது தொலைபேசிக் கருவியுடன் தொடர்பு கொண்ட போது அவர் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தார். அதன்போது அவர் கூறினார். நான் இங்கிருந்து பாதிக்கப்படுவதை விரும்பவில்லை. எனது தளபதிகள் இங்கிருந்து போரைத் தொடர்வார்கள் என்றும் கூறியிருந்தார். அந்த வேளையில்தான் நாங்கள் அந்த முட்டாள்தனமான தரையிறக்கத்தை மேற்கொண்டோம்.

***கேள்வி: நீங்கள் பல்கலைக் கழக வளாகத்தில் இடம் பெற்ற தாக்குதலைப் பற்றி குறிப்பிடுகின்றீர்களா?***

**பதில்:** ஆம்! இதுவும் ஒரு பயங்கரமான விபத்து.

***கேள்வி: சரியாக அதைப்பற்றி, என்ன நடந்தது என்று கூறுவீர்களா?***

**பதில்:** என்ன நடந்ததா? ஒன்பது உலங்கு வானூர்திகளை வைத்தே நான் திட்டமிட்டேன். துருப்புக்களைத் தரையிறக்குவதற்கு அவற்றைப் பயன்படுத்துவதென திட்டமிட்டேன். நேரத்திற்கே துருப்புக்கள் வந்திறங்கின. இருதடவைகள் இந்தியாவிலிருந்து பலாலிக்கு பறப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. தரையிறக்கப்படும் வலயப் பாதுகாப்பிற்கென ஆட்கள் போதுமானதாக இருந்தது. அவ்வேளையில் தான் எனக்கு உலங்குவானூர்திகள் இல்லை என்று அறிவிக்கப்பட்டது.

***கேள்வி: யார் சொன்னார்கள்?***

**பதில்:** விமானப் படையினர் அறிவித்தனர். தாம் கிழக்குப்பகுதியில் பயிற்சியில் ஈடுபடுவதாகக் கூறினர். ஆனால் எனது வேண்டுகோள் ஒன்பது உலங்குவானூர்திகளே. இது லெப்.ஜெனரல் தீபேந்தர் சிங், மற்றும் லெப்.ஜெனரல். கல்கத் என்போராலும் அங்கீகரிக்கப்பட்டது. உலங்குவானூர்திகள் வரும் என்பது உறுதிசெய்யப்பட்டது. இப்போது இல்லையென்று கூறப்பட்டது. சரியாகப் பிந்திவிட்டது.

ஒரு படைநடவடிக்கைக்கு இது பிந்தி விட்டது என்றே கூறலாம், அரைவாசிப் பேர் வானத்திலும் அரைவாசிப் பேர் தரையிலும் இருந்தனர். என்ன துரதிர்ஷ்டம்! சென்ற ஐந்து விமானங்களில், மூன்றாவது விமானத்தில் சென்ற மேஜர் திரும்பிவரவில்லை.

***கேள்வி: இந்திய சிப்பாய்கள் இந்தத் தாக்குதலின் பின்னர் கொல்லப்பட்டார்களா?***

**பதில்:** ஆம்! அவர்கள் பல்கலைக்கழக வளாகத்தினுள் நுழைய முன்னரே வேட்டையாடப்பட்டனர். எல்லாமாக 24 படையினர் கொல்லப்பட்டனர். எல்லோரும் என் மீது தப்பென்று சொல்லுகிறார்கள். போர் என்று வந்தால் இழப்புக்கள் சகஜம்தானே.

***கேள்வி: இதன் பின்னரும் நீங்கள் கடற்புறாச் சம்பவத்தையிட்டு நீங்கள் கவலைப்பட்டதுண்டா?***

**பதில்:** இரண்டு சம்பவம், ஒன்றுக்கொன்று சரியென்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் படகுச் சம்பவம் இராசதந்திரத் தோல்வி. இந்திய அரச இராச தந்திரத்தின் துரோகம். இதற்கும் இந்திய அமைதிப் படைக்கும் எவ்வித சம்மந்தமுமில்லை. நான் இது சம்மந்தமாக தடித்த எழுத்தில் குறிப்பிட விரும்புகிறேன். கடைசி நிமிடத்தில் வருமென நான் நம்பியிருந்த விமான ஆதரவும் விலக்கப்பட்டது. குழப்பமடைந்த நிலையிலேயே இவ் நடவடிக்கையை, 'இருந்த வானூர்திகளை வைத்துச்' செய்தோம்.

***கேள்வி: நீங்கள் இது சம்பந்தமாக விமானப்படைக்கு உங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லையா?***

**பதில்:** எதிர்ப்புத் தெரிவிப்பது என்பது சமரில் சாத்தியமில்லை. நீங்கள் உயர் படை நடத்துகையில் ஈடுபடுகையில் எம்மால் எமக்கு கீழுள்ள படைகளைமட்டுமே கட்டுப்படுத்த முடியும். விமானப்படையின் சாதாரண அணியின் தலைவரே, என்னிடம் வானூர்திகள் இல்லையென்று கூறும் பொழுது என்னால் ஒன்றும் செய்ய முடியாது.

***கேள்வி: நீங்கள் இது சம்பந்தமாக உங்களுடைய மேலதிகாரிகளுக்கு கூறினீர்களா?***

**பதில்:** ஆம். சுந்தர்ஜிக்கு இது நன்றாகத் தெரியும். சுந்தர்ஜி மற்றும் தளபதி தீபெந்தர் அனைவரும் அறிவார்கள். ஆனால் அவர்களுக்கு பத்திரிகைக்காரர்களுடன் பேசுவதற்கு தயக்கம். கார்கில் போரிற்கு இன்று நடைபெறுவது போன்று, அன்று நாங்கள் ஈழத்தில் சண்டையிட்ட போது செய்தியாளர் சந்திப்பு நடைபெறவேயில்லை.

கார்கிலில் ஐந்து படையினர் இறந்தால் டில்லியில் வைத்து மலர் வளையம் வைத்து மரியாதை செய்யும் அரச தரப்பு எம் மீது எவ்வித அக்கறையும் காட்டவில்லை.

***கேள்வி: இது சம்பந்தமாக உங்களால் விரிவாக கூறமுடியுமா?***

**பதில்:** நிச்சயமாக. திரு கல்கட் அவர்கள் பொறுப்பாளராக இருந்த பொழுது, சடலங்கள் வந்தாலும் எரித்துவிட்டு சாம்பல் மாத்திரமே வீட்டிற்கு அனுப்பப்படும். இந்திய மக்களிடமிருந்து எதுவித ஆதரவோ அனுதாபமோ எமக்கு இருக்கவில்லை.

விடுதலைப் புலிகள் கூட எமது இறந்த சகாக்களின் உடலங்களை 'பாதுகாப்பாக' எரித்து சாம்பலைத் தந்தார்கள். ஆனால் இந்திய அரசு அமைதிப்படை ஜவான்களை கௌரவமாக நடத்தவில்லை என்றே கூறுவேன்.

***கேள்வி: விடுதலைப் புலிகளின் படைநடவடிக்கைகள் சம்பந்தமாக ஏதாவது கூறவிரும்புகிறீர்களா?***

**பதில்:** ஆம்! இறுதி வரைக்கும் விடுதலைப்புலிகளின் பின்தள நடவடிக்கைகள் சம்மந்தமாக, எம்மால் அறியப்படவேயில்லை. அவர்கள் தங்களுடைய ஆயுத, வெடிபொருட்கள், உணவு வகைகள், காசு உட்பட அனைத்தையும் வெற்றிகரமாக யாழ்ப்பாணத்தில் வைத்து அகற்றிவிட்டார்கள்.

***கேள்வி: இந்திய அமைதிப் படை நடவடிக்கைகளின் பின்னடைவிற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?***

**பதில்:** இந்திய அமைதிப்படை பொறுமையோடு காத்திருந்திருக்க வேண்டும். எனது மேலதிகாரிகள் கடின நடவடிக்கைகளுக்கு உத்தரவிட்டனர். நடந்தது என்ன.? நான் உத்தரவுகளை மாத்திரம் அங்கிருந்து பெற்றுக் கொள்ள முடியும். அவர்கள் கலந்துரையாடி முடிவுகளை மேற்கொள்வார்கள். இவற்றிற்கெல்லாம் நான் முதலில் திட்டமிடவேண்டும் என்பதையும் அவர்கள் எவரும் சிந்திக்கவில்லை. எதற்காக நாங்கள் அவசரப்பட்டு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்? இதனாலேயே அரைகுறை முன்னேற்பாடுகளுடன் தொடங்கப்பட்ட இவ் நடவடிக்கைகள் தோல்வியைத் தழுவின. எமக்கு பெருத்த இழப்புக்களையும் தந்தன.

***கேள்வி: இறுதியாக சிறீலங்காவின் யுத்தம் தொடருமா?***

**பதில்:** புலிகள் இலகுவில் நிராகரிக்கக் கூடிய சக்தியல்ல. திரு.பிரபாகரன் நீண்ட தீர்க்கதரிசனமுள்ள மனிதர். அவருடைய ஒரே இலக்கு தனி ஈழமே. எனவேதான் இப்போதைக்கு சிறீலங்காவில் போர் ஓய்வதற்கு சாத்தியமில்லை என்பதே எனது கருத்து.

(முற்றும்)

### கர்கிரத் சிங் ஒரு பொறுப்பான மனிதர் அல்ல! – மீண்டும் தீட்சித்

கர்கிரத் சிங்கின் இப்பேட்டியை அடுத்து ஜே. என். தீட்சித்தினால் மறுப்பு அறிக்கையொன்று வெளியிடப்பட்டது. அவ் அறிக்கையில்:

சிறீலங்காப் படையினரால் 1987 ஜூலை ஓகஸ்ட்டில் கைது செய்யப்பட்டு பலாலி விமானத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 17 விடுதலைப் புலிகளின் இயக்க உறுப்பினர்களினது உயிர்களைக் காப்பாற்றத் தவறியதற்காகவே இந்திய அமைதி காக்கும் படையின் தளபதி பதவியில் இருந்து மேஜர் ஜெனரல் ஹர்கிரத் சிங் அகற்றப்பட்டார் என்று இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவரும், முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளருமான ஜே.என். தீட்சித் தெரிவித்திருந்தார். முதலில் பேட்டியளித்திருந்த தீட்சித், இலங்கையில் இந்திய அமைதி காக்கும் படைக்கு ஏற்பட்ட பின்னடைவுகளுக்கெல்லாம் அப்படையின் முதல் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் ஹர்கிரத்சிங்தான் காரணம் என்று கூறியிருந்தார்.

அடுத்து பேட்டியளித்த ஹர்கிரத்சிங் தீட்சித்தின் தவறான அணுகுமுறையே இலங்கை இன நெருக்கடி விவகாரத்தில் இந்தியா தோல்வியடையக் காரணம் என்று குறிப்பிட்டிருந்ததுடன், ஒரு கட்டத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையும், உதவித் தலைவர் மாத்தையாவையும் சுடுமாறு தீட்சித் தனக்கு உத்தரவிட்டதாகவும், தான் அதற்கு மறுத்து விட்டதாகவும் கூறியிருந்தார்.

பிரபாகரனையும், மாத்தையாவையும் சுட்டுக்கொலை செய்யுமாறு தான் ஒருபோதும் எவருக்கும் உத்தரவிடவில்லை என்று மறுதலித்த தீட்சித், பிரபாகரன் அல்லது மாத்தையாவுக்கு எதிராக எந்தவித கடுமையான நடவடிக்கையையும் எடுக்குமாறு நான் கூறியிருப்பதில் எதுவித உண்மையும் இல்லை. எவ்வாறு நோக்கினாலும் இராஜதந்திர பணியில் இருக்கும் ஒரு உயர் ஸ்தானிகர் ஆட்களைக் கொலை செய்யுமாறு எவ்வாறு உத்தரவிட முடியும்?

இரண்டாவதாக, ஹர்கிரத்சிங் இலங்கையில் இருந்த வேளையில் நான் பிரபாகரனுடனும், மாத்தையாவுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்திக்கொண்டிருந்தேன். 1987 செப்டம்பரிலேயே இப் பேச்சுவார்த்தைகளில் நான் ஈடுபட்டேன். எனவே, அவர்களுக்கு ஊறு விளைவிக்க நான் முயற்சித்தேன் என்ற கேள்வி எழவே நியாயமில்லை.

இலங்கைப் படையினரால் கைது செய்யப்பட்டு பலாலி விமானத்தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 17 விடுதலைப் புலிகளினதும் உயிரைக் காப்பாற்றத் தவறியதற்காகவே ஹர்கிரத்சிங் அமைதிகாக்கும் படைத்தளபதி பதவியில் இருந்து அகற்றப்பட்டார் என்பதை 'இப்போது' நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது.

'17 விடுதலைப் புலிகளுக்கும் பாதுகாப்பு அளிப்பதை ஹர்கிரத்சிங் தாமதித்தார். அதனால்தான் அவர்கள் தற்கொலை செய்துகொண்டார்கள். இதனால், விடுதலைப் புலிகளுடனான எமது உறவுகள் படுமோசமாக சீர்குலைந்தன. இதன் காரணத்தினால்தான் ஹர்கிரத்சிங் [ஓரிரு மாதங்களே இலங்கையில் பணியாற்றிய நிலையில்] இடமாற்றஞ் செய்யப்பட்டார். வேறு ஒரு அதிகாரி அவரின் இடத்துக்கு நியமிக்கப்பட்டார்.

என்னைப் பற்றி ஹர்கிரத்சிங் கூறியிருக்கும் கருத்துக்கள் அவரின் கசப்புணர்வுகளை பிரதிபலிக்கின்றன. என் மீது பழி தீர்க்கும் மனோபாவத்துடன் அவர் இருப்பதையும் இது புலப்படுத்துகின்றது. அவர் கூறியிருப்பதில் எந்த உண்மையும் இல்லை. முற்று முழுதாக தவறு.

ஒரு இராணுவத்தின் தளபதிக்கு எவ்வாறு சிவிலியன் அதிகாரியொருவர் இராணுவ நடவடிக்கைக்கான உத்தரவைப் பிறப்பிக்க முடியும்? எவரையாவது சுட்டுக்கொலை செய்யுமாறு எந்தவொருவருக்கும் தூதுவர் ஒருவர் எவ்வாறு உத்தரவிட முடியும்? இந்திய இராணுவத்தின் தென்மண்டல கட்டளைப் பணியகத்தின் கீழேயே ஹர்கிரத்சிங் பணியாற்றினார். அவர் என்ன பேசுகின்றார்? எதற்காக இத்தகைய குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகிறார்?

'அவரை பதவிநீக்கம் செய்ததற்கு நானே காரணம் என்று அவர் நினைக்கிறார். என் மீது அவர் சுமத்தும் பாரதூரமான அபாண்டம் இது'. அவர் இந்திய அமைதிகாக்கும் படையின் தளபதியாக இருந்தபோது? நான் நினைக்கிறேன் 1987 செப்டெம்பர் 17 –23க்கு இடைப்பட்ட காலத்தில் நான் தான் தனிப்பட்ட முறையில் பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தேன். எனவே, அவரைக் கொலை செய்யுமாறு நான் எப்படிக் கூறமுடியும்? நான் ஒரு சிவிலியன் அதிகாரி. இந்திய அரசாங்கத்தின் அங்கீகாரம் இல்லாமல் நான் எவ்வாறு உத்தரவிடமுடியும்? ஹர்கிரத்சிங் ஒரு பொறுப்பான மனிதர் அல்ல. இவ்வாறு தீட்சித் மீண்டும் தெரிவித்துள்ளார்.

# யாழ்.குடாவில் குறுகிவரும் ஆக்கிரமிப்புப் பிரதேசம்

சிறீலங்காவின் மிகப் பலம் வாய்ந்த கூட்டுப் படைத்தளமான ஆனையிறவு விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டதானது சிறீலங்காவின் இராணுவ வரலாற்றில் மிகப்பெரும் தோல்வியை ஏற்படுத்தியுள்ளதுடன், அதன் இராணுவ எதிர்காலத்தை மாற்றியமைக்கும் ஓர் நிலையையும் தோற்றுவித்துள்ளது. மிகவும் நம்பிக்கையுடன் 1995ம் ஆண்டு யாழ். குடாவை விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றி, அங்கு கொடியேற்றிய சிறீலங்கா அரசு, இன்று அங்கிருந்து எப்படி வெளியேறுவது என்று யோசித்துக் கொண்டிருக்கின்றது. மிகப்பெருமளவில் படைகளைக் குவித்திருந்த சிறீலங்கா, அவற்றை இப்போது அங்கிருந்து அகற்றுவதற்கு அண்டைநாடுகளின் உதவியைக் கோரியிருக்கிறது. இது தமிழீழ வரலாற்றின் ஓர் மைல்கல். தமிழர்களினது பாரம்பரிய தலைநகரான யாழ்ப்பாணம் எப்படியும் தமிழீழ விடுதலைப் புலிகளால் மீட்கப்படும் என்பதை சிறீலங்கா எண்ணியிருக்கவில்லை. மாறாக அங்குள்ள மக்கள் குடியிருப்புக்களை தனிமைப்படுத்தி 25,000 முதல் 30,000 வரையிலான இராணுவத்தினரை அங்கு நிறுத்தி திறந்தவெளிச் சிறைச்சாலை ஒன்றை ஏற்படுத்தி விடுதலைப் புலிகளை



யாழ்.குடாவிற்குள் உள்நுழைய முடியாதவாறு அரண்களை அமைத்திருந்தது. ஆனாலும் விடுதலைப் புலிகள் யாழ்குடாவிற்குள் தேவையான அளவிற்கு தேவையான பகுதிகளில் அப்போதே நகர்வுகளை ஆரம்பித்து விட்டிருந்தார்கள்.

யாழ்.குடாவை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த சிறீலங்கா, ஒரு சில இலட்சம் மக்கள் மத்தியில் தனது மொத்த இராணுவத்தின் மூன்றில் ஒரு பகுதியை நிறுத்தியிருந்தது. சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான அநுருத்த ரத்வத்தை தனது யாழ்குடாப் படைகளின் மேல் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார். உலகை ஏமாற்ற இந்தப் படைகளின் தங்குதல் அவர்களுக்கு அவசியமாகப்பட்டது. தொலைபேசியும் மின்சாரமும்தான் தமிழ் மக்களுக்கு தேவையானவை என, கனவுலகில் இருந்துகொண்டு சிறீலங்கா தீர்மானித்தது. எங்கள் தமிழர்கள் சிலரும் அவைதான் உண்மையான தேவை என்றும் கூறினர். அடிக்கடி வெளிநாட்டு பத்திரிகையாளர்களையும் புகைப்படக் காரர்களையும் யாழ்.குடாவிற்கு அழைத்துச்சென்று அங்கு ஓடிக்கொண்டிருக்கும் பேருந்துக்களைக் காட்டியும், நகரப்பகுதியில் நிற்கும் மக்களை அவர்கள் மத்தியில் பேசவைத்தும் தாம் தமிழ் மக்களை விடுதலைப் புலிகளிடம் இருந்து காப்பாற்றிவிட்டதான ஓர் செய்தியை சிறீலங்கா காட்டிவந்தது. இவற்றிக்கு எல்லாம் வெளிநாடுகளின் செய்தி ஊடகங்களும் தேவையான அளவிற்கு துணைபோயின. இன்று

## புலிகளின் அடுத்த நகர்வுகள் அதனையும் விடுவிக்கும்


சிறீலங்கா இராணுவம் படுதோல்வி அடைந்துள்ள நிலையில், உண்மையான செய்திகள் தணிக்கை செய்யப்பட்டு வெட்டப்பட்டு வெளியிடப்படும் நிலையில், இந்த வெளிநாட்டு செய்தி ஊடகங்கள் தமக்குத் தேவையான செய்திகளை வேறு வழிகளில் இருந்து பெற்றுக் கொள்ள முயற்சிப்பது சாதாரணமாகிவிட்டது. அதுவும் யாழ். குடாவின் வாசலில் நிலைகொண்டிருந்த பெரும் படைத்தளம் ஒரு சில நாட்களுக்குள் வீழ்சியடைந்ததானது சர்வதேச ரீதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. சர்வதேசச் செய்தி நிறுவனங்கள் அந்தச் செய்தியை; சிறீலங்காவினால் வெளியிடப்பட்ட அறிக்கைகளையும் மீறி வெளியிட்டன. இதனால் சிறீலங்கா ஆத்திரமடைந்தது வேறு கதை.

தனது யாழ்.குடா இருப்பிற்கான ஓர் பாதுகாப்புக் கவசமாக இருந்துவந்த ஆனையிறவுப் படைத்தளத்தின் வீழ்ச்சியானது சிறீலங்காவின் இராணுவ வரலாறு மாற்றியமைக்கப்படுவதற்கு காரணமாகியுள்ளது. ஆனையிறவின் வீழ்ச்சியுடன் சிறீலங்கா இராணுவத்தின் யாழ்குடா இருப்பும் கேள்விக்குறியாகியுள்ளது.

முன்னர் விடுதலைப் புலிகள் யாழ்குடாவினுள் நகர்வதற்கு தரைவழியான தொடர்புப்பாதைகள் இருக்கவில்லை. கடல் மூலமான வழிகளினூடாகத்தான் யாழ்.குடாவிற்குள் அவர்கள் நகர்ந்தனர். இப்போது அந்த நிலையில்லை. அத்துடன் அன்று இருந்த நிலையில் விடுதலைப் புலிகளின் படைத் திறனும் இல்லை. பலமடங்கு அதிகரித்த படையணிகளுடன் நவீன கனரக ஆயுதங்களுடன் கூடிய படைப் பிரிவுகளை இப்போது விடுதலைப் புலிகள் கொண்டுள்ளனர். இவ் அணிகளின் நகர்விற்கு தரைவழியான தொடர்புப்பாதையானது அவசியமானதாக இருந்தது. அது இப்போது திறக்கப் பட்டு விட்டது.

இதேவேளை, யாழ்.குடாவிற்குள் நிலைகொண்டிருந்த இராணுவமும் தனது பல முகாம்களை மூடி ஆனையிறவுப் படைத்தள பலப்படுத்தலுக்காக இணைந்துகொண்டிருந்தன. அப்படி மூடப்பட்ட முகாம் பகுதிகளில் எல்லாம் விடுதலைப் புலிகளின் மக்கள் படையணிகள் நிலைகொண்டுள்ளன. இவைகள் அப்பகுதிகளில் தங்களது நிலைகளைப் பலப்படுத்தி மீண்டும் இராணுவம் திரும்பாத வகையில் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர். ஆனையிறவுப் படைத்தளம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியுற்றபோது தப்பிய படைகள் கிளாலிப் பகுதியின் ஊடாக பளைப்பகுதியை அடைந்தன. இவைகள் அங்கு தமது நிலைகளைப் பலப்படுத்தின. இப்போது பளையும் அவர்களிடம் இல்லை. மேலும் நகர்ந்து சாவகச்சேரி, கொடிகாமப்பகுதிகளில் அவர்கள் பெருகியுள்ளனர்.

ஆனையிறவு படைத்தளம் தாக்கப்பட்டதை அடுத்து, யாழ். குடாவிற்குள் விடுதலைப் புலிகள் நகராதவாறு தடுப்பதற்காக மேலும் பல இராணுவ முகாம்களை சிறீலங்கா அகற்றிக் கொண்டதாகக் கூறியது. ஆனால் யாழ்.குடாவிற்குள் விடுதலைப்




புலிகளின் நகர்வு அதிகரித்துள்ள நிலையில் சிறு முகாம்கள் இலகுவாக தாக்கியழிக்கப்படலாம் என்ற பயத்தின் அடிப்படையிலேயே இவைகள் அகற்றப்பட்டதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

எது எப்படியிருந்த போதிலும், இன்று வலிகாமம் மேற்குப் பகுதியில் இராணுவம் இல்லை. இங்கிருந்த இராணுவம் தற்போது நாவற்குழி, கொடிகாமம், கச்சாய் பகுதிகளில் உள்ள முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். அத்துடன் வடமராட்சியில் இருந்தும் சில முகாம்களை அகற்றிக் கொண்ட சிறீலங்கா, அங்கிருந்த படையினரை நாகர்கோவில் முகாமிற்கு அனுப்பியுள்ளன. இப்போது சிறீலங்கா யாழ். குடாவில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு சில பகுதிகளில் மாத்திரமே முகாம்களை வைத்துக்கொண்டுள்ளது. யாழ். நகரப் பகுதி, கொடிகாமம், சாவகச் சேரி, நாவற்குழி, சுன்னாகம் போன்ற இடங்களில் உள்ள முகாம்கள் தவிர பலாலியின் படைத்தளமும் வடமராட்சியில் ஒரு சில முகாம்கள் மாத்திரமே தற்போது எஞ்சியுள்ளன.

ஆனையிறவு படைத்தள வீழ்ச்சியின் பின் யாழ். குடாவில் உள்ள சிறீலங்கா இராணுவம், யுத்தம் செய்யும் நிலையில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும், தப்பியோடவுமே தயாராக உள்ளது. சிறீலங்கா அரசும் கூட உள்ளூரில் யாழ். குடாவில் தமது படைகள் உறுதியாக நிற்பதாக கூறிக்கொண்டாலும் அண்டைநாடுகளில் யாழ். குடாவில் சிக்கிக்கொண்டுள்ள தனது படையினரை விலக்கிக்கொள்ள உதவி புரியுமாறே கோரிவருகின்றது. இதன் மூலம் ஒருபுறம் தான் யாழ். குடாவின் கட்டுப்பாட்டை இழந்தாலும் அங்குள்ள இராணுவத்தின் உயிரிழப்புக்களை தவிர்க்க முயற்சிப்பதாக சிறீலங்காவின் பாதுகாப்பு தலைமை மறைமுகமாகக் கூறிவருகிறது. இதற்கிடையே விடுதலைப் புலிகள் யாழ்.குடாவிற்கான சகல தரை வழித் தொடர்புகளையும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர். மேலும் வடமராட்சிப் பகுதியில் பெரும் கடற்பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்கு உள்ளேயே உள்ளன. அத்துடன் வான்வெளி பயணங்களும் சிறீலங்காவிற்கு அச்சுறுத்தலாகவே இருந்து வருகின்றது. இந்நிலையில் விடுதலைப் புலிகளின் அணிகள் யாழ். நகரப் பகுதியில் இருந்து சில கிலோ மீற்றர்கள் தூரத்திலேயே நிலை கொண்டுள்ளன. பல முனைகளினூடாக நகரும் புலிகளின் அணிகள் மிக உறுதியான திட்டங்களுடன் அடுத்த கட்ட தாக்குதல்களை நிகழ்த்த தயாராகி வருகின்றனர். யாழ். குடாவிற்கு சில கிலோ மீற்றர் தொலைவில் புலிகளின் அணிகள் நகர்கின்றன எனக்கூறப்பட்ட போதிலும் யாழ். நகரப்பகுதிக்கு உள்ளேயே புலிகளின் விசேட அணிகள் நிலைகொண்டுள்ளன என்பதால், சிறீலங்காவின் முகாம்கள் மற்றும் அவர்களது நடமாட்டங்கள் இனிவரும் நாட்களில் பலத்த தாக்குதல்களுக்கு உள்ளாகும். தற்போது யாழ்.குடாவின் பாதுகாப்பினை இராணுவம் உச்சக் கட்டத்தில் வைத்திருந்தாலும், அப்பகுதியில் தாக்குதல்கள் அதிகரிக்க அவர்கள் முகாம்களுக்குள் முடங்கிக்கொள்வது தவிர்க்க முடியாததாகிவிடும்.

**இப்போது சிறீலங்கா யாழ். குடாவில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு சில பகுதிகளில் மாத்திரமே முகாம்களை வைத்துக்கொண்டுள்ளது. யாழ். நகரப்பகுதி, கொடிகாமம், சாவகச்சேரி, நாவற்குழி, சுன்னாகம் போன்ற இடங்களில் உள்ள முகாம்கள் தவிர பலாலியின் படைத்தளமும் வடமராட்சியில் ஒரு சில முகாம்கள் மாத்திரமே தற்போது எஞ்சியுள்ளன.**

சிறீலங்காவில் இப்போது தோன்றியுள்ள இராணுவப் பின்னடைவுகளையும் அழிவுகளையும் உலகத்திற்கு அது மறைக்க முயன்ற போதிலும், அதனது நகர்வுகளும் நடவடிக்கைகளும் தான் எவ்வளவு தூரத்திற்கு விடுதலைப் புலிகளால் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை அம்பலப்படுத்துகிறது. எப்படியிருந்த போதிலும் சிறீலங்காவின் படைகள் யாழ்.குடாவில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் இருந்து அழிவுகளைத் தவிர்த்து விலகிக்கொள்வதே சரியானது, என உலக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இதே கருத்தைத்தான் சிறீலங்காவின் பொதுவுடமை, அரசியல்வாதிகளும் முன்வைக்கின்றனர். ஆனால், தேசியவாதப் பௌத்தர்களும், அரச தலைவர்களும்தான், யுத்தத்தின் மூலம்தான் தீர்வுகாணப்பட வேண்டும் என்பதில் இன்னும் குறியாக இருந்து வருகின்றனர். ஆனால் இது சாத்தியப்படாத ஒன்று என்பதை அடுத்த கட்ட ஓயாத அலைகள் தாக்குதல்கள் நிரூபிக்கும்.

# ஓயாத அலைக
# தமிழகத்தில் எழுகின்

ஓயாத அலைகள்–3 படையணிகளால் யாழ்குடாவில் சிறீலங்காப்படையினர் முற்றுகையிடப்பட்டுவிட்டனர். தனது 40,000 வரையிலான படையினரை உயிரோடு மீட்டெடுப்பதற்காக சிறீலங்கா அரசு உலக நாடெங்கும் தனது கைகளை ஏந்தத் தொடங்கிவிட்டது. இந்தியப் படைகள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்று, அன்று தகாத வார்த்தைகளை எல்லாம் பிரயோகித்தவர்களும், வெளிநாட்டு உதவி தேவையில்லை இதனை நாமே தீர்த்துக்கொள்வோம் எனக்கூறிய பௌத்த பிக்குகள் எல்லாம் இன்று இந்தியப் படை வரவேண்டும், யாழ். குடாவில் சிக்கியிருக்கும் தமது படையினரைக் காப்பற்றவேண்டும் என ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கின்றனர். வரலாற்றில் மிகப்பெரிய மாற்றத்தை மிகக்குறுகிய காலத்தில் ஏற்படுத்தியுள்ள தமிழீழத் தேசியத் தலைவரின் மதிநுட்பத்தின் வெளிப்பாடுகளால், இன்று தென்கிழக்கு ஆசியாவே தமிழீழ தேசத்தின் இந்தப் பலத்தைக்கண்டு, இவ் விவகாரத்தை எப்படிக் கையாள்வது எனச் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறது. இதில் இந்தியாவில் இருந்து ஒருமித்த குரலாக இந்தியப்படையை இலங்கைக்கு அனுப்பவேண்டாம் என்ற குரலே பலமாக வெளிவந்துகொண்டிருக்கின்றது. அவற்றில் சிலவற்றை இவ்வாரம் பதிவாக்குகின்றோம்.

## தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி

* இலங்கைத் தமிழர்களை கொன்றுகுவிக்க இந்திய இராணுவத்தை மட்டுமல்ல, இராணுவ தளவாடங்களையும் அனுப்பக்கூடாது. இலங்கையில் சிங்கள இராணுவத்தினர் இறுதிக்கட்டமாக பாதுகாப்புத் தேடும் நிலை வந்துகொண்டிருக்கின்றது. அதற்கு இந்தியா உதவவேண்டும் என்றால், மறைமுகமாக அது தமிழர்களை கொல்வதாக ஆகிவிடும்.

*– புதனன்று சட்டசபையில்*

* இந்த விவகாரத்தில் நாட்டின் நலன்கருதி தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது மத்திய அரசின் தனிப்பட்ட உரிமை. அதில் தலையிட நாங்கள் விரும்பவில்லை. மத்திய அரசின் கைகளை கட்டிப்போட நாங்கள் விரும்பவில்லை. இலங்கை விவகாரம் தொடர்பாக முடிவெடுக்க வாஜ்பாய்க்கு முழு சுதந்திரமும் உண்டு. அதே நேரத்தில் கடந்த காலத்தில் நமக்கு கிடைத்த அனுபவங்களை நாம் மறந்துவிடக் கூடாது.

*– பிரதமர் வாஜ்பாயை சந்தித்ததன் பின்னர் டில்லியில் வைத்து பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய பேட்டியில்*



* மத்திய அரசு எடுக்கின்ற முடிவுகள் நாங்களும் சேர்ந்து எடுக்கின்ற முடிவாகத்தான் இருக்கும். நாங்களும் சேர்ந்ததுதான் மத்திய கூட்டணி அரசு. குறிப்பாக தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், பாரதிய ஜனதாக்கட்சி, எம்.ஜி.ஆர். அ.தி.மு.க, எம்.ஜி.ஆர். கழகம் ஆகியன கூட்டு சேர்ந்துதான் கூட்டணி அமைச்சரவையில் இருக்கிறாங்கள். நாங்கள் எல்லாம் சேர்ந்துத்தான் மத்திய அரசு.

*– வாஜ்பாயை சந்தித்துவிட்டு திருப்பியபின்னர், சென்னை விமான நிலையத்தில் வைத்து பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய பேட்டியில்*

## இந்திய மத்திய அமைச்சரவையில் இருந்து...



* இலங்கைக்கு இந்திய இராணுவம் அனுப்பப்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆயுதங்களையும் வழங்கமாட்டோம். ஆயுதங்களை விற்பனையும் செய்யமாட்டோம். தேவைப்பட்டால் உணவு மருந்து, துணிமணிகள் போன்ற மனிதாபிமான ரீதியிலான உதவிகளை வழங்க இந்தியா எப்போதும் தயாராக உள்ளது.

*– பிரதமர் வாஜ்பாய்*



* இலங்கைக்கு இராணுவத்தை அனுப்புவது, ஆயுத உதவி செய்து என்ற பேச்சுக்கே இடமில்லை. 1987ல் இலங்கைக்கு இந்திய அமைதி காக்கும் படை சென்றது. அதேபோல் இப்போதும் இந்திய இராணுவத்தை அங்கு அனுப்ப மாட்டோம். இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடுவது என்ற கேள்வியே எழவில்லை. மனிதாபிமான உதவி என்பது வெறும் கற்பனைப் பேச்சுத்தான். அதற்கான சூழ்நிலை வரும்போது பரிசீலிப்போம்.

*– வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சிங்*



* இலங்கை விடயத்தில் இந்தியா ஏற்கனவே செய்த தவறைச் செய்யக்கூடாது. யாழ்ப்பாணத்தில் சிக்கியுள்ள சிங்கள இராணுவத்தை மீட்க இந்திய இராணுவத்தை அனுப்பக்கூடாது. இலங்கையில் நடப்பது உள்நாட்டுப் போர். அது இலங்கையின் உள்விவகாரம் ஆகும். இந்தியா அதில் தலையிடுவது என்ற பேச்சுக்கே இடமில்லை. கடந்தகாலத்தில் இருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

*– உள்துறை அமைச்சர் அத்வானி*



* தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தி.மு.க அங்கம் வகிக்கிறது. எனவே நிலைமையை சமாளிக்க மத்திய அரசுடன் இணைந்து பணியாற்றுவோம். இலங்கை விவகாரத்தில் மத்திய அரசின் கைகளைக் கட்டிப்போட நாங்கள் விரும்பவில்லை.

*– தொழிற்துறை அமைச்சர் முரசொலிமாறன்*

## நாளிதழ்களின் பார்வையில்...

* புலிகளை ஒடுக்க இந்திய இராணுவத்தை அழைக்க வேண்டும் என்று சிங்கள வெறியர்களான புத்தமத சாமியார்கள் கூறியுள்ளார்கள். முன்பு இந்திய அமைதிப்படையை வெளியேற வேண்டும் என்று கூறியவர்களும் இவர்கள்தான். அதிபரான பிரேமதாசா இந்தியப்படையை விரட்டியடிக்காத குறையாக அனுப்பி வைத்தார். இப்போது புலிகளின் அடி தாங்க முடியாமல் புத்த பிக்குகளில் இருந்து சிங்கள வெறியர்கள் அனைவரும் இந்தியப்படையை அழைக்குமாறு அலறுகிறார்கள்.

இந்தியா இராணுவ உதவி வழங்க மறுத்துவிட்டதையடுத்து சந்திரிகா தனது பிச்சைப் பாத்திரத்தை இஸ்ரேல் பக்கம் திருப்பியிருக்கிறார். புலிகளிடம் இலங்கை அரசும் சிங்கள இராணுவமும் தோற்றுப்போய்விட்டதையே இது எடுத்துக் காட்டுகிறது. ஒரு நாடு தன்னுடைய பிரச்சனையை தீர்க்க முடியாது திணறுவது அவமானகரமானது. சமாதானப் பேச்சு வார்த்தை நடத்த சண்டை நிறுத்தம் செய்யவேண்டும் என்று புலிகள் கேட்டபோது வீராவேசமாக மறுத்த சந்திரிகா, இப்போது இராணுவத்தினரை காப்பாற்றுமாறு கெஞ்சுவது வேடிக்கை.

*– தினபூமி*

* இலங்கையில் நடக்கும் போரினால் தற்போது விடுதலைப் புலிகளின் கைகள் ஓங்கி வருகின்றது. போராளிகளின் வீரமிகு போரினால் சிங்களச் சிப்பாய்கள் புறமுதுகிட்டு ஓடுகிறார்கள். புலிகள் வெற்றிக்கொடி நாட்டி வருகிறார்கள். தற்போது புலிகளின் பிடியில் 40,000 சிப்பாய்கள் சிக்கி இருக்கிறார்கள். எனவே அவர்களை மீட்க இலங்கை அரசு தீவிர முயற்சிகளை எடுத்து வருகிறது. இது தொடர்பாக இந்தியா உட்பட பல்வேறு நாடுகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

*– தினகரன்*

## ஆனையிறவு வெற்றிவிழாவிற்குத் தடை 500 பேர் கைது

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றின் மிகப் பெரிய வெற்றியான ஆனையிறவுப் படைத்தளம் விடுதலைப் புலிகளால் வெற்றிகொள்ளப்பட்டதன் வெற்றிவிழா, தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவினால் சிதம்பரத்தில் 7ம் திகதி ஞாயிறன்று நடைபெற ஏற்பாடாகியிருந்தது. எனினும் இதற்கு தமிழக அரசு சனியன்று சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் எனக்கூறி மாநாட்டிற்குத் தடை விதித்தது. எனினும் தடையை மீறி வெற்றி விழாவை நடத்துவதற்கு முயன்ற தமிழீழ ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் பழ. நெடுமாறன், பொதுவுடமைக் கட்சியின் தலைவர் மணியரசன் உட்பட 500ற்கும் மேற்பட்டவர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர்?

இதனையடுத்து, இது குறித்து பழ. நெடுமாறன் அவர்கள் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அவ் அறிக்கையில், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக தமிழ்நாட்டில் உருவாகிவரும் எழுச்சியை தி.மு.க அரசின் தடைகளால் ஒருபோதும் தடுத்துவிட முடியாது. தடையைத் தகர்த்து திட்டமிட்டபடி சிதம்பரத்தில் ஆனையிறவு வெற்றி மாநாட்டை நடத்துவோம். உயர் நீதிமன்றத்தில் தடையை எதிர்த்து வழக்குத் தொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ்க்குழுக்கள் ஊடுருவாமல் தடுக்க 24 மணிநேர கண்காணிப்பு

யாழ்.குடாவில் போர் தீவிரமடைந்துள்ளதால் பிற தமிழ்க்குழுக்கள் அங்கிருந்து தப்பித்து இந்தியாவிற்குள் ஆயுதங்களுடன் நுழைந்துவிடும் சாத்தியக்கூறுகள் உள்ளதாக இராமநாதபுரம் பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். இதனையடுத்து 24 மணிநேர கடற்கண்காணிப்பில் கடல் எல்லைக் கரையோர காவற்துறைப் பொலிசார் ஈடுபடும் அதே வேளை, கடற்கரைப் பிரதேசங்களில் விசேட சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டு இவர்களது ஊடுருவல்கள் கண்காணிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஈ.பி.டி.பி, டெலோ, புளொட் போன்ற குழுக்கள் இவ்வாறு ஊடுருவக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதனால் இவர்களை கடற்பகுதியிலேயே தடுத்து நிறுத்தி கைது செய்வதற்கு பொலிசார் ஈடுபட்டுவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை தமிழக மீனவர்களுக்கும் இவ்வாறான சந்தேகத்திற்கு இடமான படகுகள் குறித்து உடனடியாக கரையோர காவற்துறைக்கு அறிவிக்குமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

# ...ள் - ஐ வெற்றியும் ...ற உணர்வலைகளும்

## தமிழகத்தில் இருந்து...



✪ மனிதாபிமான அடிப்படையில் கூட இந்திய அரசு எந்த உதவியும் செய்யத் தேவையில்லை. விடுதலைப் புலிகளே மனிதாபிமானம் உள்ளவர்கள். 40,000 இலங்கை இராணுவத்தினரை பத்திரமாக வெளியேற்றிய பிறகு மீண்டும் ஈழத்தமிழர்களை கொன்று குவிப்பதற்கான ஒரு மறைமுக செயலாகத்தான், உதவியாகத்தான் இதை நாங்கள் கருதுகிறோம். இதை இந்திய அரசு அவர்கள் உள்நாட்டுப் பிரச்சனை என்று தொடர்ந்து சொல்லி வந்ததனால், அந்த உள்நாட்டுப் பிரச்சனையில் இந்திய அரசு தலையிடக்கூடாது. இந்தப் பிரச்சனைக்கு விடுதலைப் புலிகளோடு பேசி ஒரு நல்ல முடிவை சிங்கள அரசு காணவேண்டும் என்ற நெருக்கடியை இந்திய அரசு தரவேண்டும். பௌத்த பிக்குகள் இந்திய அமைதிப்படை இலங்கை சென்றபோது வெளியே போகவேண்டும் என்றவர்கள் இப்போது இந்திய இராணுவம் வரவேண்டும் என்று கேட்கிறார்கள். பண்டாரநாயக்கா-செல்வா ஒப்பந்தத்தில் இருந்து 40 ஆண்டுகாலமாக எந்த ஒப்பந்தத்தையும் இலங்கை அரசு மதித்ததே கிடையாது.


*- பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் திண்டிவனத்தில் வைத்து பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய பேட்டியொன்றில்.*



✪ இலங்கைப் பிரச்சனையில் இராணுவத் தலையீடு இல்லை என்று மத்திய அரசு எடுத்த முடிவு திருப்தி அளிக்கிறது. உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவி செய்யும்படி முன்பு போப்பாண்டவரும், ஐ.நா சபை பொதுச் செயலாளரும் வேண்டுகோள் விடுத்தபோது எந்த அரசும் அவர்களுக்கு உதவிசெய்யவில்லை.

1990ம் ஆண்டில் இந்திய அமைதிப்படையை வாபஸ் பெற்றுக்கொள்ளும்படி வற்புறுத்திய இலங்கை அரசிற்கு, இப்போது இந்தியாவிடம் இராணுவ உதவி கேட்க தார்மீக உரிமை இல்லை. கடந்த ஐந்து ஆண்டுகளில் ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட இலங்கை தமிழர்கள் தங்களது சொந்தமண்ணைவிட்டு இடம்மாறி ஏராளமான துன்பங்களை அனுபவித்து விட்டனர். எனவே இலங்கைத் தமிழர்களின் விருப்பத்திற்கு எதிராக எந்தச் செயலும் நடக்கக்கூடாது.

*- ம.தி.மு.க பொதுச்செயலர் வைகோ கடந்த வியாழனன்று பிரதமர் வாஜ்பாயை சந்தித்தபின்னர் பத்திரிகையாளர்கள், இலங்கைக்கு மனிதாபிமான உதவிசெய்வதற்கு மத்திய அரசு முடிவு செய்திருப்பது பற்றி கேள்வியெழுப்பியபோது தெரிவித்த கருத்து-*



✪ முதல்வரின் கருத்து தமிழக மக்களின் ஒட்டுமொத்தக்கருத்து. நான் அதனை வரவேற்கிறேன். இந்தக்கருத்துக்கு மாறாக வாஜ்பாயோ மத்திய அரசோ செயற்பட்டால் அது தமிழகத்திற்கு விரோதமான செயலாகவே கருதப்படும். 1987ல் இந்திய இராணுவத்தை எதிர்த்த பௌத்த பிக்குகள் இன்று இந்திய இராணுவத்தை அழைக்கிறார்கள். அவர்கள் அழைத்தால் செல்வதற்கும் வேண்டாம் என்றால் வெளியேறுவதற்கும் இந்திய இராணுவம் ஒன்றும் கூலிப்படையில்லை. இந்த சூழ்ச்சிக்கு இந்தியா பலியாகிவிடக்கூடாது.

*- தமிழீழ விடுதலை ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் பழ.நெடுமாறன் வெளியிட்ட அறிக்கையில்*

✪ இலங்கைப் பிரச்சனை பேச்சுவார்த்தை மூலமே தீர்க்கப்படவேண்டும். இந்தப்பிரச்சனை மிகவும் பதட்டமானது. இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த அரசியல் கட்சிகள் கட்டுப்பாட்டுடன் செயற்படவேண்டும்.

*- காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் அஜித்ஜோகி*



✪ சிறீலங்காவிற்கு இராணுவத்தை அனுப்பக்கூடாது. ஆயுதங்களும் கொடுக்கக்கூடாது. உணவுப்பொருட்களை செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அளிக்கலாம். அங்கு தமிழர்கள் தினம் தினம் கொல்லப்படுவதை பார்த்து வேதனைப்படுகிறோம். இந்தச் சாவுகள் நிறுத்தப்படவேண்டும். இதற்கு ஒரேவழி பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படவேண்டியதுதான். அப்படியான ஒரு தீர்வு ஏற்பட இந்தியா உதவவேண்டும். விடுதலைப் புலிகள் இதில் சம்பந்தப்பட்டு இருப்பதாக நினைக்கக்கூடும். இந்தியாவைப் பொறுத்தவரை அது தடைசெய்யப்பட்ட இயக்கம். அதை மத்திய அரசுதான் முடிவு செய்யவேண்டும்.

*- அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா*



✪ இந்திய அரசு இராணுவ உதவியோ, ஆயுத உதவியோ செய்ய முடியாது என்று திட்டவட்டமாக மறுத்துள்ளது. இந்த விடயத்தில் முடிவெடுப்பது மத்திய அரசின் உரிமை. இதில் தி.மு.க தலையிடாது. இந்த விவகாரத்தில் முடிவெடுக்கும் உரிமை பிரதமருக்கு உண்டு. இலங்கைப் பிரச்சனை பொங்கி தமிழகத்திற்குள் நுழைந்துவிடக்கூடாது. மத்திய அரசு எந்த முடிவெடுத்தாலும் அது தமிழர்களை பாதிக்கும் வகையில் இருக்கக்கூடாது என்று முதல்வர் தெரிவித்துள்ளார். இவரது இந்த அறிவிப்பு தமிழக முதல்வர் கலைஞரின் அரசியல் முதிர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது.

*- தமிழக ராஜீவ் காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி*



✪ இந்திய இராணுவத்தை அனுப்பி இலங்கை இராணுவத்திற்கு உதவி செய்ய வேண்டும் என்று இலங்கை அரசு கேட்டுள்ளது. அங்கு இந்திய இராணுவத்தை அனுப்பக்கூடாது. முன்பு அமைதிப்படை சென்றதை இப்போது காரணம் காட்டக்கூடாது. முன்பு அமைதிப்படை சென்றபோது நிலைமை வேறு. இப்போது அங்குள்ள நிலைமை வெறு. எனவே நமது இராணுவத்தை அங்கு அனுப்பக் கூடாது.

*- த.மா.க. தலைவர் ஜி.கே.மூப்பனார்*

✪ இலங்கையில் நடந்துவரும் போரைச் சமாளிக்க முடியாமல் சிங்கள இராணுவம் இந்திய அரசின் உதவியை நாடியுள்ளது. இந்திய இராணுவத்தை அங்கு அனுப்பவேண்டும் என்று இலங்கை அரசு வற்புறுத்தியுள்ளது. இந்திய இராணுவம் அங்கு சென்றால் அங்குள்ள தமிழர்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை உருவாகிவிடும். இந்திய இராணுவத்தை அங்கு அனுப்புவதில்லை என மத்திய அரசு அறிவித்தாலும் கூட, எங்கே அனுப்பிவிடுவார்களோ என்ற அச்சம் வேறு இருக்கிறது. எக்காரணம் கொண்டும் இந்திய இராணுவம் அங்கு செல்லக்கூடாது.

*- தமிழ்நாடு மாநிலக் காங்கிரஸ் அமைச்சர் ஞானசேகரன் சட்டசபையில்*

✪ ஏற்கனவே முன்பு ஒருமுறை இந்திய இராணுவம் அங்கு சென்றதன் விளைவாக ஏற்பட்ட வேதனையெல்லாம் நமக்குத்தெரியும். இதையெல்லாம் யோசித்து பலரையும் கலந்துபேசி மத்திய அரசிற்கு தன்னுடைய கருத்தை முதல்வர் தெரிவிக்கவேண்டும்

*- பாரதிய ஜனதா கட்சி வேலாயுதம் சட்டசபையில்*

✪ சிறீலங்கா இராணுவத்தின் பிடியில் இருந்து ஈழம் மலரவேண்டும் என்பதற்காக அங்கு போராளிகள் போராடி வருகிறார்கள். இந்த நிலையில் தமிழர்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் இந்திய இராணுவம் அங்கு அனுப்பப்பட்டு விடுமோ என்ற அச்சம், ஏக்கம் தமிழர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

*- பாட்டாளி மக்கள் கட்சி ஜி.கே.மணி சட்டசபையில்*



✪ இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த போரின் போது ஒரு காலகட்டத்தில் இந்திய அரசு இலங்கைக்கு அமைதிப் படையை அனுப்பியது. அதேபோல் இப்போது இலங்கைக்கு அனுப்பக்கூடாது. இலங்கைப் பிரச்சனையில் மத்திய அரசு தமிழக முதல்வரை அழைத்துப் பேசியதை வரவேற்கிறேன்.

*- த.மா.க முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம்*



✪ இந்தியாவிடம் இராணுவ உதவிகோரி கதிர்காமர் டில்லி வந்திருப்பதை கண்டித்து, கதிர்காமரின் கொடும்பாவி எரிப்பு போராட்டத்தையும், சிறீலங்காவிற்கு மத்திய அரசு எந்தவித உதவியும் செய்யக்கூடாது என்பதையும் வலியுறுத்தி ஆர்பாட்டம் நடாத்த திட்டமிடப்பட்டிருந்தது. சிறீலங்காவிற்கு இராணுவ உதவி அளிக்கப்படமாட்டாது என்று அரசு அறிவித்துள்ள நிலையில் இவ்விரு போராட்டங்களும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. தற்போது சிறீலங்கா அரசு கேட்டுக் கொண்டதற்காக இராணுவ உதவி குறித்து பரிசீலனை செய்யும் இந்திய அரசு, அப்பாவித் தமிழீழ மக்களும், போராடும் இயக்கங்களும் பாதிக்கப்பட்டபோது ஏன் கண்டுகொள்ளவில்லை? இது இந்தியாவின் அணிசேராக் கொள்கைக்கு ஒரு சார்புக்கொள்கை அல்லவா? அதேபோல் தார்மீக அடிப்படையில், மனிதாபிமான அடிப்படையில் உதவிகளைச் செய்யப்போவதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் அறிவித்திருப்பது கவலைக்குரியது.

இந்தப் போர்வையில் சிறீலங்காவின் இராணுவத்திற்கு வலிமை சேர்க்கும் எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளக்கூடாது. அப்படி ஒரு சூழல் ஏற்பட்டால் தமிழ் நாட்டில் கடும் எதிர்ப்பு உருவாகும். தற்போது சிங்கள அரசைவிட வலிமையாக வளர்ந்துள்ள தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டும்.

*- பெரியார் திராவிடக்கழகப் பொதுச் செயலர் விடுதலை இராசேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில்*

✪ இலங்கையில் தமிழர்கள் தங்கள் சுய உரிமைப் போராட்டத்தில் இப்போது ஒரு கட்டத்தை எட்டி, வெற்றிபெறும் சூழ்நிலையில் உள்ளனர். அவர்களை நசுக்குவதற்கு சிங்கள அரசு உலகநாடுகளின் உதவியைக் கோரியுள்ளது. இந்திய அரசு இராணுவத்தையோ, ஆயுதங்களையோ அனுப்பக்கூடாது. உலக நாடுகளும் இலங்கை அரசிற்கு உதவக்கூடாது. இலங்கையில் எப்படிப்பட்ட அரசு அமையவேண்டும் என்பதை அவர்களே முடிவு செய்து கொள்ளட்டும். தேவைப்பட்டால் இந்திய அரசு இலங்கைத் தமிழ் மக்களுக்கு எது தேவையோ அந்த உதவிகளை மட்டும் செய்ய முன்வரவேண்டும்.

*- புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி*



✪ யாழ்ப்பாணத்தில் சிங்கள இராணுவத்தினரால் இனி சமாளித்து விடுதலைப் புலிகளை எதிர்கொள்ள முடியாது என்ற நிலையில் இந்தியா, இஸ்ரேல், பாகிஸ்தான் போன்ற பல நாடுகளின் உதவியை சிறீலங்கா அரசு நாடியுள்ளது. மத்திய அரசு ஏற்கனவே செய்த தவறை மீண்டும் செய்துவிடக்கூடாது. இந்திய இராணுவம் இலங்கைக்கு அனுப்பப்பட்டதன் விளைவுகள் உலகறிந்த ஒன்றாகும். இலங்கைக்கு படைகளையோ, இராணுவ உதவிகளையோ ஒருபோதும் இந்தியா செய்து வம்பில் மாட்டிக்கொள்ளக்கூடாது. இந்த உணர்வு தமிழ்நாட்டு மக்கள் அனைவரினதும் ஒருமித்த கருத்தாகும். மத்தியில் உள்ள வாஜ்பாய் அரசு இந்த உணர்வுகளை மதித்து இராணுவத்தை அனுப்பமாட்டோம் எனக் கூறியுள்ளது வரவேற்கத்தக்கது. ஆனால், மற்ற உதவிகள் என்ற சாக்கில், மறைமுகமாக நடவடிக்கைகள் எதுவும் நடைபெறாமல் பாப்த்துக் கொள்வதும் அவசர அவசியமாகும்.

*- திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி.வீரமணி*

✪ இலங்கையில் மிகப்பெரிய வெற்றியை சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள் தமிழர்கள். வெகுவிரைவில் தனித்தமிழீழம் மலரும். ஐ.நா சபையிலும் தமிழ்க்கொடி பறக்கும்.

*- ம.தி.மு.க. மத்திய அமைச்சர் கண்ணப்பன்*

✪ இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் நடைபெறும் சண்டையில் இராணுவத்திற்கு ஆதரவாக இந்திய இராணுவத்தை அனுப்பக்கூடாது. சண்டையில் பாதிக்கப்பட்டு அகதிகளாக வரும்போது மக்களுக்கு உணவும், மருந்துவ சிகிச்சையும் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாக வழங்கப்படவேண்டும். இலங்கைக்கு ஆதரவாக வெளிநாட்டு இராணுவமோ, ஆயுதங்களோ கிடைக்காதவாறு இந்தியா உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். தேவைப்பட்டால் இந்தியக் கடற்படைக் கப்பல்களை இலங்கையைச் சுற்றி நிறுத்தி வெளிநாட்டுப் படைகள், ஆயுதங்கள் வராதவாறு கண்காணிக்கவேண்டும்.

*- தமிழர் பூமி கட்சியின் தலைவர் கு.ப.கிருஷ்ணன்*

# ஐ.நா. தலையிட வேண்டும் பா.ம.க. தீர்மானம்

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ஐ.நா. சபை தலையிட வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. கடந்த வெள்ளியன்று திருச்சி பெமினா விடுதியில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்திலேயே இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாக அக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

★ இலங்கையில் விடுதலைப் புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டுள்ள 40,000 இராணுவத்தினரைக் காப்பாற்ற இந்தியாவையும் மற்ற உலக நாடுகளையும் உதவிக்கரம் நீட்டுமாறு இலங்கை அரசு அழைப்பு விடுத்துள்ளது. இப்படிப்பட்ட நிலையில் கடந்தகால அனுபவத்தைக் கணக்கில் கொண்டு இந்திய இராணுவத்தையோ, ஆயுத உதவிகளையோ அளிப்பதில்லை என்று மத்திய அரசு முடிவு எடுத்திருப்பதை செயற்குழு வரவேற்கிறது.

★ இலங்கைப் பிரச்சினை தீர தமிழீழம் அமைவதே சரியான, நீண்டகாலத் தீர்வாக இருக்கும் என்று பாட்டாளி மக்கள் கட்சி கருதுகிறது. இதனால் இந்திய அரசு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும்.

★ இலங்கையில் அமைதியை நிலைநாட்ட வருவதாகக்கூறி இலங்கையிலும், இந்துமகா கடற்பகுதியிலும் வல்லரசுகள் ஆதிக்கத்தை நிலைநாட்ட விடாமல் இந்திய அரசு பார்த்துக்கொள்ளவேண்டும்.

★ இலங்கையில் இப்போது போராட்டம் உச்சக் கட்டத்தில் இருப்பதால் இலட்சக்கணக்கான தமிழீழ மக்கள் பாதிப்பிற்கு உள்ளாகி இருக்கின்றனர். அவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உணவும், மருத்துவ உதவிகளும் செய்து கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது.

★ ஐ.நா. சபை இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தலையிட்டு தனி ஈழம் அமைய ஏற்பாடு செய்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இலங்கையில் முடிவிற்கு கொண்டுவரவேண்டும்.

★ இலங்கை இப்போது இஸ்ரேல் நாட்டின் உதவியை நாடியுள்ள நிலையில், ஒருதலைப்பட்சமாக இலங்கைக்கு இஸ்ரேல் உதவக்கூடாது என்றும், இதேபோல் மற்ற நாடுகளும் இலங்கைக்கு உதவ முன்வரக்கூடாது என்றும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

# சிங்களவர்களுக்குத் தரும் மருந்து தமிழர்களைக் கொல்லும் வெடிமருந்து

சிறீலங்காவிற்கு எவ்வித உதவியும் வழங்கக் கூடாது என தமிழ்நாடு திராவிடர் கழகத்தினர் சனியன்று பேரணி நடத்தியுள்ளனர். கட்சியின் தலைவர் கு.ராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இப் பேரணியில் கலந்துகொண்ட தமிழின உணர்வாளர்கள், சிங்களவர்களுக்குத் தரும் மருந்து தமிழர்களைக் கொல்லும் வெடிமருந்து, தமிழக மீனவர்களைச் சுட்ட சிங்களவனுக்கு உணவும் மருந்தும் பரிசா?, இந்திய அரசே சிங்கள இராணுவத்திற்கு உதவாதே, ஆகிய கோசங்களை எழுப்பியவாறு பேரணியாகச் சென்றனர்.

எனினும் பேரணியில் கலந்துகொண்ட அனைவரையும் பொலிசார் தடுத்து நிறுத்தி கைது செய்து கொண்டு சென்றனர். பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

## மருந்துகள் தயார் நிலையில்

யாழ்.குடாவில் உள்ள படையினருக்கு மனிதாபிமான ரீதியில் மருத்துவ உதவியைமட்டும் வழங்கமுடியும் என இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கடந்த வெள்ளியன்று தெரிவித்திருந்தார். இதற்கான தயார் நிலையில் தற்போது திருவானந்தபுரம் விமானப்படைத் தளத்தில் கடந்த வியாழனன்று இரு விமானங்கள் மூலம் மருந்துப் பொருட்கள், மற்றும் இதரப் பொருட்களும் விமானத் தளத்திற்கு கொண்டு வரப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திற்கும் விமானப்படைத் தளத்திற்கும் இடையில் அவசர தொலைத் தொடர்பு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

# ஜஸ்வந்த் – வைகோ சந்திப்பு

புதனன்று புதுடில்லியில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங்கை சந்தித்து உரையாற்றிய மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளர் வைகோ, 1987ல் ஜெயவர்த்தனா விரித்த வலையில் சிக்கி இந்தியப் படையை இலங்கைக்கு அனுப்பியதால் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களைப் பற்றி தெரிவித்ததுடன் 17 ஆண்டுகளாக இலங்கையில் தமிழர்கள் திட்டமிட்ட ரீதியில் தாக்கப்பட்டு வருவதையும் தெளிவுபடுத்தியதுடன் இலங்கைப் பிரச்சனையில் இந்தியா இராணுவ ரீதியில் தலையிட வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார்.

# தப்பியோடுபவருக்கு ஒருவருடம் சிறை

சிறீலங்காப் படையில் இருந்து தப்பியோடும் படையினர் கைது செய்யப்படும் பட்சத்தில் அவர்களுக்கு குறைந்தது ஒரு ஆண்டு சிறைத்தண்டனை வழங்கும் புதிய சட்டமொன்று சிறீலங்கா அரசினால் கொண்டுவரப்பட்டுள்ளது.

யாழ். குடாவில் ஏற்பட்டுள்ள நிலைமையை அடுத்து, கடந்த சில நாட்களாக படையில் இருந்து தப்பியோடுபவர்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துள்ளமையை அடுத்தே இப் புதிய சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# மனிதாபிமான உதவி வழங்கத் தயார் – அமெரிக்கா

சிறீலங்கா அரசு அமெரிக்காவிடம் மனிதாபிமான உதவிகளை வழங்கும்படி கேட்டால் உதவி செய்யத் தயாராக இருக்கிறோம். ஆனாலும், இதுவரை எந்தவித கோரிக்கையும் வரவில்லை. இதற்கு முன்பு மனித உரிமை விதிமுறைகளை ஆராய்ந்த பிறகு சிறீலங்காவிற்கு சில இராணுவ தளவாடங்களை கொடுத்திருக்கிறோம். ஒரு சில இராணுவப் பயிற்சிகளும் அளித்திருக்கிறோம். ஆனால் தற்போதைய சூழ்நிலையில் அத்தகைய உதவிகேட்டு எவரும் வரவில்லை என அமெரிக்க வெளியுறவுத் துறை அதிகாரி ரிச்சார்ட் பவுச்சர் தெரிவித்துள்ளார்.

# இந்திய இராணுவத் தளபதிகள் எதிர்ப்புக்குரல்...

## புலிகளைப் பகைக்கக் கூடாது!

- லெப்.ஜெனரல் பிரார்
(முன்னாள் இந்தியக் கிழக்குப் பிராந்திய தளபதி)

சிறீலங்கா இராணுவத்தைக் காப்பாற்ற இந்தியா ஒரு இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டால் அது மிகப்பெரும் தவறாக அமையும். நாங்கள் சிறீலங்கா இராணுவத்திற்கு இராணுவ உதவி வழங்குவோமானால் அது இந்தியத் தமிழர்களைக் கோபப்படுத்தும்.

ஏற்கனவே ஏராளமான வெளிநாட்டு இனக்குழுக்கள் இந்தியாவில் சிக்கலை ஏற்படுத்துகின்றது. அவர்கள் காஷ்மீரிலும் வடகிழக்கு மாநிலங்களிலும் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றனர். உண்மையில் நாங்கள் புலிகளை பகைநிலைக்குக் கொண்டுசெல்லத் தேவையில்லை. அப்படிப் பகைத்தால் தென்பிராந்தியம் அனைத்தும் உள்நாட்டுக் கலகக்காரர்களின் விளைநிலமாகிவிடும்.

முன்னைநாள் இந்தியப் பிரதமர் பெரும் தவறு செய்துவிட்டார். இந்தியா தவறுகளில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும். வரலாறு மீளத் திரும்ப அனுமதிக்கக் கூடாது.

உலக சமூகம் சிறீலங்கா இராணுவத்தைக் காப்பாற்ற முனைவதை பாராட்டாது, பாக்கிஸ்தான் தலையீடு இந்தியாவுக்கு அச்சுறுத்தலேயில்லை. இந்தியக் கடற்படை பாக்கிஸ்தான் கடற்படையிலும் மிகப் பலமானது.

★ ★ ★

## இஸ்ரேலின் நேரடி தலையீடு சாத்தியமற்றது!

- லெப்.ஜெனரல் றொட்ரிக்கோ
(முன்னாள் இந்திய இராணுவ பிரதம தளபதி)

இந்தியா இவ்விடயத்தில் தலையிடக்கூடாது. இது குறுங்கால அரசியல் இலாபங்களையும் நீண்டகால விலையைக் கொடுக்க வேண்டியிருக்கும். சிறீலங்கா இராணுவத்திற்கு உதவுவதற்குச் செல்ல முற்பட்டால் அது புலிகளின் எதிர்ப்பை சம்பாதிக்க வேண்டிவரும். அது கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்தாமல் விடாது. எமது தேசியத் தேவையில்லாது ஏன் ஒருவர் அங்கு செல்லவேண்டும்? தேசியத் தேவையை மனதில் வைத்து சூழ்நிலையை ஆராய வேண்டும். சிறீலங்காவில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வது நாட்டின் இளம் இராணுவத்தினர் மேல் கடும் சுமையை ஏற்படுத்தும்.

ஏராளமான விடயங்களில் பாக்கிஸ்தான் புத்திபூர்வமற்ற முறையில் நடந்து கொள்கின்றனர். அவர்களை அங்கு [யாழ்ப்பாணம்] நிறுத்தும் எண்ணம் உண்டா? அவர்கள் சிறீலங்காவை முஸ்லீம் நாடாக்கவா முயல்கின்றனர். இஸ்ரேல், மேற்கு ஆசிய விடயங்களில் மூழ்கியுள்ளதால் அங்கு [யாழ்.] செல்லும் சந்தர்ப்பங்கள் மிகக்குறைவு.

நாங்கள் புலிகளைக் கோபப்படுத்தக் கூடாது. அது தென்னிந்தியாவை உள்நாட்டுக் கலகக்காரர்களின் விளைநிலம் ஆக்கிவிடும்.

★ ★ ★

## சிறீலங்கா எங்களுக்குத் துரோகம் செய்தது!

- லெப்.ஜெனரல் கல்கட்
(முன்னாள் இந்திய அமைதிப்படைத் தளபதி)

சிறீலங்காவால் அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டாலும் இந்தியா மீள அங்கு போகக்கூடாது. சிறீலங்கா இந்தியப் படைக்குத் துரோகம் செய்தது. புலிகளுக்கு ஆயுதம் கொடுத்தது. 1987 உடன்பாட்டுக்கு அமைய தமிழர்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் செய்யவில்லை. இனச்சிக்கல் அவர்களால் மட்டுமே இறுதியில் தீர்க்கப்பட வேண்டியது.

சிறீலங்காப் படைகளின் எண்ணிக்கை இருக்க வேண்டியதிலும் பார்க்க மூன்று மடங்கு அங்கு [யாழில்] உள்ளது. அவர்கள் கடற்பாதையைப் பாவித்தனர். தரைப்பாதையில்லாதது அவர்களிற்கு சிரமமானதாக இருக்கலாம். ஆனால் அவர்கள் எதையோ ஒன்றை மக்களிடமிருந்து மறைக்கிறார்கள். அல்லது புலிகளிடம் போரிடும் அளவு மனோபலம் அவர்களிடம் இல்லை.

சிறீலங்கா, அகதிகளைக் கையாள இந்தியாவை அழைக்கின்றதே தவிர நோயினையல்ல.

# எந்தக் காலத்திலும் புலிகளை வெல்லமுடியாது

## – டாக்டர் ராமதாஸ் –

40,000 சிங்கள இராணுவ வீரர்களை விடுதலைப் புலிகள் சுற்றி வளைத்துள்ளனர். தமிழர்களின் இந்த வீரத்தைக்கண்டு தாய்த் தமிழக மக்கள் மிகுந்த மகிழ்ச்சியில் உள்ளனர். இலங்கை அரசு தோல்வியை ஒத்துக்கொள்ளவேண்டும். அமைதிப்பேச்சு நடத்த இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளிற்கும் இதுவே சரியான நேரமாகும். பாகிஸ்தான் அல்லது வேறு நாடுகளோ இலங்கைக்கு இராணுவம் அனுப்பினாலும் அங்குள்ள தமிழர்களை காக்க இந்திய அரசு உதவ வேண்டும். இராணுவத்தையும் அனுப்பி இலங்கைத் தமிழர்களை காக்க வேண்டும். உலக நாடுகள் அனைத்தும் இலங்கை அரசிற்கு, ஆயுதங்களைக் கொடுத்து உதவினாலும் எந்தக் காலத்திலும் சிறீலங்கா படைகளினால் விடுதலைப் புலிகளை வெல்ல முடியாது என பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இவ் வாரம் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வி சுந்தரலிங்கம் கடம்பன், சிவநாதன் ஜெயந்தன் பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

# கவிதை முற்றம்

## முயற்சி

சிலந்தி வலையைப் பாருங்கள்
சின்னஞ் சிறிய பூச்சியே
வளைந்து வளைந்து புதுமையாய்
வட்ட வலையைப் பின்னுமே!



தேனீக் கூட்டைப் பாருங்கள்
திறமையோடு ஒற்றுமை
பேணி, வீட்டைக் கட்டுமே
பெரிய முயற்சி வேண்டுமே!

எறும்புப் புற்றைப் பாருங்கள்
என்னைப் போன்ற எறும்புகள்
அருமையான முயற்சியால்
அழகுப் புற்றைச் செய்தன!

குருவிக் கூட்டைப் பாருங்கள்
குடுக்கை போன்று பின்னியே
விரைவில் கட்டி முடிக்குமே
வேண்டும் முயற்சி என்றுமே!

*- பெருஞ்சித்திரனார்*
*(நன்றி: தமிழ்ச் சிட்டு)*

# அறிந்து கொள்ளுங்கள்

## வண்ணத்துப் பூச்சி

உலகம் முழுவதும் பல அளவுகளிலும் வண்ணங்களிலும் காணப்படும் அழகான பூச்சி இது. இறக்கைகளில் இருக்கும் நுண்ணிய வண்ணச் செதில்களைத் தொட்டால் உதிரும்.


இது உடல் தலை, தொண்டை வயிறு என்ற மூன்று பகுதிகளைக் கொண்டது. தலையில் இரு கூட்டுக் கண்களும் இரு உணர் கொம்புகளும் இருக்கும். மணத்தை நுகரவும் ஒலியைக் கேட்கவும் இவை உதவுகின்றன. சுவையைக் கால்களால் அறிகின்றன. தாடை இல்லாததால் உணவை மெல்ல முடியாது. நாக்கு நீண்ட குழல் போல இருக்கும். மலருக்குள் இதை நுழைத்து பூந்தேனை உறிஞ்சும்.



தொண்டைப் பகுதி மூன்று துண்டுகளாக உள்ளது. ஒவ்வொன்றிலும் இரு கால்கள். முன்கால்கள் மிகச் சிறியவை. உபயோகமில்லாதவை. மற்றவை பலம் இல்லாதவை. எனவே நடப்பதற்குப் பயன்படுத்தப் படுவதுஇல்லை.
முன் இறகுகள் நடுப்பகுதியிலும் பின் இறகுகள் மூன்றாவது பகுதியிலும் அமைந்துள்ளன. இவை மென்மையாக இருந்தபோதிலும் பறக்கும்போது ஏற்படும் அழுத்தத்தைத் தாங்கக் கூடியவை.

வயிறு பல பிரிவுகளைக் கொண்டதாக இருக்கும். கடைசியிலுள்ள சில, இன உறுப்புக்களாக மாறி இருக்கும். எல்லா பிரிவுகளிலும் சுவாசிப்பதற்கு குழல்கள் உள்ளன. இணைகூடத் துணையைக் கவர வயிற்றுப் பகுதி ஒரு வாசனையை வெளியிட்டுக் கொண்டிருக்கும்.

பெண், ஆயிரம் முட்டைகளுக்கு மேல் இடும். முட்டை, புழு, கூட்டுப்புழு, பூச்சி என்ற நான்கு கட்டங்கள் உண்டு. முட்டை சில நாள்களில் பொரித்து புழுவாகும். பூச்சியாக மாறியதும் கூட்டைக் கரைக்க ஒரு திரவத்தை வெளியிடுகிறது. பத்து நிமிடங்களுக்குப் பிறகு பூச்சி வெளியே வந்துவிடும். முப்பது நிமிடங்களில் பறக்கத் தயாராகிவிடும். பூச்சி தோன்றியபோது இருந்த அளவே இறுதி வரை இருக்கும். மேற்கொண்டு வளராது.



# முல்லாவின் கதை படியுங்கள்

## பால் விற்கும் குதிரை



முல்லா நஸ்ருதீன் விறகு வியாபாரம் செய்துகொண்டிருந்தார். விறகைச் சுமந்து வர ஒரு குதிரை இருந்தால் நல்லது என்று நினைத்தார். மலிவான விலைக்கு ஒரு குதிரை கிடைக்குமா என்று விசாரித்தார்.

பால் வியாபாரி ஒருவன் தன் குதிரையை முல்லாவுக்கு விற்க முன்வந்தான். முல்லா அந்தக் குதிரையை மலிவான விலைக்கு மகிழ்ச்சியுடன் வாங்கிக்கொண்டார்.

மறுநாள்!

குதிரையின் மீது விறகுச் சுமையை ஏற்றினார் முல்லா. அவரும் ஏறிக்கொண்டார். வழக்கமாகத் தாம் விறகு விற்கும் வீதிக்குக் குதிரையைச் செலுத்தினார்.

குதிரைக்கு அந்த வீதி மிகவும் பழக்கமானது. பால்க்காரன் அந்த வீதியில்தான் பால் விற்பனை செய்தான். அதனால் குதிரை வழக்கமாக நிற்கும் வீட்டுக்கு முன்னே நின்று கனைத்தது. உடனே வீட்டிலிருந்த பெண்மணி பால் வாங்கப் பாத்திரத்துடன் வந்தாள். குதிரையின் மீது விறகு இருப்பதைக் கண்டு, 'என்ன இது! நான் பால்தான் வந்திருக்கிறது என்று நினைத்தேன். நீங்கள் விறகு கொண்டு வந்திருக்கிறீர்களே! உங்களை யார் இங்கே அழைத்தது?' என்று சத்தமிட்டு விட்டு உள்ளே போனாள்.

முல்லா விறகு விற்கும் வீட்டின் முன் குதிரையை நிறுத்துவார். அங்கே அது கனைக்காது. அதிக நேரமும் நிற்காது. ஆனால் பால் வாங்கும் இடத்திலெல்லாம் தவறாமல் நின்று உரக்கக்கனைக்கும். பாலை எதிர்பார்த்து வெளியே வருபவர் விறகைப் பார்த்து முல்லாவிடம் சண்டைபோட்டனர்.

முல்லாவுக்கு ஒரே கோபம்!

'ஏய் குதிரை! வியாபாரம் செய்வது நீயா... நானா? நீயாக ஒரு வீட்டின் முன் நின்று கனைக்கிறாய்! அதைக்கேட்டு வெளியே வருபவர் உன்னை விட்டுவிட்டு என்னிடம் சண்டைக்கு வருகிறார்களே!'

முல்லா குதிரையுடன் கோபத்தோடு சண்டை போடுவதைக் கண்டு வீதியிலிருந்தோர் விலாவலிக்கச் சிரித்தனர்.

# இது உங்களுக்கான பக்கம்...

கணினி வலை (இன்டர்நெட்) யில் உங்களுக்காக புதிய பக்கம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.
www.tamoul.com என்ற தளத்தில் நுழைந்து, எமது நாட்டின் பல்வேறு தகவல்களையும் பிரெஞ்சுமொழியில் அறிந்து கொள்ளுங்கள். இத் தளத்தினை உங்களுடன் கல்வி கற்கும் ஏனைய நாட்டு நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தி வையுங்கள்.

# வினா-விடை முற்றம்

***கடந்தவார விடை:***

1. பாதரசம்.
2. வெளிச்சம் ஒலியிலும் பார்க்க வேகம் கூடியதால்.
3. ரோம் நகரில் உள்ளது. இது போப்பாண்டவரின் நகராகும்.
4. அதில் அதிக உப்பு இருப்பதால்.
5. பசு, வெள்ளாடு, செம்மறியாடு, ஒட்டகம், எருமை, லாமா, துருவமான், யாக்.
6. அரிசி.

## வினா-விடை முற்றம்

1. உலகில் பெரிய பாலைவனம் எது?
2. ஐந்து பெருங்கடல்களின் பெயர்களைக் கூறுக?
3. இப்பொழுது ஈரான் என்று வழங்கும் நாட்டுக்கு பழைய பெயர் என்ன?
4. வெண்கடல் எங்கே இருக்கிறது?
5. சுயஸ்கால்வாய் எக்கடல்களை இணைக்கிறது?
6. நாம் சீனியைப் பெற்றுக்கொள்ளும் இரண்டு பயிர்கள்?

*விடைகள் அடுத்தவாரம்.*

# கண்டுபிடியுங்கள்


| | | |
|---|---|---|
| | | |
| 7 | 5 | 3 |
| | | |

| | | |
|---|---|---|
| 6 | 1 | 8 |
| 4 | 9 | 2 |

அருகே உள்ள கட்டத்திற்குள் இருக்கும் எண்களை மேல் கட்டத்திற்குள் நிரப்பி, இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், குறுக்கு, நெடுக்கு என்று எப்படிக் கூட்டினாலும், கூட்டுத்தொகை 15 வரவேண்டும்.

முயன்றுபாருங்கள்! முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.

கடந்தவார விடை:




3வது சாவி



# அமெரிக்க மக்களின் மனங்களில் நிற்கும் ஹிலாரி கிளின்டன்

இன்று அமெரிக்க மக்களைக் கவர்ந்துள்ள பெண்மணியாக திருமதி ஹிலாரி கிளின்டன் காணப்படுகிறார். சமீபத்தில் இவர் நியூயோர்க் செனட் உறுப்பினர் பதவிக்கு போட்டியிடுவதற்காக மக்கள் மத்தியில் என்றுமில்லாதவாறு மிக அன்னியோன்னியமாக பிரச்சாரங்களில் ஈடுபட்டதே அதற்குக் காரணமென அங்குள்ள பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. சமீபத்தில் அங்கு நடைபெற்ற மக்களிடையேயான கருத்துக்கணிப்பில் திருமதி ஹிலாரி கிளின்டனையே பெரும்பான்மை மக்கள் அப்பதிவிக்கு விரும்புகிறார்கள் என்பது தெரிந்துள்ளதாம்.

இவ்வாறு இவர் பிரச்சாரத்தின்போது பெருமளவில் பொது மக்களிற்கு நன்கொடைகளை வழங்குவதையும் மற்றும் பொதுப் பணிகளில் ஈடுபடுவதையும் காணக்கூடியதாகவும் இருக்கிறதென்று அங்குள்ள பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. இது மட்டுமல்லாது, திருமதி ஹிலாரி கிளின்டன் பெண்கள் நலன் காக்கும் விடயங்களிலும் மிக அக்கறையாய செயற்பட்டுவருகிறார் என்பதும் இங்கு குறிப்பிடவேண்டியதொன்றாகும்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள பெண்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் பின்தங்கியதாகவே காணப்படுகிறது. இதன் காரணமாக அங்கு இயங்கிவரும் மகளிர் இயக்கங்கள் பின்வரும் நோக்கங்களைக் கொண்டு தம் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

1. தேர்தல்களில் மகளிர் அதிக அளவில் பங்கேற்கும்படி செய்வதற்காக அங்குள்ள அரசியல் கட்சிகளை ஊக்குவித்தல்.
2. மகளிர்க்கான வாய்ப்புகளை விரிவாக்கும் வகையில் கொள்கைகளையும் தொழில் நடைமுறைகளையும் வகுத்தல்.
3. மகளிர்க்குப் பயிற்சியும், கடனுதவியும் வழங்கி புதிய தொழில் முயற்சியை ஊக்குவித்தல்
4. ஆண் பெண் சமத்துவம் பற்றிய பொது விவாதங்களுக்கு ஒழுங்குசெய்தல்
5. மகளிர்க்கு எதிரான வன்முறையை எதிர்த்துப் போராடுதல்
6. குழந்தைகளுக்குக் கல்வியறிவு ஊட்டுவதில் பொறுப்புகளை பெற்றோர் பகிர்ந்து கொள்வதை ஊக்குவித்தல்.
7. ஒற்றைப்பெற்றோர், பெரும்பாலும் பெண்களுக்கு அரசு தொடர்ந்து உதவுவதை ஊக்குவித்தல்.
8. மகளிர் கல்வி நிலையைப் பேணி வலுப்படுத்தல்.
9. தாய் - சேய் நலக்கவனிப்பில் உலகச் சுகாதார அமைவனத்தின் இலக்குகளை அடைதல்.
10. புதிய சட்டங்களை இயற்ற வலியுறுத்தல்.

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்
தமிழ் அச்சகம்
(மக்கள் கடை அருகில்)
இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500–க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.
அனைத்து அச்சு வேலைகளும் குறைந்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.
திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணி வரை
59, Rue Louis Blanc, 75010 Paris - Tel&Fax: 01 42 09 60 64 or 06 13 12 35 42
அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!
திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ் கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்

# நீ பெண் குழந்தை; நீதான் விட்டுக்கொடுக்க வேண்டும்!

கற்காலத்திலிருந்து மனிதன் கணினி யுகம் வரை வளர்ந்துவிட்டான். ஆனால் இன்னும் ஏனோ சீதனத்தை மறக்கவில்லை. அதே போல் பெண்களை அடக்கும் தன்மையையும் சிறுமைப் படுத்தும் தன்மையையும் கூட மறக்கவில்லை.

இவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்த மனிதர்கள் ஏன் இன்னும் பெண்கள் விடயத்தில் பின் தங்கியுள்ளார்கள்.

முக்கியமாக ஆசிய நாட்டு ஆண்களும், முஸ்லிம் ஆண்களும் எப்போதும் பெண்கள் ஏதோ ஒரு விதத்தில் தமக்கு அடங்கிப்போக வேண்டியவர்கள் என்றுதான் நினைக்கிறார்கள். அவர்களது அந்த நினைவுகளை அந்தக் காலந்தொட்டு பெண்கள் மனதிலும் விதைத்து அல்லது திணித்து வந்திருக்கிறார்கள். காலங்காலமாக வந்த இத்திணிப்பினால் பெண்களும், நாம் அடங்கிப்போக வேண்டியவர்கள்தான் என்ற நினைப்பிலேயே வாழ்ந்துவிட்டார்கள்.

இரண்டு வரிக்குறளிலே காவியம் படைத்த திருவள்ளுவரில் இருந்து இக்காலத் திரையுலகக் கவிஞர்கள்வரை, பெண்கள் விடயத்தில் ஒரு வஞ்சகமாகவே நடந்துகொண்டிருக்கிறார்கள்.

மானே, தேனே, கனியே, கற்கண்டே என்று பெண்களை வர்ணிக்கும் அதே கவியுள்ளங்கள்தான் பெண்களை அடங்கிப்போகும் படியும் கவிபுனைந்துள்ளன.

இந்த வஞ்சகங்கள் எதுவும் புரியாமலே பெண்கள் வாழ்ந்து விட்டதுதான் மிக மிக வருத்தமான விடயம்.

ஆணென்ன? பெண்ணென்ன? எல்லோரும் மனிதப்பிறவிகள்தான். ஏன் இது மறுக்கப்பட்டது? மறைக்கப்பட்டது?

முதலாம் உலகப்போர் வரை ஐரோப்பியப் பெண்கள் கூட வீட்டுக்குள் ஒடுங்கிக் கிடந்தார்களாம். போரின் காரணமாக தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டு, அவர்கள் தொழிற்சாலைகள், நிலக்கரிச் சுரங்கங்கள், வர்த்தக நிறுவனங்கள் போன்றவற்றில் வேலைக்கமர்த்தப்பட்டபோதுதான் தமது வலிமையை அப்பெண்கள் உணர்ந்து, விழித்தெழுந்து கோசமிட்டார்களாம். ஏன் இன்னும் ஆசியப் பெண்களான நமது தமிழீழப் பெண்கள் கூட...

நாற்குணம் என்றும்
நற்பண்பு என்றும்
வேலிகள் போட்டுப் பெண்ணை
வீட்டுக்குள் அடைத்தோர் நாண
போர்க்கொடி ஏந்தி அங்கே
நாட்டினைக் காக்கின்றார்கள்.
இருந்தும்...
சீதனம் என்னும் சிறுமை
இன்னும் சீராக அழியவுமில்லை!
ஆணாதிக்கமும் அடக்குமுறையும்
முற்றாக ஒழியவுமில்லை!

புகுந்த வீடுதான் பெண்ணுக்கு நிரந்தரமாம். பிறந்த வீட்டை மறந்திடவேண்டுமாம். இது என்ன நியாயம்?

ஆணுக்கு மட்டும் அம்மா, அப்பா, சகோதரர்கள் என்று பாசம் பொங்கி வழிய வேண்டுமாம்.

பெண்ணுக்கு பாசம் பெற்றவரிடம் இருந்தாலே பாவமாம். இது எந்தச் சட்டப்புத்தகத்தில் உள்ளது?

ஆண்கள் தமக்காகவே எழுதி வைத்த சட்டம். பேதைப் பெண்கள் காலங்காலமாக இந்தப் பொய்யான சட்டத்துக்குப் பயந்து, வெந்துமாயும் மனதைக் கூட வெளியில் திறந்து காட்டத் துணிவில்லாது, பொங்கிவரும் கண்ணீரை தமக்குள்ளே பூட்டிவைத்து தமக்குள்ளேயே பொருமி மடிந்து விட்டார்களே. இந்த நிலையில் இன்றும் இன்னும் எத்தனை பெண்கள்! ஆண்கள் பெண்களை தமக்கு அடிமையாக்கி வைத்திருக்க கலாச்சாரம், பண்பாடு, மரபு என்று சில ஆயுதங்களை, பெண்களின் முதுகுத்தண்டில் பிடித்துக்கொண்டு வாழ்வதைப்பற்றிக் கொஞ்சமேனும் சிந்திக்காமல் பெண்கள் வாழ்கிறார்களே! தமிழர்களின் பண்பாடு, கலாச்சாரம் எல்லாம் பெண்களுக்கு மட்டுந்தானா? ஆண்களுக்கென்று எதுவுமே இல்லையா? ஏன் இன்னும் பல பெண்கள் இதை உணராமல் வாழ்கிறார்கள். பட்டிமன்றங்களும் கலாச்சாரம், பண்பாடு என்று வந்தால் தாலி, பொட்டு, சேலை இவைகளைத்தான் விவாதத்துக்குரிய பாரிய விடயங்களாக எடுத்துக்கொள்கின்றன. மீறினால் பெண்களின் மறுமணம்.

ஆண்களின் மறுமணம் பேசப்படக்கூடிய அதிசயமான விடயம் இல்லை. பெண்களின் மறுமணம் நடக்கவே கூடாத மரபு மீறிய, கலாச்சாரம் கெட்ட, பண்பில்லாத செயல் என்பதே அவர்களின் கருத்தில் தொனிக்கிறது.

இந்தக் கலாச்சாரங்களை, பண்பாடுகளை ‘இது எமக்கு மேல் திணிக்கப்பட்ட வஞ்சனைகள்’ என்று உணராமலே பெண்கள் போற்றிப் பாதுகாப்பதுதான் மிக மிக வருத்தமான விடயம்.

இனியாவது பெண்கள் சிந்திக்க வேண்டும். தமது வலிமைகளை உணர வேண்டும். பத்து மாதங்கள் குழந்தையை வயிற்றில் சுமக்கத் தெரிந்த பெண்ணுக்கு - தாயாக, சகோதரியாக, மனைவியாக, மகளாக என்று ஒவ்வொரு நிலையிலும் குடும்பத்தை அன்பினால் சுமக்கத் தெரிந்த பெண்ணுக்கு அடங்கிப் போகவேண்டிய தேவை என்ன?

விட்டோமென்றால் ஆண்கள் எம்மை விடவேமாட்டார்கள். தொடருவார்கள்.

பெண்களே நீங்கள் நினைக்கலாம், இப்போது நாங்கள் விடுதலை பெற்றுவிட்டோம் என்று.

ஆனால் இன்னும் முழுதாக இல்லை.

ஆண், பெண் இருபாலாரும், சமநிலைக்கு வர - இன்றைய இளம் பெண்கள்தான் சரியாகச் செயற்பட வேண்டும். நீங்கள் படிக்கவேண்டும். உங்கள் காலில் நிற்க தொழில் பார்க்கவேண்டும். போலிச் சம்பிரதாயங்களையும், ஆடம்பரத்திலான அதிக ஈடுபாட்டையும் தவிர்த்து எதுதேவை என்பதை உணர்ந்து வாழவேண்டும்.

முக்கியமாக - உங்கள் குழந்தைகளை ஆண் குழந்தை, பெண் குழந்தையென்று பேதம் காட்டாது சமனாக வளருங்கள். ‘நீ பெண் குழந்தை நீதான் விட்டுக்கொடுக்க வேண்டும்’ என்று உங்கள் ஆண்குழந்தைக்கும் பெண்குழந்தைக்குமான தகராறின்போது சொல்வீர்களானால் - அங்கு நீங்கள் பெரிய தவறு செய்கிறீர்கள். இப்படி நீங்கள் சொல்லும் போது பாதிக்கப்படுவது உங்கள் பெண் குழந்தையின் மனம் மட்டுமல்ல, உங்கள் ஆண்குழந்தையும்தான்.

ஆண் குழந்தையின் மூளையில் அது அப்போதே ‘பெண்கள் எதையும் விட்டுக்கொடுக்க வேண்டியவர்கள்தான்’ என்று பதிந்து விடுகிறது. அதுவே நாளடைவில் அக்கா, தங்கை, மனைவி, மகள் எல்லோரும் தனக்கு விட்டுக்கொடுத்து வாழவேண்டியவர்கள் என அவனை எண்ண வைக்கிறது.

ஆகவே பெண்களே!

உங்கள் பிள்ளைகளை

ஆண், பெண் பேதம் காட்டாது - விட்டுக்கொடுத்தலிலிருந்து, சமையல், வீட்டுவேலை, கல்வி வேலை [தொழிற்கல்வி] மற்றும் இதரபிற வேலைகளிலும் செயற்பாடுகளிலும் சமத்துவத்தைப் பேணி வளருங்கள்.

எந்தக் கட்டத்திலும் உங்கள் பெண் பிள்ளையை ‘நீ பெண்’ என்றுகூறி சமையற்கட்டுக்கும்,

ஆண் பிள்ளையை வெளி வேலைக்கும் அனுப்பாதீர்கள்.

இன்றைய பிள்ளைகளாவது நாளை - இந்தவேலை ஆணுக்கு இந்தவேலை பெண்ணுக்கு என்று நினைக்காமல் இருக்க ஆண்பிள்ளையையும் சமையற்கட்டுக்கு அனுப்புங்கள். பெண் பிள்ளையையும் வெளி வேலைக்கு அனுப்புங்கள். பெண்களுக்கு நடனமும், பாடலும்தான் என முத்திரை குத்தி வைக்காமல் விளையாட்டு, தற்காப்புப் பயிற்சிகள், [கராத்தே போன்றவை] போன்றவற்றையும் அவர்களது ஆர்வங்களுக்கு ஏற்ற வகையில் பழக அனுமதி கொடுங்கள்.

உங்கள் வளர்ப்பில் - பெண் அடங்கவேண்டியவள், ஆண் அடக்குபவன் என்ற நிலை முற்றாக மாறவேண்டும்.

இதை ஏன் நான் பெண்களுக்கு மட்டும் கூறவேண்டும் என நீங்கள் எண்ணலாம்.

நாங்கள் குனிந்து நின்றுகொண்டு, ஆண்களைப் பிழை கூறமுடியாது. நாங்கள்தான் நிமிர வேண்டும்.

நாளைய பெண்கள் சுயமாக வாழ நாம்தான் பாதையமைக்க வேண்டும்.

*- சந்திரவதனா செல்வகுமார்*
*ஜேர்மன்.*

* மளிகைப் பொருட்கள்
* உடன் மரக்கறிகள்
* உடன் மீன் வகைகள்
* மற்றும் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்

**Sri Murugan**

Wiesen Str-10, 4900 Langenthal, Switzerland

உரிமையாளர்: மாணிக்கம் இளமுருகன்

Tel: 062/922 17 98-Fax: 062/922 78 33

---

**Palm Beach**

RESTAURANT

10%OFF ALL TAKE AWAY ORDERS

P.Sivarupan
Proprietor

Finest South Indian & Sri Lankan Cuisine

17 Ealing Road,
Wembley
Middlesex HA0 4AA
Tel: 020 8900 8664
Mobile: 079 3958 7338
Home: 020 8900 1990

---

**ARCHIE'S**

Audios - Videos - CD's
Whole Salers & Retailers

205 Edgware Road,
Colindale,
London NW9 6LY
T.P: 0181-205 3652

---

உங்களுக்குத் தேவையான மளிகைச் சாமான்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு

**KANNA**
**Euro Enterprises**

198, Arch Way Road
(முருகன் ஆலயத்திற்கு அருகில்)
High Gate,
N6 5BB, London.
T. Phone- 0181-3483356

---

**ஈழமுரசு**
பிரித்தானியா
Eelamurasu Weekly

பிரித்தானியாவிற்கான சந்தாக் கட்டணத்தினை (வருடம் ஒன்றிற்கு £60, 6 மாதங்களுக்கு £32) செலுத்துவதன் மூலம் ஈழமுரசு உங்கள் வாசல் தேடி வருவதற்கான வாய்ப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## பிரித்தானிய வணிகம்

பிரித்தானியா நாட்டிற்கான விளம்பரங்களை ஒரே பக்கத்தில் பிரித்தானியப் பதிப்பில் '**பிரித்தானிய வணிகம்**' என்ற பகுதியில் இடம் பெறுவதற்கான விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன. குறைந்த கட்டணத்துடன் விளம்பரப்படுத்த இப்பகுதி உங்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பினை அளிக்கின்றது.

உங்கள் விளம்பரம் தொடர்பான தேவைகளுக்கு நாடுங்கள்

**EELAMURASU** (அஞ்சல் வழி)
**5, Saxony Parade, Hayes,**
**UB3 2TQ**
**Fax/Tel: 0181-56 16 877**

சிறிய வரி விளம்பரங்களுக்கு **£5 மட்டுமே!**

ஜெயந்தன் Tel: 0956908145
ஹரி Tel: 07887874177
பாஸ்கரன் Tel: 0181-7698302

---

**ASIAN FUNERAL DIRECTORS**



**24 மணிநேரச் சேவை**

அமரத்துவம் அடைந்தவர்களது இல்லங்களுக்கான பிரத்தியேக விஜயங்கள், அமரர்களைக் குளிப்பாட்டுதல் - ஆடை அணிவித்தல் - அஞ்சலிக்கு வைத்தல், வார இறுதி ஈமக்கிரியைகளுக்கான ஒழுங்குகள், மலர் வளையங்களுக்கான ஒழுங்குகள், மதச் சடங்குகளுக்கான ஒழுங்குகள் ஆகியவற்றுடன் அமரர்களிக் பேழைகளைச் சர்வதேச ரீதியில் காவிச்செல்லும் பணி.

**LONDON 0800 026 2335**
MIDLANDS **0800 026 2334**

F·O·S

*Part of the SCI Group of Funeral Directors*

***Member of the Funeral Ombudsman Scheme and the Funeral Standards Council***

Pub Lon

---

**A.J**
**VIDEO & AUDIO**

A.J. VIDEO & AUDIO
Leading Agent for:
Tamil videos, Audios, CDs,
Sri Lankan News papers,
Tamil magazines

**14, Loampit hill, Lewisham London SE13 7SW**

Contact:
VASANTHAN & SUGNTHAN
Tel: 0181-694-6653

---

**SHASME**
***Super Store***

இலங்கை இந்திய மளிகைச் சாமான்கள் வீடியோ, ஒடியோ, CD, சஞ்சிகைகள், பத்திரிகைகள், மரக்கறி வகைகள், கடல் உணவுப்பொருட்கள் Gnanam Phone Card அனைத்தையும் பெற்றுக்கொள்ள Birmingham த்தில் ஒரே தமிழ்க்கடை

***211, Lady Pool Road,Balsall Heath,***
***Birmingham B 12, 8 LG***
***Tel No: 0121-4465896***

---




# TELILINE

## FIESTA PHONE CARD

**அதிக தொலைபேசி அட்டைகள் பாவித்தும் உங்களால் தொடர்பு கொள்ள முடியவில்லையா? கவலையை விடுங்கள். இதோ வந்துவிட்டது சுவிசில் உங்கள் நம்பிக்கைக்குரிய Tele Line தொலைபேசி அட்டைகள் நிறுவனத்தினரின் புதிய Teleline Fiesta தொலைபேசி அட்டைகள் நீங்கள் எதிர்பார்த்த நிமிடங்களில்**

| Country | Toll Free | Local | Country | Toll Free | Local |
|---|---|---|---|---|---|
| Srilanka | 61Min | 65Min | Bangladesh | 56Min | 60Min |
| India | 61Min | 65Min | U.S.A. | 273Min | 500Min |
| Pakistan | 56Min | 60Min | Vietnam | 35Min | 37Min |

**மேலும் பல நாடுகள் அதிகரிக்கப்பட்ட நிமிடங்களில்!**

மேலதிக விளக்கங்கட்கு எங்களது Tele line Fiesta வின் பட்டியலையோ அல்லது எங்கள் தொலைபேசி இலக்கங்களையோ நாடவும்.

*முக்கிய குறிப்பு: மேற்குறிப்பிட்ட நிமிடங்கள் எங்கள் மூலம் வெளிவரும் **Teleline Fiesta** அட்டைகள் மட்டுமே என்பதை கவனத்தில் கொள்ளவும்.*

உங்கள் தொடர்புகட்கு: K. வேல் ராஜன்

**Tel: 079 667 3422 - Fax : 01 462 5137 076 339 3422**

**இப் பத்தியில் வாரம் ஒரு நாடாக, உலகில் அகரவரிசைப்படி அமைந்துள்ள நாடுகள் அனைத்தினதும் முழுமையான விபரங்கள் வெளிவருகின்றன.**




# ஆர்மேனியா

மேற்கு ஆசியாவில் அமைந்துள்ள குடியரசான இதன் எல்லைகளாக வடக்கே ஜோர்ஜியாவும், கிழக்கே அஜர்பைஜானும், தெற்கே ஈரான் மற்றும் மேற்கில் துருக்கியும் எல்லைகளாக உள்ளன. இதன் தலைநகரம் யெரவான் ஆகும். இதுவே, நாட்டின் மிகப்பெரும் நகரமாகும். ஆர்மேனியன் என்பது இதன் அரச மொழியாக உள்ளது. ஹயாஸ்தான் எனும் பூர்வீகப் பெயரில் இருந்து ஆர்மேனியா எனும் பெயர் வந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆர்மேனியாவின் சனத்தொகையில் 'ஹேய்' எனும் சமூக மக்கள் 90 வீதத்தைப் பிரதிபலிக்கின்றனர். இந்நாட்டின் சனத்தொகை 1997ம் ஆண்டு மேற்கொள்ளப் பட்ட கணிப்பின்படி 3,433,929 ஆகும். 69 வீதமான மக்கள் நகரப்பகுதிகளிலேயே வாழ்கின்றனர். ஆர்மேனியாவின் மக்கள் பிரிவில் ஹேய் இனப்பிரிவினர் பெரும்பான்மையினராக இருக்கும் அதேவேளை, குர்திஸ், ரஷ்யர்கள் அடுத்த இடத்தில் வகிக்கின்றனர். மேலும் உக்கிரேனியர்கள், அசேரியர்கள், கிரேக்கர், ஜோர்ஜியர் போன்றோரும் குறிப்பிடத்தக்க அளவு வாழ்கின்றனர். இங்கு பேசப்படும் ஆர்மேனியன் எனப்படும் மொழி இந்தோ-ஐரோப்பியப் பூர்வீகத்தைக் கொண்ட மொழி எனச் சொல்லப்படுகிறது. இது ஐந்தாம் நூற்றாண்டில் இருந்து புழக்கத்தில் உள்ளது. ஆர்மேனியர்களின் பிரதான மதமாக கிறிஸ்தவ மதம் உள்ளது. இவர்கள் நான்காம் நூற்றாண்டிலேயே இம்மதத்தைத் தழுவிக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது. உலகிலேயே உத்தியோகபூர்வமாக முழுமையாக மதம்மாறிய முதலாவது நாடு இது எனவும் சொல்லப்படுகிறது.

ஆர்மேனியாவின் பரப்பளவு 29,800 சதுரக் கிலோ மீற்றராகும். உயரமான மலைகளையும் பாலைவனத் தொடரையும் இது கொண்டுள்ளது. இந் நாட்டின் மலைகளில் உயரமானது எனப்படும் ஆர்க்காடஸ் மலையுச்சியின் உயரம் 4,090 மீற்றராகும். மலைத்தொடர்கள் எனப்படுகையில் பாம்பாசி, ஜிகோபா, வார்டெனிஸ், சங்கேசூர் போன்றவைகளைக் குறிப்பிடலாம். ஆர்மேனியாவானது நீண்ட ஆறுகளையும் பல குளங்களையும் கொண்டுள்ளது. உலகின் மிக உயரத்தில் உள்ள ஏரியைக்கொண்ட நாடுகளில் ஆர்மேனியாவும் ஒன்று. செவன் எனப்படும் இந்த ஏரி உல்லாசப்பயணிகளைக் கவரும் ஓர் பகுதியாகும். நதிகள் எனப்படுகையில் ஆர்பா, கரஸ்டான் போன்றவைகள் குறிப்பிடத்தக்கவையாகும். அதேவேளை, ஆர்மேனியாவின் அகலமான, மிக நீளமான ஆறு எனப்படுவது ஆராஸ் நதியாகும். இது வடகிழக்குத் துருக்கியில் தோற்றம்பெற்று கிழக்குப் பகுதியினூடாக ஈரானுக்குள் பாய்ந்து குரா நதியுடன் இணைகின்றது. இவை தவிர ஆர்மேனியாவில் பல சிறு ஆறுகளைக் கொண்ட பின்னல்களும் உள்ளன. நாட்டின் வடகிழக்காகவும், தென்கிழக்காகவும் அடர்ந்த காடுகள் காணப்படுகின்றன. பெரும் புல் வெளிகள் மற்றும் பாலைவனப்பகுதியில் காணப்படும் பயிர்களும் உள்ளன.

ஆர்மேனியாவில் செம்பு, தங்கம், நாகம், கிரனையிட் போன்றவை உள்ள அதேவேளை, எரிபொருள், எரிவாயு, நிலக்கரி போன்றவை இறக்குமதி செய்யப்படுகின்றது. ஆறுகள் மூலம் நாட்டுக்குத்தேவையான மின்சக்தியைப் பெரும்பாலும் பெற்றுக்கொள்கிறார்கள். உயரமான ஒரு நாடாக இருந்த போதிலும் ஆர்மேனியாவின் காலநிலை வரட்சியாகவே உள்ளது. அதேவேளை, குளிர்காலம் மிக்கக்கடுமையானதாக இருக்கும். கோடைகாலமானது மிகவும் வெப்பகாலமாக இருக்கின்றது. நாட்டின் விவசாய நடவடிக்கைகள் ஆராஸ் ஆற்றங்கரையை அண்டியே மேற்கொள்ளப்படுகின்றன. ஆர்மேனியா சோவியத் யூனியனின் குடியரசுகளின் ஒன்றாக இருந்த காரணத்தினால் கல்வித்துறை மிகவும் உச்ச நிலையிலேயே உள்ளன. இங்குள்ள யெரவான் அரச பல்கலைக்கழகம் 1919ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. 80களின் பிற்பகுதியிலும் 90களின் ஆரம்பத்திலும் பலவகையான இயற்கையழிவு மற்றும் யுத்தம் போன்றவற்றால் ஏற்பட்ட உயிர், உடமை இழப்புக்களில் இருந்து மீண்டு ஸ்திரமான பொருளாதார நடவடிக்கையை ஆர்மேனியா மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது. 1988ம் ஆண்டு ஆர்மேனியாவில் ஏற்பட்ட நில நடுக்கத்தினால் 25,000 பேர் வரை உயிரிழந்து நான்கு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்திருந்தனர். இந்த இழப்பில் இருந்து ஆர்மேனியா மீண்டு வருகையில், அண்டைநாடான அஜர்பைஜான், நகோனோ கரபா பிரச்சினையில் யுத்தத்தில் இறங்கியது. இப்படி யுத்தம் ஏற்பட்டதால் துருக்கி ஊடான விநியோகவழி மூடப்பட்டது. அத்துடன் ஜோர்ஜியாவின் ஸ்திரமில்லாத நிலையும் ஆர்மேனியாவின் பொருளாதாரத்தில் சிக்கல்களை ஏற்படுத்தின. ஆனாலும் அந்நாட்டின் உழைப்பாளிகளான மக்கள் எல்லாத் தடைகளில் இருந்தும் மீண்டு, பொருளாதார ரீதியில் மீண்டும் ஸ்திரத்தன்மையை உருவாக்கியுள்ளார்கள். தென்மேற்கு ஆர்மேனியாவில் அரபாத் சமதரைப்பகுதியில் பெரும் விவசாயத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. உருளைக் கிழங்கு, தானியவகை, திராட்சைப்பழம் மற்றும் கால்நடை வளர்ப்புக்கள் பெருமளவில் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் தொழிற்துறை எனப்படுகையில் சப்பாத்து, மருந்துவகை, உருக்கு, மின்னியில் உபகரணங்கள் போன்றவைகள் பெருமளவில் தயாரிக்கப்பட்டு ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. ஆர்மேனியாவின் தேசிய நாணயமாக ட்ராம் உள்ளது.

80களில் சோவியத் யூனியனின் தொழிற்துறை நாடாக ஆர்மேனியாவே விளங்கியது. இதனால் பெரும் சூழல்மாசுபாடு இங்கு ஏற்பட்டது. 80களின் பிற்பகுதியில் படிப்படியாக தொழிற்சாலைகள் மூடப்பட்டன. அத்துடன் மெட்சாமோர் எனும் அணு மின்சக்தி மையம் நிலநடுக்கத்தின் பின் மூடப்பட்டது. ஆனால் 92, 93, 94ம் ஆண்டுகளில் ஏற்பட்ட கடும் குளிரினால் மரங்கள் வெட்டப்பட்டு வெப்பத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன. வேறு வழியில்லாத நிலையில் மீண்டும் அம் மின்சக்தி நிலையம் அரசினால் 95ம் ஆண்டு திறக்கப்பட்டது.

## வரலாறு

தற்போதைய துருக்கி அன்று அரராட் உச்சி என அழைக்கப்பட்டது. கிறிஸ்துவிற்கு முன் 3000 ஆண்டுகளில் அப்பகுதியில் ஆர்மேனியர்கள் வாழ்ந்து வந்தனர். இவர்களது சமூகப்பரவலானது மிகப்பரந்து இப்பிராந்தியத்தில் காணப்பட்டிருந்தது. முதலாம் நூற்றாண்டில் டிக்ரானெஸ் எனப்படும் ஆர்மேனிய அரசன் தனது இராட்சியத்தை தோற்றுவித்தான். கஸ்பியன்கடலில் இருந்து மத்தியதரைக்கடல் வரை இவ் இராச்சியம் பரவியிருந்தது. இன்றைய ஜோர்ஜியா முதல் சிரியா வரை இதற்குள் அடங்கியிருந்தன. முதலாம் நூற்றாண்டின் இறுதியில் ரோமானிய ஆட்சிக்குள் இது வந்து சேர்ந்தது. ரோமர்களுக்கும் பேர்சிய பார்த்தியர்களுக்கும் இடையே பெரும் யுத்த களமாக இப்பிராந்தியம் அமைந்தது. மூன்றாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சசானியன் ஆர்மேனியாவின் ஆட்சியைக் கைப்பற்றினார்கள். மீண்டும் ரோமர்களுக்கும் இவர்களுக்கும் இடையே யுத்தம். இப்பிராந்தியத்தை ரோமர்கள் கைப்பற்றிய பின், ஆர்மேனியாவை இரண்டாகப் பிரித்து, கிழக்கினை ரோம சாம்ராட்சியமும் மற்றைய பிராந்தியத்தை பேர்சிய சாம்ராட்சியமும் ஆண்டு வந்தன. இது பின்னர் மீண்டும் 7ம் நூற்றாண்டில் முழுமையாக ரோம சாம்ராட்சியத்திற்குள் கொண்டுவரப்பட்டது. 1071ம் ஆண்டு துருக்கியின் கட்டுப்பாட்டிற்குள் இது வந்தது. 13ம் நூற்றாண்டில் மொங்கொலியர்கள் இந்நாட்டைக் கைப்பற்றிக்கொண்டார்கள். 15ம் நூற்றாண்டில் ஒட்டோமான் சாம்ராட்சியம் ஆர்மேனியாவின் அரசாட்சியை தமதாக்கிக்கொண்டது.

19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ரஷ்யா தனது ஆதிக்க விரிவாக்கத்தின் ஒரு கட்டமாக

(தொடர்ச்சி 31–ம் பக்கம்)

# புத்தி சிகாமணி பதில்கள்

கேள்வி:– என்ன தகுதி இருந்தால் இங்குள்ள தமிழர்கள் என்னை மதிப்பார்கள்?

*- சி.அறிவுமதி - சுவிஸ்.*

பதில்:– கேட்டவுடன் பணம் உதவி செய்யக்கூடிய வசதி, பின்னர் அதனை திருப்பிக் கேட்காத மனம்.

★ ★ ★

கேள்வி:– பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையைப் பற்றி நல்லதாக எதாவது கூறமுடியுமா சிகாமணியே?

*- ச.விதுசன் - சேர்ஜி, பிரான்ஸ்.*

பதில்:– நிச்சயமாக! ஜெயசிக்குறுய் என்ற ஒன்றைத் தொடங்கி மாங்குளம் வரை ஆயுதங்களை கொண்டுவந்து போதும் போதும் என்னும் அளவிற்கு அள்ளிக்கொடுத்த கொடை வள்ளல் அல்லவா ரத்வத்தை! அந்த நன்றியை எப்படி மறக்கமுடியும்? இது ஒரு சின்ன உதாரணம் மட்டும்தான்...

★ ★ ★

கேள்வி:– தமிழ் பேசத்தெரியாத புலம்பெயர்வாழ் தமிழ்ச் சிறார்களின் எதிர்காலம் பற்றி?

*- இரா.கீதன் - வெல்தம்ரோப், இலண்டன்.*

பதில்:– கண்கள் இருந்தும் குருடர்களாக, வாயிருந்தும் ஊமைகளாக தங்கள் மூலவேரை அறியாத முட்டாள்களாக தமது பிள்ளைகள் வாழப்போவதை உணர்வுள்ள எந்தப் பெற்றோரும் அனுமதிக்கமாட்டார்கள். எனவே இப்படியான ஒரு நிலை தமிழ்ச் சிறார்களுக்கு உருவாகாது, அதற்கு பெற்றவர்களும் அனுமதிக்கமாட்டார்கள் என நம்புவோம்.

★ ★ ★

கேள்வி:– விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என சில வருடங்களுக்கு முன் எழுதிய கொழும்புப் பத்திரிகைகள் சில, இன்று தமிழர் இராணுவம் என எழுதக்காரணம்?

*- இரா.கீதன் - வெல்தம்ரோப், இலண்டன்.*

பதில்:– பலம்.

★ ★ ★

கேள்வி:– தமிழீழத்தில் எம் உறவுகள் படும் வேதனை, கஷ்டம் இங்குள்ள தமிழர்களுக்கு ஒரு காலத்தில் வருமா?

*- சி. அறிவுமதி - சுவிஸ்.*

பதில்:– வராது. அப்படியான நிலைமை வரும்போது, அவர்களுக்கு ஆதரவுக்குரல் கொடுப்பதற்கு தமிழீழம் என்றொரு நாடு நிச்சயமாக உருவாகியிருக்கும்.

★ ★ ★

கேள்வி:– சந்திரிகா நாட்டை யுத்த சூழ்நிலைக்கு பிரகடனப்படுத்தியுள்ளாரே, இது எதனைக் காட்டுகிறது?

*- மதிவாணன் - பாரிஸ், பிரான்ஸ்.*

பதில்:– இயலாமையின் இறுதிக்கட்டத்தை.

★ ★ ★

கேள்வி:– அண்மையில் உங்களை ஆச்சரியமடையவைத்த விடயம் ஒன்று?

*- ம. வேந்தன் - நூறன்பேர்க்.*

பதில்:– தாய் மொழியில் படிக்கமாட்டோம் என அடம்பிடிக்கும் சில தமிழகத்தில் உள்ள தமிழர்களைப் பார்த்துத்தான்.

★ ★ ★

கேள்வி:– இந்தியாவை ஒரு காலத்தில் திட்டியும், விரட்டியும் அடித்த பௌத்த பிக்குகள் இப்போது இந்தியா வரவேண்டும் என அடம்பிடிக்கிறார்களே?

*- ப. நல்லதம்பி - பாரிஸ், பிரான்ஸ்.*

பதில்:– பொறிக்குள் அகப்பட்டுள்ளது அவர்களது இனம் அல்லவா! சூரியக்கதிரை வாழ்த்தி ஆரம்பித்து வைத்தவர்கள் இன்று அது அஸ்தமனமாவதைக்கண்டு கதிகலங்கிப்போய்த் தான் கதறுகிறார்கள். இதற்காக அவர்கள் யார் காலிலும் விழுவார்கள்.

★ ★ ★

கேள்வி:– 95ல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி, சந்திரிகாவிற்கு பட்டோலை வழங்கிய ரத்வத்தை புலிகளுக்கு தற்போதுள்ள வழிகள் சரணடைவது, சயனைட்டை சுவைப்பது அல்லது கடலுக்குள் விழுவது. இதில் ஏதாவது ஒன்றைத்தான் அவர்கள் தற்போது செய்யவேண்டும் எனக் கூறியிருந்தார். தற்போதைய யாழ். நிலை குறித்து அவரிடம் எதாவது கேட்டுச் சொல்ல முடியுமா?

*- த. பரமலிங்கம் - பிரான்ஸ்.*

பதில்:– சும்மா இரும். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சினமாதிரி நீர் வேற...

## கவனத்திற்கு!

14.05.2000 அன்று தமிழ்ப் பெண்கள் அமைப்பினரால் சார்சிலில் நடாத்தப்படவிருந்த செஞ்சோலைக் கலைமாலை நிகழ்வு தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது.

நடைபெறவிருக்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

## நாற்று




# புலம் பெயர்ந்த மண்ணில்...

வீட்டு அழைப்பு மணி அழுத்திக் கேட்டது. கதவைத்திறக்க ஓடிப்போனாள் ஜெனனி. 'ஜெனனி அறையுக்கை போயிடு....' தாய் உறுதியின் உறுக்கலோடு நின்று சொன்னாள். 'ஆரோ வந்திருக்கினம் கதவு திறக்கப்போறன்'. 'வாயைப்பொத்திக் கொண்டு உள்ளுக்கை போயிரடி...' தாயின் கோபம்.... அவளுக்கு அழுகையாய் வெடித்தது. அறைக்குள் போயிருந்தாள். நாலாவது மாடியிலிருந்து அந்த வீட்டிலிருந்து குதிக்கவேண்டும் போலிருந்தது. அம்மா ஏன் இப்பிடி... ஒரே கட்டுப்பாடு போடுகிறா...? நானென்ன செய்தனான்...? என்னோடை படிக்கிற பிள்ளையளை அவையின்ரை அம்மா அப்பா எல்லா இடமும் விடுகினம்தானே...? விடை தெரியாமல் ஜெனனி குழம்பிக்கொண்டிருந்தாள்.

கமலாவிற்கு, 'அம்மாதான் வெளியிலை வரக்கூடாது. இனி அறையுக்கைதானாம் இருக்க வேணுமெண்டு ஒரு இடமும் விடுகிறா இல்லை' அழாக்குறையாகச் சொன்னாள் ஜெனனி. 'பின்னையென்ன இன்னும் சின்னப் பிள்ளையே! இனி உப்பிடித்தான் அடக்கமாய் இருக்க வேணும்' றதிக்கு ஆதரவாகத் தன் பதிலைச் சொன்னாள் கமலா. 'ஒரே வீட்டிலை இருக்க விசராய்க்கிடக்குது' சினத்தாள், ஜெனனி!' 'இஞ்சேர்.... நீ இனிக் குழந்தைப் பிள்ளையில்லை சரியே!!' என்ற தாயைக் குறுக்கிட்டு, 'என்னம்மா இவ்வளவு நாளும் இருந்தமாதிரித்தானே இப்பவும் இருக்கிறேன்.' தொடர்ந்து சிணுங்கியவளை 'ஏன் எதுக்கெண்டு கேள்வி கேக்காதை கண்டியே! உன்ரை வயதிலை நான் கலியாணங்கட்டிப்போட்டன் தெரியுமே!' என்று சொன்ன தாய் மீது, கோபம் கோபமாக வந்தது. இதற்குமேல் தாயிடம் எதையும் கேட்பதில்லை என்ற முடிவுக்கு வந்தாள் ஜெனனி.

புரியவில்லை. தனக்குள் குழம்பி இறுதியில் ஜெனனியின் தந்தையோடு தொலைபேசியில் தொடர்புகொண்டாள். றதி தீயாய்க் கொதித்தாள். 'எங்கள் கலாச்சாரம் அப்படித்தான்! நாங்கள் இப்பிடித்தான் பிள்ளையை வளர்ப்போம்' என்றான் தகப்பன். 'நீங்கள் பிள்ளைகளிலை பெற்றோராக அதிகாரம் பண்ணாமல், நண்பர்களாயிருங்கோ. அவையளுக்குள்ளையும் உங்களுக்குள்ளையும் ஒளிவு மறைவில்லாமல் எதையும் கதையுங்கோ. அப்பதான் பிள்ளைகள் உங்களைவிட்டு அந்நியப்படமாட்டினம்' ஆலோசனை சொன்ன அனேற்றாவோடு, எதிர்வாதம்தான் செய்தார்கள் றதியும் தேவனும். இவர்களோடு பேசிப்பயனில்லையென்ற முடிவுக்கு வந்த அனேற்றா, தொலைபேசியின் தொடர்பைத் துண்டித்தாள்.

றதி பத்திரகாளியானாள். இப்போதே ஊரில்கொண்டுபோய் விட்டுவிட்டு வரப்போவதாகத் துள்ளினாள். 'நீங்களார்

'என்னைக் காப்பாற்றுங்கோ!!'

சில நிமிடங்களில் வீட்டு அழைப்புமணி அழுத்திக்கேட்டது. றதிதான் கதவைத் திறந்தாள். காவல் துறையினர் 5 பேர் வந்திருந்தனர். திகைத்துப்போய் நின்றாள் றதி.

தேவன் அவர்களைப் பார்த்துக் கேட்டான், 'என்ன வேணும் உங்களுக்கு...? அழுதுகொண்டே ஓடிவந்தாள் ஜெனனி. என்னைக் காப்பாற்றுங்கோ... எனக்கு அம்மா அப்பா வேண்டாம். அயல்வீட்டு ஜேர்மனியர்களெல்லாம் புதினம்

'ஜெனனி! கமலா அன்ரியவைக்குத் தேத்தண்ணியூத்திவா...' சொல்லிவிட்டு றதி வந்திருந்தவர்களோடு கதைத்துக் கொண்டிருந்தாள். ஜெனனிக்கு இன்னும் ஆத்திரமாக இருந்தது. இப்போது ஒரு மாதமாகத்தான் அவள் இப்படிக் குசினிக்கு நெடுகலும் அனுப்பப்படுகிறாள், வெளியில் போகக்கூடாது, ஆண்களோடு கதைக்கக் கூடாது. இவளோடு முன்பு வந்து விளையாடும் நாலு ஐந்து வயதுப் பையன்களோடு கூட விளையாடக்கூடாது.

சோபாவில் கால்போட்டு இருக்கக் கூடாது. வீதியில் நடக்கும்போது நிமிர்ந்து நடக்கக்கூடாது... தமிழாலயம் போய் ஆசையாய் ஆர்வமாய்த் தமிழ் படித்துக் கொண்டிருந்தவளை நீ டொச் படிச்சால் போதும். தமிழ் படிக்கவேண்டாம். நாங்கள் இஞ்சைதான் இருக்கப்போகிறோம். உனக்குத் தமிழ் தேவையில்லை... என்று தமிழாலயப்படிப்பும் நிறுத்தப்பட்டபோது, தாயிடம் கேட்டாள் 'ஏனம்மா எங்களை ஜேர்மனியர்கள் திரும்பிப்போகச் சொல்லேக்கை நான் தமிழ் தெரியாமல் அங்கைவந்து என்ன மொழியைக் கதைக்கிறது?

'அந்தப் பாழாய்ப்போன நாடும் வேண்டாம் வீடும் வேண்டாமெண்டுதான் இஞ்சை வந்திருக்கிறோம்?!. இனிமேல் நாட்டு நினைப்பு வீட்டு நினைப்பெண்டு தமிழ்படிக்கக் கேக்காதை'. தீர்மானமாய்த் தாய் சொன்னதைக்கேட்டு, அதிர்ந்து போனாள் ஜெனனி.

ஊரில் இருந்து இருபது ரூபா முத்திரை ஒட்டி அப்பம்மாவும் அம்மம்மாவும் அவளுக்கு எழுதும் கடிதங்கள் அவளைத் தமிழ் படிக்கத் தூண்டியன. எப்போ தங்களைப் பார்க்க வருவாய் என ஆசையோடு அவளைப் பார்க்கத்துடிக்கும் அவர்களையும், இந்த அம்மாவும் அப்பாவும் மறந்து விட்டார்களா...? இயக்கத்தில் இருக்கும் ஆதவன் மாமா, தான் ஏன் போராடுகிறேன். ஏன் எமக்குத் தாயகம் வேண்டும் என்று அப்பப்போது இவளுக்கு எழுதிய கடிதங்களைப் படித்த இவர்களா... பாழாய்ப்போன நாடும் வேண்டாம்; வீடும் வேண்டாம் என்கிறார்கள். அம்மா அப்பாவையே அவளுக்குப் பிடிக்கவில்லை. ஏன் தமிழ் படிக்க இவள் போவதில்லை என்று கேட்டவர்களுக்கு, 'குமர்ப்பிள்ளையை என்னண்டு இனிப் படிக்கவிடுகிறது?' என்று அம்மா சொல்லுவா... எப்ப பார்த்தாலும் சமைச்சுப்பழகு. ஒழுக்கமா இரு என்று நச்சரிப்பது எதுவும் அவளுக்குப் பிடிக்கவில்லை.

'ஜெனனி! தேத்தண்ணி ஊத்தியாச்சே?' மீண்டுத் தாயின் குரல் குசினிக்கு அனுப்பியது. தேநீரோடு விறாந்தைக்குப் போனாள். 'என்ன குமர்ப்பிள்ளை வெளியிலை வர வெக்கமோ..?' என்ற



தாய் சொல்லாமலேயே திரும்பி அறைக்குள் போனாள். அவளை எல்லோரும் அந்நியப்படுத்திப் பார்க்கிறார்கள். வீட்டிற்கு வரும் தமிழ்க் குடும்பங்களும் தாய் சொல்வது போல்த்தான் இருக்கவேண்டும் என்கிறார்கள். மீறிக் கேட்டால் எங்கள் கலாச்சாரத்தில் இப்படித்தான் இருக்க வேண்டும் என்கிறார்கள். எதைக்கேட்டாலும் உபதேசிக்கத் தொடங்கிவிடுகிறார்கள்.

போனமாதம் ஊரைக்கூட்டி, அவளை ஒரு அலங்காரப் பொம்மையாக்கி, தங்கத்தை அவள் அங்கம் முழுவதும் அடுக்கி, மணவறையில் தலைகுனிந்தபடி கொத்தோடு சில மணித்தியாலம், கும்பச் செம்போடு சிலமணித்தியாலம், பூச்செண்டோடு சில மணித்தியாலம், புகைப்படக்காரன் அங்குதிரும்பு, இங்குதிரும்பு, அப்படிச்சிரி, இப்படிச் சிரியென்று கட்டளையிட்டுக் கமராவின் கண்களுக்குள் அவளை நிழற் படங்களாக்கி... வீடியோக்காரன் பூங்காக்கள், வீதிகள் கடற்கரையென ஒரு சினிமாக் கதாநாயகியைப் போல், தாவணியைப் பிடித்துச் 'சிலோ மோசனில்' வீடியோ எடுத்தும், நடந்த பூப்புனித நீராட்டு விழாவோடுதான் அவளது சுதந்திரங்கள் பறிக்கப்பட்டு, வீட்டுச் சிறைக்கைதியாய் இருக்கச் சொல்லியது. அவளுக்குத் தமிழர்களைப் பிடிக்கவில்லை. குறிப்பாக இப்படிக்கட்டுப்பாடு போடும் தமிழர்களைப் பிடிக்கவில்லை.

'என்ன ஜெனனி கதைக்கப்போறீர்?' கேட்டாள் ஆசிரியை அனேற்றா. 'நான் அம்மா அப்பாவையோடை இருக்கேல்லை. பராமரிப்பிடத்திற்குப் போகப்போறேன்'. திகைத்துப்போனாள் அனேற்றா. 'என்ன சொல்லுறீர் ஜெனனி' எனக் கேட்டவளுக்கு, 'எனக்குச் சுதந்திரம் வேணும். வீட்டிலை எல்லாத்துக்கும் கட்டுப்பாடு போடுகினம். ஒரு இடமும் விடுகினம் இல்லை. எனக்கு அம்மா அப்பாவையே பிடிக்கேல்லை.' ஏக்கத்தோடும் சலிப்போடும் சொன்னாள், 'ஜெனனி! வடிவா யோசிக்கவேணும் ஜெனனி. அவசரப்படாதையும்!' என்ற அனேற்றாவைக் குறுக்கிட்டு, 'நல்லா யோசிச்சுத்தான் முடிவெடுத்தனான் இந்த நாட்டிலை நிரந்தரமாய்க் குடியேற நான் விரும்பேல்லை. வெளியிலையிருந்து படிச்சிட்டு என்ரையப்பா அம்மாவை வாழ்ந்த நாட்டுக்குப்போகப்போறேன்' சொல்லிவிட்டுப் போனாள் ஜெனனி.

அனேற்றாவுக்கு என்ன செய்வதென்று

என்னை அனுப்ப?' என்ற ஜெனனியை 'கதைக்கப் போறியோடி...' ஆத்திரத்தோடு பாய்ந்து அடித்தாள் றதி. 'கலாச்சாரம் கலாச்சாரமெண்டு குப்பைச் சிந்தனையளைத்தான் கட்டிப்பிடிச்சுக் கொண்டிருக்கிறியள். நீங்கள் 14 வயதிலை கலியாணங்கட்டினால் நானதுக்கென்ன செய்யிறது. அதுக்காக ணன்னையும் 14 வயதிலை கலியாணம் கட்டச் சொல்லுறியளே...?' விம்மியபடி கேட்டாள் ஜெனனி. றதியின் நகங்கள் ஜெனனியின் முகத்தில் கீறிக்கோபத்தைக்கொட்டின. தாயோடு போராடி வெல்ல முடியாது அறைக்குள் போயிருந்து அழுதாள் ஜெனனி. 'இதுதான் எமது கலாச்சாரமா.... இதுதான் எமது பண்பாடா... என்னுடைய சுதந்திரங்களை... நான் பெண் பிள்ளை என்பதால் மறுக்கப்படுகிற என்னுடைய விருப்பு வெறுப்புகளை என் உரிமையளைப் பறிக்கிறதுதான் தமிழ்க் கலாச்சாரம் பண்பாடென்றால், இந்தக் கலாச்சாரமும் பண்பாடும் எனக்கு வேண்டாம்...' சுவரில் தலையை மோதிக்கத்தினாள் ஜெனனி. 'உப்பிடியே அழுது சாவு' தீக்கங்குகளாய் தாயின் வார்த்தைகளோடுதான் ஜெனனி சுவரில் மோதுவதை நிறுத்தினாள். 'ஏன் நான் இப்பிடி அழவேண்டும்....? என்னை வருத்த வேண்டும்...? நான் என்ன குற்றம் செய்தனான்...., இப்படியழ...?' தன்னைக் கேட்ட ஜெனனி அறைக்குள்ளிருந்த தொலைபேசியில் காவல்துறையினரின் இலக்கத்தை அழுத்தி அழுதாள்...

பார்த்துக்கொண்டிருந்தனர். 'எங்கடை பிள்ளையளைத் தண்டிக்கவும் கண்டிக்கவும் எங்களுக்கு உரிமையிருக்கு. இந்த நாட்டிலை நாங்கள் அகதியளாகத்தான் இருக்கிறோம். உங்கடை குடியுரிமை எடுக்கேல்லை. இதிலை நீங்கள் தலையிடக்கூடாது.' கத்தினான் தேவன். 'உங்கடை பிள்ளையள் எண்டுபோட்டு நீங்கள் பிள்ளையளைத் துன்புறுத்திறதை எங்கடை அரசாங்கமும் சட்டமும் பார்த்துக்கொண்டிருக்காது. இந்த நாட்டிலை நீங்கள் இருக்கிறவரைக்கும் இந்த நாட்டுச் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டுத்தான் ஆகவேணும்.' எனக்கூறினான், ஒரு காவல்துறையினன். நாளை தங்கள் பணிமனையில் வந்து கதைக்கும்படி கூறிவிட்டு, ஜெனனியை அழைத்துக்கொண்டு போனார்கள் காவல் துறையினர். றதி அப்போதுதான் கண்ணீர் விட்டழுதாள். 'ஜெனனி! எங்களை விட்டிட்டுப் போகாதை.' ஜெனனி கேட்கவில்லை. அவர்களோடு போய்விட்டாள்.

மறுநாள் நீதிமன்றுக்கு றதியும் தேவனும் அழைக்கப்பட்டார்கள். ஜெனனியையும் கூட்டி வந்து நிறுத்தினார்கள். ஜெனனியின் உடற் காயங்களுக்கான உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழைக் காவல்துறையதிகாரி நீதிபதியிடம் கொடுத்தார். தேவன் றதி மீது நீதிபதியும் வழக்கறிஞர்களும் நெருப்பாய்க் கோபமாய் வார்த்தைகளைக் கொட்டினர். இறுதியில் பிள்ளையை அவர்களிடம் விடமுடியாது எனவும், பிள்ளை விரும்பும்படி பராமரிப்பில்லத்தில் சேர்க்கப்போவதாகவும் கூறினார்கள். ஜெனனி பராமரிப்பில்லத்தில் வாழத் தொடங்கினாள். அங்கிருந்தே தமிழாலயம் போய்த் தமிழும் படித்துக்கொண்டிருந்தாள்.

சில காலங்களின் பின் ஜெனனி பல்கலைக்கழகப் படிப்பை முடித்துப் மருத்துவராகிவிட்டாள். இனிப் பயிற்சிக் காலம் முடிந்தால் சரி அவள் விரும்பியபடி தன் தாயகம், தமிழீழம் போய்விடலாம். தேநீர்ச்சாலையில் இருந்தபடி எண்ணங்கள் அவளுக்குள் கருக்கட்டிக்கொண்டிருக்க.... 'வணக்கம் ஜெனனி! வாழ்த்துக்கள்' கைகளைக் குலுக்கினான் நண்பன் மிசேல். மிசேலின் வாழ்த்துக்களுக்கு நன்றி சொன்னாள் ஜெனனி. மிசேலுக்கும் தேநீர் கொண்டுவரச் சொன்னாள் ஜெனனி, பணியாளனிடம்.


மிசேல் ஒன்றாய் ஜெனனியோடு பல்கலைக் கழகத்தல் படித்தவன். வழமையாக இளம் உள்ளங்களுக்குள் துளிர்விடும் காதல் மிசேலுக்கும் ஜெனனி மீது உருவாகியது. ஆனால் ஜெனனி..., 'இஞ்சை பாரும் மிசேல்! பெற்றோரை விட்டு வந்து இவ்வளவும் படிச்சது, உம்மைச் காதலிச்சுக் கலியாணம் கட்டிக்கொண்டு இஞ்சை சுகமாக வாழிறதுக்கில்லை. எங்கடை பெற்றோர்

(தொடர்ச்சி 25ம் பக்கம்)

- புதியநிலா (ஜேர்மனி)

# வாரம் ஒரு விடயம்

## 'மொன்டிசோரி' கல்வி முறை



கல்வி முறைகளில் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க சிறந்த முறையாக விளங்கிவருவது மொன்டிசோரி முறையாகும். மொன்டிசோரி முறையானது, விருப்பமாகச் செயற்படும் ஒரு குழந்தையை, தன் இயல் கல்வியைத் 'தூண்டும்' திட்டப் பாடச் சூழ்நிலையில் செயற்படச் செய்கின்றது. ஒரு புதிய ஆசிரியரின் பயிற்சி பெற்ற உற்று நோக்கலில் தனி மனிதன் தனது இயல்பு நிலையை உயர்த்த முடியும், நம்பிக்கை, தகுதி, தன்கட்டுப்பாடு ஆகிய சூழ்நிலைகளைச் சந்திப்பதற்கான ஆயத்த நிலை ஆகியவையும் இக் கல்விமுறையில் அடங்கியுள்ளன.

இக் கல்வி முறை பற்றித் தெரிவதற்கு முன்னர் இக் கல்வி முறையை உருவாக்கியவர் யார் என்பதுபற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டும். இக் கல்வி முறையை உலகிற்கு அறிமுகப் படுத்தியவர் இத்தாலிய கல்வியியல் அறிஞரான மரியா மொன்டிசோரி ஆவார். அக் காலத்தின் சமூகக் கட்டுப்பாடுகளை மீறி ரோம் பல்கலைக்கழக மருத்துவப் பள்ளியில் கற்கை நெறி பயின்று, மருத்துவப் பட்டம்பெற்ற முதற் பெண்மணி என்ற பெருமையும் மொன்டிசோரிக்கு உரியது. இன்று சர்வதேச ரீதியில் 'உண்மையான மொன்டிசோரி கல்வி முறை' உருக்குலைந்துவிட்டபோதிலும், மொன்டிசோரி அம்மையார் குழந்தைகள் பற்றித் தெரிவித்த சித்தாந்தம்தான் அவரின் புகழினைக் காத்துநிற்கின்றது. 'மனித இனத்தின் ஆத்ம மறுமலர்ச்சிக்கு வழிகாட்டும் மீட்பாளர்கள், குழந்தைகள்' என்பது மொன்டிசோரி அம்மையாரின் அசைக்கமுடியாத நம்பிக்கையாகும். அதனால்தான் அவர் குழந்தைகளுக்காக பலத்த சிரமப்பட்டு ஒரு கல்விமுறையினை உருவாக்கினார். மொன்டிசோரி கல்வி முறையானது பொதுவான வகுப்பறைக் கல்விமுறையில் இருந்து முற்றிலும் மாறுபட்டது. புலப்பயிற்சி, தன்வளர்ச்சி, நன்கல்வி, ஆகிய இன்றியமையாக் கொள்கைகளைக் கொண்டுள்ளது இம்முறை. மொன்டிசோரி முறையில் ஒரு குழந்தையானது உற்றுநோக்கல், ஒப்பிடுதல், வகைப்படுத்தல், காரணம் காண்தல் ஆகிய சிந்தனைச் செயல்களின்மூலம் தன்னை ஆயத்தம் செய்துகொள்ளத்தக்க அறிவுணர் பயிற்சிகளைத் தானே தேர்ந்தெடுத்து முடித்துக்கொள்ள வேண்டும். இந்தத் தன்னுணர்வுக் கல்விமுறையால் தன்னகத்தே அடங்கியுள்ள திறமைகளைத் தூண்டி வெளிக்கொணர்ந்து, குழந்தை தனக்குத்தானே கற்பித்துக்கொள்கிறது. மொன்டிசோரி முறையில் ஆசிரியரின் பணியானது தேவைப்படும்பொழுது மட்டும் தலையிட்டு, மற்ற நேரத்திலெல்லாம் குழந்தை தன் சூழ்நிலையோடு செயற்படத்தக்க ஆயத்தத்தினைச் செய்வது மட்டுமே! பிறப்பிலிருந்து 6 வயதுவரை குழந்தையின் வளர்ச்சிப் பருவத்தின்போது அதனுடைய இயற்கை உள்தாக்கம் ஒரு தனிப்பட்ட ஆளுமை வடிவினை புலன், தசை, அறிவு ஆகியவற்றின் வளர்ச்சியால் அமைத்துக்கொடுக்கின்றது. தன் வடிவாக்கல் அல்லது தன் வளர்ச்சி பிறப்பிலிருந்தே கல்வி மூலம் அல்லது துணைபெறுகின்றது என்பதும் மொன்டிசோரி கல்விமுறையின் கருத்தாகும். ஒரு குழந்தையின் 'மூன்று வயது தான்' மொன்டிசோரி கல்வி முறையின் இன்றியமையாப் பருவமாகக் கருதப்படுகின்றது. ஒரு குழந்தையின் கல்வியாற்றலானது சூழ்நிலைத் தூண்டுதலால் வளர்க்கப்படாது விட்டால் அதன் அறிவு வளர்ச்சி குன்றிவிடும் என்பதையும் மொன்டிசோரி முறை எச்சரிக்கின்றது. மொன்டிசோரியின் கல்வித் துணைக் கருவிகள் மிக எளிமையானவை. பல்வேறு வடிவங்கள், நிறங்கள், வெளிப்பரப்புக்கள் கொண்ட சிறு சிறு பொருட்கள் ஆகியவையே மொன்டிசோரி கல்வித் துணைக்கருவிகளாகும். இக் கருவிகள் குழந்தையின் உள ஒருமைப்பாட்டிற்கு ஏற்ற கல்விக்குத் துணை புரியும் விதத்தில் அமைக்கப்பட்டன.

மொன்டிசோரி முறையில் கற்பிக்கும் ஆசிரியரானவர் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதையும் மொன்டிசோரி விளக்கியுள்ளார். குழந்தை ஒரு புதிய செயலைச் செய்யவும், திருப்பச் செய்யவும், மெதுவாகப் பணியாற்ற வேண்டிய இன்றியமையாமையையும் உணர்ந்து. குழந்தை விரும்பாத துறையை ஆசிரியர் குழந்தைமீது புகுத்தக்கூடாது என்பதையும் மொன்டிசோரி குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான சிறப்புக்கள் இக் கல்விமுறையில் இருந்தாலும் இக் கல்வி முறை தொடர்பான எதிர்க் கருத்துக்களும் கிளம்பாமல் இல்லை. இளம் மாணவர்களிடம் தன்னியல் கல்வி வளர்ச்சியை ஏற்படுத்தும் இக் கல்விமுறை, சமூகப்படுத்தலிலும் கற்பனை ஆற்றல் வளர்ச்சியிலும் பயன்படாது என குறைகூறுபவர்களும் உள்ளனர். எனினும் இக் கல்வி முறை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் பல, இதன் வெற்றியினைச் சுட்டிக்காட்டியுள்ளமை இக் கல்வி முறைக்குக் கிடைத்த பெரும் வெற்றிதான்.

# கடந்த நூற்றாண்டு கண்ட இரு பெரும் போர்கள்

## ஐந்து கோடி மக்களைப் பலி கொண்ட இரண்டாம் உலகப்போர் (1939 - 1945)

ஹிரோசிமா, நாகசாகி ஆகிய நகரங்கள் மீது அணுக்குண்டுகள் வீசப்பட்டதனால் ஏற்பட்ட பெரும் மனித அவலமும் மறுபுறத்தே ரஷ்யப் படையினரின் தாக்குதலின் வேகமும் ஜப்பான் நாட்டினைப் பெரிதும் சிந்திக்கவைத்தது. அமெரிக்க, ரஷ்ய வல்லரசுகளின் தாக்குதலுக்கு இனிமேலும் ஈடுகொடுக்கமுடியாது என்பதை உணர்ந்த ஜப்பான், 1945ம் ஆண்டு மே மாதம் 14ந் திகதி பணிந்துகொண்டது. இப்போரில் ஏறத்தாழ 6 இலட்சம் ஜப்பானியத் துருப்புக்கள் ரஷ்யாவிடம் சிறைப்பட்டதும் ஜப்பானின் இந்த முடிவுக்கு ஒரு காரணம். ஜப்பான் நாட்டினை இரண்டாம் உலகப்போரில் பணிந்துகொண்டதாகக் கோரப்படும் ஆவணத்தில் ஒப்பமிடவும் நெருக்குதல்கள் கொடுக்கப்பட்டன. இதன் விளைவாக செப்டெம்பர் மாதம் 2ம் திகதி டோக்கியோ விரிகுடாவில் நங்கூரமிட்டிருந்த 'மிசிரி' என்னும் போர்க் கப்பலில் ஜப்பானின் பணிந்துகொள்ளுதல் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும் 5 கோடி மக்களைப் பலிகொண்டதும் பெரும் மனித அவலங்களை விளைவித்ததுமான இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்தது.

போர் முடிவுக்கு வந்தாலும் போரின் கொடிய விளைவுகள் இன்றுவரை தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. இரண்டாம் உலகப்போரில் 70 நாடுகளைச் சேர்ந்த சுமார் 5 கோடி மக்கள் பலியாகினர். இத்தொகையில் ஒன்றரைக்கோடியினர் ரஷ்யர்களாகவும், 60 இலட்சம்பேர் சுவீடன் நாட்டினராகவும், 37 இலட்சம் ஜேர்மனியராகவும், 20 இலட்சம்பேர் போலந்து நாட்டவர்களாகவும், 16 இலட்சம் பேர் யூகோசிலாவியராகவும், 12 இலட்சம்பேர் ஜப்பானியர்களாகவும், 10 இலட்சம் பேர் இத்தாலியர்களாகவும் இருந்தனர். இதனைவிட 6 இலட்சம் ஆங்கிலேயர்கள், 5 இலட்சம் ருமேனியர்கள், 3 இலட்சம்பேர் பிரெஞ்சுக்காரர்கள், 2 இலட்சத்து 92 ஆயிரம் அமெரிக்கர்களும் பலியாகினர். அது மட்டுமல்ல 220 இலட்சம் சீனர்களையும் இப்போர் பலிகொண்டது. ஐரோப்பா ரீதியாக இப்போர் ஏற்படுத்திய அழிவுகளைப் பார்த்தபோது 130 இலட்சம் படையினரும் சுமார் 170 இலட்சம் பொதுமக்களும் கொல்லப்பட்டதாக வெளிப்படுத்தப்பட்டது. இப்போரின்போது உலகம் முழுவதும் தகவல் தொடர்புகள் பெரும்பாலும் துண்டிக்கப்பட்டன. 2 1/4 கோடி சதுரக் கிலோமீற்றர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்ட போர் நடவடிக்கைகள் பெரும்பாலான உலக மக்களை பெரும் துன்பக்கடலில் மூழ்கடித்ததென்னவோ உண்மைதான்.

பாசிச ஆட்சியாளர்களால் கட்டவிழ்த்துவிடப்பட்ட உலகப் போரினால் ரஷ்யா கிட்டத்தட்ட 1700 நகரங்களையும் 70,000 கிராமங்களையும் இழந்தது. பிரான்சில் கிட்டத்தட்ட 10,000 வீடுகள் தரைமட்டமாகின. கிறீசில் ஏறக்குறைய 400 சிற்றூர்கள் உருக்குலைந்தன. யூகோசிலாவியாவின் மொத்தக் கால்நடைகளில் 1/3 பங்கு மடிந்தன. இவ்வாறாக போரின் அழிவுகளைப் பட்டியலிட்டுக்கொண்டே செல்லலாம்.


அரசியல் ரீதியாகவும் இப்போரின் முடிவில் உலகில் பெரும் மாற்றங்களும் நிகழ்ந்தன. ஜேர்மனியின் நாசிச ஆட்சிக்கும், இத்தாலியின் பாசிச ஆட்சிக்கும் சாவு மணி அடிக்கப்பட்டது. ஜேர்மனி இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, மேற்கு ஜேர்மனி நேச நாடுகளின் உறுப்பினர்களான அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் மேற்பார்வையிலும், கிழக்கு ஜேர்மனி, ரஷ்யாவின் மேலாதிக்கத்திற்கும் உட்பட்டன. ஜேர்மன் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டதனால் பேர்லின் நகரமும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. பாசிச ஆட்சி ஒழிக்கப்பட்ட இத்தாலியில் குடியாட்சிமுறை நடைமுறைக்கு வந்தது. குடியாட்சி முறையின் தோற்றம் காரணமாக இத்தாலி தனது ஆபிரிக்கக் குடியேற்றங்களையும் இழக்கவேண்டி வந்தது. காலப்போக்கில் ஐரோப்பிய நாடுகள் தமது குடியேற்ற நாடுகளுக்கு விடுதலையை வழங்கின. இதனால் இந்தியா, சிங்கப்பூர், பர்மா, சிறீலங்கா, கொரியா முதலான நாடுகள் இப்போர் முடிவடைந்த கையோடு குடியேற்ற நாடுகளின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றன.

இரண்டாம் உலகப்போரானது இங்கிலாந்திலும், சில அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தத் தவறவில்லை. 1945ம் ஆண்டு நடாத்தப்பட்ட பொதுத் தேர்தலில் அட்லியின் தலைமையின் கீழான தொழிற் கட்சி பதவியைக் கைப்பற்றிக்கொண்டது. தொழிற்கட்சியின் பதவியேற்ற கையோடு இங்கிலாந்தின் ஏகாதிபத்திய, குடியேற்ற கொள்கைகள் கைவிடப்பட்டன. தொழிற் கட்சியின் அமைச்சரவை, இங்கிலாந்தின் குடியேற்றங்களுக்கு மட்டுமன்றி ஏனைய பிற ஐரோப்பியநாடுகளின் குடியேற்றங்களுக்கும் விடுதலை கிடைக்கும் என முனைப்புடன் பங்காற்றியது. ஆயினும் சிறீலங்கா போன்ற நாடுகளில் தனது குடியேற்றவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்தபோது சில தவறுகளையும் இக் கட்சி இழைத்துக் கொண்டது. குறிப்பாக தான் ஆதிக்கத்திற்குட்படுத்திய தமிழ் இராச்சியங்களையும் சுதந்திரம் என்ற போர்வையில் சிங்கள அரசிடம் இங்கிலாந்து கையளித்ததே அது புரிந்த 'வரலாற்றுத் தவறாகும்'.

இரண்டாம் உலகப்போரானது சர்வதேச அரங்கில் இங்கிலாந்தினதும், பிரான்சினதும் தனித்தன்மையினை இழக்கவைத்தது என்று கூறினால் அது தவறான கருத்தல்ல. வல்லரசுகள் என்ற போர்வையில் இவ்விரு நாடுகள் திகழ்ந்தாலும், சர்வதேச அரங்கில் அவற்றின் தனித்தன்மை இழக்கப்பட்டு அமெரிக்காவும் ரஷ்யாவும் பெரும் வல்லரசு நாடுகளாக உருவாகிக்கொண்டன. இரண்டாம் உலகப்போரினால் ஜப்பான் நாட்டின் பொருளாதாரம் மிகவும் சீர்குலைந்ததால் ஜப்பான் நாட்டின் கதை இத்தோடு முடிந்ததெனப் பலரும் நம்பியிருந்தனர். எனினும் ஜப்பான் மக்களின் ஆச்சரியப்படத்தக்க உழைப்பு, அந்த நாட்டினை பொருளியல் முடக்கத்திலிருந்து மீள உதவியது. ஜப்பானின் பொருளாதார சீரடைவிற்கு அமெரிக்காவின் அரவணைப்பும் ஒருவிதத்தில் காரணமாகத்தான் இருந்தது. இரண்டாம் உலகப்போரின் கொடுமைகளை யதார்த்த ரீதியாக பலநாடுகள் உணர்ந்துகொண்டதால் உலகின் அமைதியை, நிலையாக உருவாக்கவேண்டும் என்ற முனைப்பு பலநாடுகளின் ஆவலாக இருந்தது. இதனால் அமெரிக்காவின் சான்பிரான்ஸிஸ்கோ நகரில் 50 நாடுகள் கூடி ஐக்கிய நாடுகள் ஒப்பந்த ஆவணத்தில் கையொப்பமிட்டன. இவ் ஒப்பந்தத்தின் விளைவாக 1945ம் ஆண்டு ஒக்டோபர் 24ம் திகதி ஐக்கிய நாடுகள் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. எனினும் உலகம் நினைத்த அமைதி திரும்பியதா என்றால் அதுதான் இல்லை. இரண்டாம் உலகப்போர் முடிந்தகையோடு ரஷ்யாவிற்கும் அமெரிக்காவிற்குமிடையே அரசியல் சித்தாந்த ரீதியிலான பனிப்போர் தோன்றத்தொடங்கியதனால், அதன் விளைவுகள் உலகினை மெல்ல மெல்ல ஆக்கிரமிக்கத்தொடங்கின. அமெரிக்கா, ரஷ்யா ஆகிய இரு நாடுகளுமே தத்தமது அரசியல் சித்தாந்தத்திற்கு இசைவாக நடக்கும் நாடுகளை கொக்கிபோட்டு இழுக்க ஆரம்பித்தன. ரஷ்யாவின் பொதுவுடமைக் கொள்கை ஏனைய நாடுகளில் பரவக்கூடாது என்ற ரீதியில் அமெரிக்கா தனது பண பலத்தினையும் காட்டத்தொடங்கியது. போரில் பாதிக்கப்பட்ட கிறீஸ் துருக்கி போன்ற நாடுகளுக்கு ஏறத்தாழ 40 கோடி டொலர்களை அமெரிக்கா உதவியாகக் கொடுத்தது. அதுமட்டுமல்ல அப்போது அமெரிக்க வெளியுறவுச் செயலராக இருந்த மார்ஷலும் தனது பங்கிற்கு ஒரு திட்டத்தினை வகுத்து அதனை மேற்கு ஐரோப்பிய நாடுகளில் நடைமுறைப்படுத்த முயற்சிகளைச் செய்தார். அத்திட்டம் வெற்றிபெற்றதா? மறுமுறை பார்ப்போம்.

- சி.பி.

# தியன் பியன் பூ



(சென்ற வாரத்தொடர்ச்சி)

தியன் பியன் பூ இராணுவத் தளம் மீதான முற்றுகைத் தாக்குதல் மேற்கொள்ளப்படுவது அப் பகுதியில் நிலைகொண்டிருந்த படையினருக்கு மட்டுமல்லாது, கனோய் போன்ற வெளிப்பகுதிகளில் நிலைகொண்டிருந்த படையினருக்கும் தெரியவராத அளவிற்கு, போராளிகள் தமது நகர்வினை இரகசியமாக வைத்திருந்தனர். இதற்காக படையினருக்கு தகவல் கொடுப்பவர்கள், காட்டிக்கொடுப்பவர்கள் வியட்மிங் போராளிகளால் அடையாளம் காணப்பட்டு தண்டிக்கப்பட்டனர். அத்துடன் தமது நகர்வுகளையும் காடுகளினூடாக இரவிலேயே பெருமளவில் மேற்கொண்டனர். இதனால் வியட்மிங்குகளின் நகர்வுகள் குறித்த தகவல்கள் எதிரிப்படையினருக்குச் சென்றடைவது முற்றாகத் தடுக்கப்பட்டது. இதன் காரணமாக வியட்மிங் போராளிகளால் தமது தளம் சுற்றிவளைக்கப்பட்டது அங்கிருந்த படையினருக்கு தெரியவர வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இதேவேளை, வியட்மிங்குகளால் தமது நிலைகளை நெருங்கிவர முடியாது எனக்கருதி தமது பீரங்கிகள், தொலைதூர சுடுகலங்கள் மற்றும் டாங்கிகள் போன்றவற்றை உருமறைப்புச் செய்யவும் அங்கிருந்த படையினர் தவறியிருந்தனர். அத்துடன் பள்ளத்தாக்கில் இருந்த மரங்களை வெட்டி, தமது பாவனைகளுக்கு பயன்படுத்திக் கொண்டதால் அங்கு நிலைகொண்டிருந்த படையினரின் அசைவுகளைக் கண்டறிவது வியட்மிங் போராளிகளுக்கு இலகுவாகப்போய்விட்டது. தியன் பியன் பூ தளம் முற்றுகை முழுவதுமாக வியட் மிங் போராளிகளின் சுற்றிவளைப்பிற்குள் வந்து ஆறு வாரங்களின் பின்னரே அங்கிருந்த படையினருக்கு தாம் முற்றுகைக்கு உள்ளாகியிருக்கின்றோம் என்ற உண்மையை அறிந்து கொள்ள முடிந்தது.

ஹொ-சி-மின், ஜியாப்பும் இணைந்து எதிரியை மெல்ல மெல்ல நெருங்கி அவனது குரல் வளையை பிடிப்பது என்ற திட்டம் தியன் பியன் பூவில் அரங்கேற ஆயத்தமாகியது. இதற்கிடையில் இத் தளத்திற்கு விநியோகத்தை மேற்கொள்ளும் தளமாக 170 கிலோ மீற்றருக்கு அப்பால் கனோய் பகுதி விமானத்தளத்தில் இருந்த படையினருக்குச் சொந்தமான 38 விமானங்களை வியட் மிங்குகள் தாக்கியழித்தனர். இதேவேளை தரைவழியாக மேற்கொள்ளும் விநியோகங்களையும் தொடர்ந்து மேற்கொண்ட கடுமையான தாக்குதல்கள் மூலம் முறியடித்து வந்தனர். இந் நிலையில் தான் வியட்நாமின் எதிர்காலம் குறித்து ஜெனிவாவில் ஒரு மாநாடு நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன. இம் மாநாட்டில் வியட்நாமின் சுதந்திரத்தை பற்றி பேசுவதற்கு முன்னர், ஒரு இராணுவ வெற்றியை தமதாக்கி அதனை இம்மாநாட்டில் தமது பலமாக முன்வைக்க வியட் மிங்குகள்

ஹொ-சி-மின், ஜியாப்பும் இணைந்து எதிரியை மெல்ல மெல்ல நெருங்கி அவனது குரல்வளையை பிடிப்பது என்ற திட்டம் தியன் பியன் பூவில் அரங்கேற ஆயத்தமாகியது.

விரும்பினார்கள். அதற்கு அவர்களுக்கு உகந்ததாக இருந்தது இத் தியன் பியன் பூ இராணுவத் தளத்தை தாக்கியழித்து வெற்றி கொள்வதே. இதனால் அத் தளத்தை உடனடியாக தாக்கியழிக்கும் நடவடிக்கைக்கு தயாரானார்கள்.

1954 மார்ச் 12ம் நாள், வியட்மிங் போராளிகள் இத் தளத்தின் மீதான தாக்குதலை ஆரம்பித்தனர். தொடர்ந்து இரு பகுதியினருக்கும் இடையில் கடும் சண்டை நடைபெற்றது. வியட்மிங் போராளிகளின் பீரங்கி நிலைகள் உருமறைப்புச் செய்திருந்தமையால் பிரெஞ்சுப் படைகளால் அவற்றை இனங்கண்டு தாக்கியழிக்க முடியவில்லை.

இதேவேளை வியட் மிங்குகளால் இராணுவ நிலைகள் தெளிவாக இனம்காணப்பட்டிருந்தமையால் அவற்றை இலக்கு வைத்து கடுமையான தாக்குதலை மேற்கொண்டனர். இதேவேளை விமானம் மூலம் தரையிறங்கி தாக்குதல் நடாத்துவதற்கும், விமான மூலம் தாக்குவதற்கும் கனோய் பகுதியில் இருந்து வந்த பிரெஞ்சு விமானங்கள் மீது வியட் மிங்குகளின் விமான எதிர்ப்பு அணியினர் தொடர்ச்சியான தாக்குதலை நடாத்தி அவர்களின் முயற்சிகளை முறியடித்தார்கள். பனிப்புகார் சூழ்ந்திருந்த மலைப் பிரதேசங்களில் உள்ள போராளிகளின் நிலைகளை இலக்கு வைத்து தாக்க முடியாமல் பள்ளத்தாக்கில் இருந்த பிரெஞ்சுப் படையினர் திக்குமுக்காடினார்கள். இதேவேளை பருவமழையினால் அவர்களது காவலரண்களுக்குள் வெள்ளம் புகுந்து நிலைமையை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கிக் கொண்டிருந்தது.

நாட்களும் நகர்ந்துகொண்டிருந்தன. வியட்மிங்குகளும் முற்றுகையை இறுக்கியவாறு தொடர்ந்து தாக்குதலைத் தொடுத்தனர். தொடர் பதுங்குகுழிகளை அமைத்து தளத்தினை மிகவும் நெருங்கி, மையத்தளம் மீதான தாக்குதலுக்கு தம்மைத் தயாராக்கிக்கொண்டிருந்தனர். இக்காலப் பகுதியில் பத்திரிகையாளர் ஒருவர் ஹோ-சி-மின்னிடம் இத் தாக்குதல் நிலைமைபற்றிக் கேட்ட போது, ஹோ-சி-மின் தனது தலையிலிருந்த தொப்பியை எடுத்து அதனை தலைகீழாக கவிழ்த்து, தொப்பியினுள் உள்ளே காட்டி இதனுள்தான் பிரெஞ்சுப் படையினர் உள்ளனர். தொப்பியின் வெளி விளிம்பினை சுற்றிக் காட்டி இதுதான் எமது படைகள் நிலைகொண்டிருக்கும் பகுதி எனத் தெரிவித்திருந்தார். 50 நாட்களுக்கு மேலாகத் தொடர்ந்த தாக்குதலில் தளத்தில் இருந்த 16,000ற்கும் மேற்பட்ட படையினரில் 75 வீதமானோர் கொல்லப்பட்டனர். இதேவேளை போராளிகள் தரப்பிலும் பலர் உயிரிழந்தனர். எனினும் பலமான பின்னணித் தளமாக மக்கள் படையணி நின்றதால் வியட்மிங்குகள் தமது வெற்றியின் எல்லையை நெருங்கிக் கொண்டிருந்தனர். கொல்லப்பட்ட படையினரின் உடல்கள் அப்பகுதி எங்கும் சிதறிக்கிடந்தன. ஒரு சில நாட்கள் அமைதிக்குப் பின்னர், அடுத்து எப்போது வியட்மிங்குகள் தாக்குதலைத் தொடுக்கப்போகிறார்களோ என அங்கு எஞ்சியிருந்த பிரெஞ்சுப்படையினர் எதிர்பார்த்துக்கொண்டிருக்க, மலைவெளிகளையும், சமவெளிகளையும் கடந்து பிரெஞ்சுப் படையினரின் காதுகளில் ஒலித்தது அந்தப்பாடல்.

தோழர்களே! இரவின்
அமைதியில், விடுதலையின்
வரவினை நாம் உணர்கிறோம்..

என்ற விடுதலையின் பாடல் வியட்மிங்குகளால் ஒலிபெருக்கிகள் மூலம் அப்பகுதி எங்கும் கேட்கும் வண்ணம் ஒலிபரப்பப்பட்டது. அப்பாடலை பிரெஞ்சுப் படையினர் ஆச்சரியத்துடன் கேட்டனர். இது இவர்களின் பாடல். இவர்களது தேசிய விடுதலைப்பாடல்! ஜேர்மனியப் படையினருக்கு எதிராக பிரெஞ்சுப் படைகள் நடாத்திய வீரஞ்செறிந்த போராட்டத்தின் எழுச்சிக்குரல். அந்தப் பாடல்வரிகள் அவர்களின் காதுகளின் வழியே மனங்களைச் சென்று ஆக்கிரமித்தது. தங்களது விடுதலைப் போராட்டத்தைப் போன்றதே, இந்த வியட்நாமியர்களின் போராட்டம் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். 1954ம் ஆண்டு மே 7ம் திகதி வியட் மிங்குகளுக்கு எதிராக நடாத்திய தாக்குதலைக் கைவிட்டுவிட்டு தங்கள் ஆயுதங்களையும் கீழே போட்டுவிட்டு வியட் மிங்குகளிடம் சரண் அடைந்தார்கள். இதன் மூலம் வட வியட்நாம் முழுவதும் வியட் மிங்குகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. இந்த மகத்தான மிகப்பெரிய வெற்றியைச் சாதிக்க வியட்மிங்குகளுக்கு பக்கபலமாக நின்றவர்கள் வியட்நாமிய மக்களே.

ஆனால் இந்த வெற்றியின் பின்னால் நடைபெற்ற ஜெனிவா மாநாட்டில், வியட்நாம் வட வியட்நாம், தென் வியட்நாம் என இரண்டு நாடுகளாக துண்டாடப்பட்டு விட்டது. அதன் பின்னர் வட வியட்நாமில் கனோய் பகுதியை தலைநகராகக் கொண்டு வியட் மிங்குகள் ஆட்சியமைத்தனர். இதுவே தியன் பியன் பூ தளம் மீதான தாக்குதலின் வெற்றி. வியட் மிங்குகளின் போராட்டம் அத்துடன் முடிந்துவிடவில்லை. அங்கு கால்பதித்த அமெரிக்க ஆக்கிரமிப்பு படைகளுக்கு எதிராக மீண்டும் அவர்கள் ஆயுதம் ஏந்திப் போராடினார்கள்.

(முற்றும்)

- ஆதவன்

## புலம் பெயர்ந்த மண்ணில்...

(18ம் பக்கத் தொடர்ச்சி

பெண்பிள்ளையளெண்டால் ஆராவது ஒரு ஆணோடை பழகி ஏமாந்து கண்ணீரோடை வந்து தங்கடை கழுத்தையறுப்பார்கள் அல்லது அவமானப்படுத்தி விடுவார்கள், தங்கள் கௌரவங்களை என்ற எங்கடை சமுதாயப் பெற்றோரின் தவறான நினைப்பை அவையளின்ரை மனதிலிருந்து விலக்குறதுக்கு நான் உதாரணமாய் இருக்க விரும்புகிறேன். அடுத்தது, உங்கடை நாட்டுக்கு நாங்கள் இரண்டாம் தரப் பிரசைகள்தான். எங்களுக்காக ஒரு நாடு அங்குலம் அங்குலமாக மீட்கப் பட்டுக் கொண்டே வருகிறது. அங்கை ஆயிரக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும், மக்களும் எங்களுக்காக எங்கடை வாழ்வுக்காகத் தங்கடை உயிரை, உடலை, உடைமைகளை எருவா விதைக்கினம். அந்த மண்ணுக்கு என்ரை படிப்பும் சேவையும் கிடைக்க வேணுமெண்டு விரும்புகிறேன். இனி எனக்குத் திருமண வாழ்க்கையிலை வெறுப்பில்லை. என்ரை நாட்டிலை ஆயிரக்கணக்கான அங்கவீனர்கள் இருக்கினம். எதிர்காலக் கனவுகளை உள்ளங்களில் சுமந்துகொண்டு... அப்படியான ஒரு இளைஞனுக்கு ஒரு வாழ்க்கையை அமைச்சுக்கொடுத்து, அந்த இளைஞரோடு என் வாழ்வை வாழவிரும்புகிறேன். கோவிக்காதை மிசேல்! என்னை மறந்திடு...!' மிசேல் தன்விருப்பத்தைத் தெரிவித்த அன்றே இப்படிக்கூறி மறுத்துவிட்டாள் ஜெனனி.

'உம்முடைய நாட்டுப் பற்றுக்கும் சுத்தமான சிந்தனைக்கும் தலை வணங்குகிறேன் ஜெனனி.' பெருந்தன்மையாய்ச் சொல்லி அவள் மீதிருந்த காதலை பெருந்தன்மையோடு வாபஸ்வாங்கிக் கொண்டான். 'உம்மடை நண்பனாயிருக்கலாமா?' ஏக்கத்தோடு கேட்டவனுக்கு, 'அதைத்தான் விரும்புகிறேன் நானும்' என்றாள் ஜெனனி. அன்றில் இருந்து அவளுக்கு மிசேல் நண்பனாகவே இருக்கிறான்.

'ஜெனனி எனக்கு என்ன தரப்போறாய்?' கேட்டவனுக்கு 'என்ரை செலவிலை உங்களை என்ரை நாட்டுக்குக் கூட்டிக்கொண்டு போறேன்', சிரித்தபடி சொல்லிவிட்டுத் தேநீருக்கான காசைக் கொடுத்துவிட்டுப் போய்க்கொண்டிருந்தாள் ஜெனனி.

பாரிஸ் லாசப்பலில்
KTC CHANGE
193 rue du Fg.St.Denis, 75010 Paris
M°: Gare du Nord/La Chapelle - Tel: 42 05 41 36


★ எந்தவித கொமிசனும் இல்லாமல் உள்நாட்டு – வெளிநாட்டு நாணயங்களை மாற்றீடு செய்வதற்கும்
★ தங்க நாணயங்களை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்வதற்கும்

நங்கையர் மனங்கவரும் நல்ல தங்க நகைகளை நம்பிக்கையோடு ரெடிமேட்டாகவும் செய்தும் பெற்றுக்கொள்ள

கே.ரி.சி. ஜூவல்ஸ்
Pub.

# சுவிசில் கானக்குயில் 2000

சுவிசின் பிரதான நகரங்களில் ஒன்றான சூரிச்சில் 23.04.2000 அன்று கானக்குயில் 2000 நிகழ்வு மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மூன்றாவது தடவையாக நடாத்திய இக் கானக்குயில் 2000 என்றுமில்லாத ஒரு எழுச்சி விழாவாக மாற்றம் கண்டுள்ளது. ஆயிரத்தைத் தாண்டிய மக்கள் வெள்ளம், இருக்கைகள் அற்ற நிலையிலும் இதனை ஒரு ஆனையிறவின் வெற்றி விழாவாக மாற்றிக்கொண்டனர். வரலாறு படைக்கும் தமிழ் தேசியத்தின் மறக்கமுடியாத மாபெரும் வெற்றியை புகலிடத்தில் காணக்கூடியமைக்கு 'கானக்குயில் 2000' சிறந்த ஒரு எடுத்துக்காட்டு.




வரலாற்றில் உயர்ந்து நிற்கும் தமிழினத்திற்காக ஒப்பற்ற தியாகம் புரிந்த மாவீரர்கள், அப்பாவிப் பொதுமக்கள் அனைவருக்காகவும் ஒருகணம் மண்டபம் அமைதியைக் காத்து, ராதா நடனாலயத்தின் வரவேற்புடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. சிறியவர்களுக்கான போட்டி, பெரியவர்களுக்கான போட்டி என இரு பிரிவுகளில் எழுச்சிகானங்களைப் பாடும்வகையில் நிகழ்ச்சி அமைந்தது. இதற்கு சுவிஸ் கலை பண்பாட்டுக்கழகத்தினர் பின்னணி இசைவழங்கி நிகழ்வை தரமாக்கிக்கொண்டனர். மற்றும் சிறந்த அறிவிப்பாளர் போட்டி நடாத்தப்பட்டது. இவை அனைத்தும் பார்வையாளர் தெரிவின் அடிப்படையிலேயே இடம்பெற்றிருந்தன. பங்குபற்றிய அனைத்துப்போட்டியாளர்களும் தங்கள் திறமைகளை சிறப்பாக வெளிக்காட்டியிருந்தனர். ஆனாலும் தெரிவு அடிப்படையில் ஜேர்மனியில் இருந்துவந்து கலந்துகொண்ட திலகர், சிறந்த அறிவிப்பாளராகவும், கானக்குயில் 2000 ஆகவும் இரட்டை வெற்றியை தனதாக்கிக்கொண்டார். அத்தோடு இவர் ஒரு 'பல்குரல் வித்தகர்' என்பதையும் பரிசளிப்பின்போது நிரூபித்துக் கொண்டார்.

சிறியவர்களுக்கான இளம் கானக்குயிலாக லக்சன் தெரிவு செய்யப்பட்டார்.

இம் மூன்று போட்டிகளுக்கும் நடுவே பல சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன. தமிழகத்திலுள்ள கவிஞர் காசி ஆனந்தன், புரட்சிப் பாடகர் தேனிசைச் செல்லப்பா ஆகியோருடன் இணையமூலமான உரையாடல் நிகழ்ந்தது. அவர்கள் இருவருமே தமிழர்களின் தற்போதைய வெற்றிக் காலத்தையும் உறுதியோடு நேர்த்தியாக வழிநடத்தும் தலைவனையும் புகழாரம் சூட்டிக் கொண்டதோடு, வெற்றிப்பூரிப்பில் சில பாடல்களையும் எடுத்துவிட்டனர்.

தாயகத்தில் உள்ள பாடகர்கள் சாந்தன், குட்டிக்கண்ணன் இருவரும் இணைந்து கானக்குயில் நிகழ்வுக்காக 'விசேட பாடல்' ஒன்றையும் தொலைபேசியூடாக பாடிக்கொண்டனர். தாயகத்தில் நடைபெறும் வெற்றிக்கொந்தளிப்புகள் பற்றியும், புலத்தில் வாழும் உடன்பிறப்புகளின் பங்களிப்பின் பலா பலன்கள் பற்றியும் அறியமுடிந்தது. இது தவிர தாயகத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொள்ளும் திட்



டம் பற்றியும், ஓயாத அலைகள் 3 சந்தித்துவரும் பெருவெற்றிகள் பற்றியும் 'தாயகத்திலுள்ள ஒருவர்' அறியத்தந்தார்.

இவ்விழாவுக்கு வருகை தந்து சிறப்பித்துக்கொண்டவர்களில், வெரித்தாஸ் தமிழ்பணி இயக்குநர் கஸ்பார்ராஜ் அடிகள் குறிப்பிடத்தக்கவர். இவர் வழங்கிய உரை கருத்தாழம் மிக்கது. இன்றைய கால கட்டத்தில் செயற்படுத்திக்கொள்ள வேண்டிய முக்கிய கடமைகள் பற்றியும் அவர் குறிப்பிட்டார்.

தேசியத் தலைவரின் போரியல் சாணக்கியத்தை வெளிப்படுத்திய யாழ்ப்பாண வெளியேற்றம், அதன்பின் உலகமே வியக்கும் வண்ணம் கட்டியெழுப்பிய மரபுப் படையணிகள், இன்று தென்கிழக்காசியாவின் புதிய சக்தியாக, பிரமிக்கும் வெற்றிகளைக் குவிக்கும் நிலைமை, மாவீரர்களின் புனிதத்தை அசிங்கம் செய்த சிங்கள பேரினவாதிகளுக்கு பாடம் புகட்டும் வகையில், 2000 ஆண்டில் மாவீரர் நாள் யாழ் மண்ணில் நிகழும் என்று கூறி மக்களின் உணர்ச்சியை பொங்கியெழ வைத்ததோடு, இன்றைய காலம் மீண்டும் நமக்குக் கிடைக்காது. கிடைத்த இந்த அரிய சந்தர்ப்பத்தில் தீர்க்கமான தலைவன் வழியில் நீதிக்கும், நியாயத்திற்கும், நேர்மைக்குமான போராட்டத்தை வென்றெடுக்க மக்களை நோக்கி அறைகூவல் விடுத்தார் கஸ்பார் அடிகள்.

கானக்குயில் 2000 ஆனையிறவுத் தளத்தின் வெற்றிவிழாவாக உருவெடுத்து பல்நாட்டு தொடர்புகளை மேடையிலும் சித்தரித்துக்கொண்டிருந்ததை புலத்தில் IBC யும், களத்தில் புலிகளின் குரலும் நேரடியாகவே அஞ்சல் செய்துகொண்டன.

சுவிசின் பல வியாபார நிறுவனங்களின் ஆதரவுடன் நடைபெற்ற இவ்விழாவுக்கான பரிசளிப்பில் அறிவிப்பாளருக்கான பரிசுப்பணத்தைப் பெற்ற திலகரும், இளம் கானக்குயிலுக்கான பரிசுப்பணத்தைப் பெற்ற லக்ச



னும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடமே திருப்பி ஒப்படைத்தனர்.


பல்நாட்டு தொடர்புகளுடன் அனைத்துலக ரீதியில் வெளிக்காட்டப்பட்ட இந்நிகழ்வு, எதிர்பார்த்ததைவிட மிகவும் சிறப்பாக நடந்து முடிந்தது.

*– சங்கையூர் குமார்*

## புகலிட நிகழ்வுகள்

# திருப்பலி பூசையும் மக்கள் சந்திப்பும்

தமிழீழ மக்களின் துன்பம் தீரவும், அவர்களின் விடுதலை வேண்டியும் ஜேர்மன் ஒல்வன் நகர புனித வீற்றுஸ் பேராலயத்தில் திருப்பலி பூசையும் மக்கள் சந்திப்பும் இடம்பெற்றது. இதில் 600 இற்கும் மேற்பட்ட ஜேர்மன் மக்களும் 150 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்களும் கலந்துகொண்டனர்.





திருப்பலி வழிபாடுகளை அருட்திரு எஸ்.ஜே. இம்மானுவேல், ஒல்வன் பங்குத்தந்தை ஒஸ்கார் முல்லர், அருட்திரு. யோகன் றைடிக்கெல், அருட்திரு, அல்பர்ட்கோலன், அருட்திரு. ஈழம் அருள்ராஜ் ஆகியோர் இணைந்து ஒப்புக்கொடுத்தனர். வழிபாடுகள் தமிழ் - ஜேர்மன் மொழிகளில் இடம்பெற்றன.

திருவழிபாட்டின் முடிவில் பங்குச்சாலை மண்டபத்தில் ஜேர்மன் தமிழ் மக்கள் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது பத்திரிகையாளர்களும் கலந்துகொண்டனர். செல்வி வினோலினி நடேசனின் வரவேற்பு நடனத்துடன் இச் சந்திப்பு ஆரம்பமாகியது. அருட்திரு. இம்மானுவேல், அருட்திரு அல்பட்கோலன் ஆகியோர் ஜேர்மன் மொழியில் சிறீலங்காவிலும், தமிழீழத்திலும் தமிழர்கள் படும் துன்பங்களை எடுத்துக்கூறினர். ஜேர்மனியில் தஞ்சம்புகுந்துள்ள தமிழர்களை இன்றைய நிலையில் திருப்பி சிறீலங்காவுக்கு அனுப்ப வேண்டாம் என்றும், இது குறித்து ஜேர்மன் மக்கள் அரசுக்கு கடிதமூலம் தெரிவிக்க வேண்டும் என்றும் அவர்கள் இங்கு வேண்டுகோள் விடுத்தனர். சிறீலங்காவின் உண்மை நிலை குறித்து தாங்கள் பயனுள்ள தகவல்களை அறிந்துகொண்டதாக ஜேர்மன் மக்கள் தெரிவித்தனர்.

இந் நிகழ்ச்சி தொடர்பான விபரங்கள் படங்களுடன் ஜேர்மன் பத்திரிகைகளிலும் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

*– வீ.ஆர்.வரத்தராஜா.*


INDO EURO MONEY EXCHANGE (SELVAM) DENMARK

உங்கள் இலங்கை, இந்திய பணமாற்று தேவைகளை உடனுக்கு உடன் பூர்த்திசெய்ய டென்மார்க்கில் நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கை -நாணயம் மிக்க ஓரே ஸ்தாபனம் I.E. - M.E.

கொழும்பு, வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை, சென்னை, திருச்சி ஆகிய இடங்களுக்கு உடனுக்குடன் கொடுக்கலாம். கனடா, லண்டன், சுவிஸ், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருக்கும் பணத்தை உடன் பெற்றுக்கொள்ளலாம்.





தொடர்புகளுக்கு:

செல்வம் (டென்மார்க்)
T.P: 96 60 09 55 Mobil: 22 64 22 30
Ikast, Herning.

குட்டிப்பாலி (கனடா)
T.P: 416 - 242 5148

Pub.








சுவிஸ் நாட்டில் நடைபெற்ற மேதினப் பேரணியில் இருந்து சில காட்சிகள்.

## துயர்துடைப்பு நாட்கள் 2000
## தொண்டர்களுக்கான அழைப்பு

2000–2001ம் ஆண்டிற்கான தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தமிழீழப் பிரதேசங்களில் பட்டினிச்சாவுகளைத் தவிர்க்கும் அவசரத் திட்டங்களிலும், சிறுவர் மேம்பாட்டுப் பணிகளிலும், பெண்கள் மேம்பாட்டுத் திட்டங்களிலும், குடியமைப்புத்திட்டங்களிலும் நாமும் இணைந்து கொள்ள வேண்டாமா? எதிர்வரும் யூன் மாதம் 20ம் திகதி முதல் யூலை 05ம் திகதிவரை இடம்பெற இருக்கும் துயர் துடைப்பு நாட்கள் வேலைத்திட்டத்தில் தொண்டர்களாக இணைவோம். நம் உறவுகளின் வாழ்வை மேம்படுத்துவோம்.

தொண்டர்களாக இணைய விரும்புவோர் தமிழர் புனர்வாழ்வுக்கழக பிரெஞ்சுப் பணியகத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ இணைந்து கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
பிரெஞ்சுப் பணியகம்
26, Rue Departement, 75018 Paris - M°: La Chapelle
Tel: 0140 38 30 74



கடந்தவாரம் மாவீரர் வெற்றிக்கிண்ண நீச்சல் போட்டிக்குரிய நிழற்படம், 'அன்னை பூபதி நிகழ்வில் ஆனையிறவு வெற்றிச் செய்தியின் கீழ் வந்துவிட்டது. ஏற்பட்ட இத் தவறுக்கு வருந்துகிறோம்.

ஆ—ர்



ஜேர்மனியில் நடைபெற்ற அன்னை பூபதியின் 12வது ஆண்டு நினைவு நிகழ்வில் இருந்து.....

# கவிக்களம்

## அலைகள் ஓயுமா ஆனையிறவும் மிஞ்சுமா

இது எங்கள் யுகம்
இப் புதுயுகம் எமக்கு
சொந்தமானது....
தலைவராற்றிய உரையின்
அர்த்தம் ஈதென
ஆனையிறவினை
அடித்து வீழ்த்திய
வீரப்புலிகள்
சாதனை தன்னை
வியந்து போற்றுவோம்.

வெற்றிகொள்வீரராய்
வித்தான வீரரை
சொத்தென மதித்தே
தொழுவோம் அவரடி
தொடர்வோம் யாமே.

புத்தம் புதிய
போர்க் கருவிகள் கொண்டு
புகழ் பெற்ற நாட்டிடை
பயிற்சிகள் பெற்று
வித்தகராமென
வீரமும் பேசி
விதம் விதமான
விமானங்களோடு
எத்தொலை தூரமும்
ஏவிட வல்ல
எண்ணிலடங்கா
எறிகணைகள் எடுத்து
பத்தாயிரமாய்
படையணி பெருக்கி
பகலிரவாக நித்திரை நீத்து
மின்சாரம் பாய்ச்சி
மிதிவெடி தாட்டு
சுற்றிப் பற்பல
சிற்று முகாம்கள்
சுருள் சுருளாக
முட்கம்பி வேலி
தூர அசைவையும்
துலங்க வைக்கும்
தொலைநோக்கு கருவிகள்
சத்தம் இட்டதும்
சமிக்ஞை காட்டும்
உயர் சாதனங்கள்
சாணுக்கொன்றாய்
காவல் அரண்கள்
அத்தனை பலமும்
அமையப் பெற்ற
ஆனைப் பலமது மிக்க
ஆனையிறவினை

அணுகிட முடியுமா?
அறை கூவி நின்றதே
சிங்கள அரசு

எத்தனை வசதிகள்
எத்தனை வளங்கள்
எத்தனை படைகள்
எத்தனை பயிற்சிகள்
எத்தனை தடைகள்
எத்தனை தளபதிகள்
அத்தனை இருந்தும்
ஆனது என்ன
சத்தியத் தலைவனின்
சக்தியின் முன்னே
சாதனைப் புலிகள்
வீரத்தின் முன்னே
எத்தனை நாட்கள்தான்
எதிரி படை எங்கள்
முத்தமிழ் ஈழத்தில்
முகாம் இட்டிருப்பது

நாலாறு மணிநேரம்
நடந்த சமரினில்
ஓலமிட்டோடினர்
ஒப்பாரி வைத்தனர்
ஓயாத அலைகள்
வேகம் அறிந்தனர்
தீயென எரித்தது
சிறப்புத் தளமது
திகைத்தது சிங்களம்
சிரித்தனர் புலிகள்
வரித்தனர் வெற்றியை

ஆனையிறவென்ன
அனைத்து முகாம்களும்
அண்ணன் சேனைகள்
கைகளில் வீழும்
விண்ணில் புலிக்கொடி
வீசிப் பறக்கும்
மண்ணில் நற்றமிழ்
நறுமணம் வீசும்
பூமிப் பந்தின்
புதிய தேசமாய்
ஈழதேசம் இலங்குதல்
காண்போம்
புலம் பெயர் தமிழர் நாம்
வாரி வழங்குவோம்
வலுவினைச் சேர்ப்போம்.

*வட்டூர் - சாந்தினி சிவபாலன்.*


## தமிழ்ச்சோலை கல்வி நிலையம்
**நுவசி லு குறோண்ட்**

**புதிய தமிழ், நடன வகுப்புக்கள் ஆரம்பம்.**

காலம்: 07.05.2000 சனிக்கிழமை மாலை
16.30 மணிக்கு தமிழ் வகுப்புக்களும்,
08.05.2000 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு
நடன வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

இடம்: Masion Pour Tous
Noisy le Grand.

மேலதிக தொடர்புகளுக்கு கா.தவராசா
தொலைபேசி எண்: 01 43 04 93 54
நிர்வாகத்தினர்.





# ரதி ஜுவலர்ஸ்



28, Ealing Road, Wembley,
Middx HA0 4TL
Tel: 0181-9033063-Fax: 0181-9039711

'எப்பொழுதுமே மலிவு விலை'

OPEN: 7 Days a Week
Mon -Sat: காலை 10 முதல் மாலை 6.30 வரை
Sun: மதியம் 12 முதல் மாலை 6.30 வரை.

Pub

# ஹோமர்



**உலக வரலாற்றில் கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேலாக மனித வாழ்வியலில் பல்வேறு மாறுதல்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த பிரசித்தி பெற்ற பலரது விபரங்கள் இத் தொடரில் வெளிவருகின்றன.**

ஹோமர் கவிதை எழுதியவர் யார் என்பது பற்றிப் பல நூற்றாண்டுகளாக கருத்து வேறுபாடு நிலவி வந்தது. 'இலியட்', 'ஒடிசி', எப்போது, எங்கே, எவ்வாறு இயற்றப்பட்டன? ஏற்கெனவே இருந்த இலக்கியத்தை அவை எந்த அளவிற்குத் தழுவி எழுதப் பெற்றன? 'இலியட்', 'ஒடிசி' ஆகிய இரண்டையும் ஒருவரே எழுதினாரா? அவை ஒவ்வொன்றையும் தனித் தனியே ஒவ்வொருவர் எழுதினாரா? ஒரு வேளை ஹோமர் என்றொருவர் இல்லாதிருக்கலாம். இரு படைப்புகளும் இயல்பாக வளர்ந்திருக்கலாம். அல்லது பல்வேறு கவிஞர்கள் இயற்றிய கவிதைகளைப் பதிப்பாசிரியர்கள் தொகுத்திருக்கலாம். இவற்றையெல்லாம் பல ஆண்டுகளாக ஆராய்ந்த அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது. அப்படியிருக்கும்போது, பண்டைய இலக்கிய அறிவு இல்லாத ஒருவர் எப்படி இவற்றிற்கு உண்மையான விடைகளைக் கண்டு பிடிக்க முடியும்? ஆயினும் ஹோமர் இப்பட்டியலில் இடம் பெறுவாரெனில்) எந்த இடத்தைப் பெறுவார் என்பதைத் தீர்மானிக்க கீழ்க்கண்ட கருத்துகளைக் காண்போம்.

முதலாவது, 'இலியட்' படைப்பை ஒரு முக்கிய கவிஞர் படைத்திருக்க வேண்டும் எனலாம். (ஒரு குழுவினரால் படைக்கப் பெற்றிருக்க முடியாத அளவிற்கு அஃது அத்துணை அரியதாக இருக்கின்றது) ஹோமர் காலத்திற்கு முன், பல நூற்றாண்டுகள் அதே பொருள் பற்றிப் பல கிரேக்கக் கவிஞர்கள் சிறு கவிதைகள் எழுதியிருந்தனர். அவற்றிலுள்ள கருத்துகள் பலவற்றை ஹோமர் எடுத்துக் கொண்டார். ஆனால், அவர் முந்திய சிறு கவிதைகளை ஒன்று திரட்டித் தொகுத்தாரெனக் கூறுவது தவறாகும். அவர் சில கருத்துகளைத் தெரிந்தெடுத்து ஒருங்கிணைத்து, வேறு சொற்களில் புனைந்து, புதியன இணைத்து தமது தனிக் கலைத்திறனுக்கேற்ப இறுதி வடிவம் கொடுத்தார். இந்த அரிய படைப்பை உருவாக்கிய ஹோமர் கி.மு. 8 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கக் கூடும். அதற்கு முந்திய காலத்தில் அவர் வாழ்ந்ததாகவும் சிலர் கருதுகின்றனர். அவரே, 'ஒடிசி'யை எழுதிய முக்கிய கவிஞராகவுமிருக்கலாம். இரு கவிதைப் படைப்புகளும் (நடைவேறு பாட்டின் காரணமாக) இருவேறு கவிஞர்களால் இயற்றப்பட்டன எனக் கூறுவதில் ஓரளவு உண்மை இருப்பது போல் தோன்றினாலும், அவ்விரு படைப்புகளுக்குமிடையே காணப்படும் வேறுபாடுகளை விட, ஒற்றுமைகளே மிகுதியாகும்.

மேலே கூறியவற்றிலிருந்து, ஹோமரைப் பற்றி நமக்கு மிகக் குறைவாகவே தெரிந்திருக்கின்றது என்பது புலனாகும். அவரது வாழ்க்கை பற்றித் திட்டவட்டமான விவரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. ஹோமர் பார்வையிழந்தவராக இருந்தாரெனப் பண்டைய கிரேக்க காலம் முதல் மக்கள் நம்பி வந்தனர். ஆயினும், அவருடைய இரு படைப்புகளிலும் காணப்படும் அரிய கற்பனைக் காட்சியைப் பார்க்கும்போது, பிறப்பிலிருந்தே அவர் குருடராக இல்லை என்பது தெளிவாகின்றது. அவரது கவிதை நடையிலிருந்து அவர் ஈஜியக் கடலில் கிழக்குப் பகுதியான அயோனியாவைச் சேர்ந்தவர் எனத் தெரிகின்றது.

நன்கு புனையப் பெற்ற இவ்விரு நீண்ட கவிதைப் படைப்புகளும் எழுதப் பெறாமல் இயற்றப்பட்டன என்பதை நம்மால் நம்ப முடியவில்லையெனினும், அவை பெரும்பாலும், சிலவேளை முழுவதுமே, வாய்மொழியாக இயற்றப்பட்டவை எனப் பல அறிஞர்கள் கருதுகின்றனர். அவை எப்போது எழுத்து வடிவம் பெற்றன என்பது உறுதியாகத் தெரியவில்லை. அவற்றின் நீளத்தைப் பார்க்கும்போது (இரண்டும் சேர்ந்து 28,000 செய்யுள்கள்) அவை இயற்றப்பட்ட கொஞ்சக் காலத்திற்குள் எழுதப் பெற்றிருந்தாலன்றி, அவற்றை நுட்பதிட்பமாக வாய்மொழி மூலம் வழங்கியிருக்க முடியாது என்பது தெரிகின்றது. அஃது எப்படி இருப்பினும், கி.மு. 6ஆம் நூற்றாண்டில் அவ்விரு கவிதைப் படைப்புகளும் இருபெரும் இலக்கியப் படைப்புகளாகக் கருதப் பெற்றன. ஹோமாரின் வாழ்க்கை பற்றிய செய்திகளும் மறைந்துவிட்டன. அதன் பிறகு, கிரேக்கர்கள், 'ஒடிசி'யையும், 'இலியட்டை'யும் தம் நாட்டின் மேலான இலக்கிய படைப்புகளாகக் கருதி வந்தனர்.

## உலக வரலாற்றில் பதிவானவர்கள்

பிந்திய நூற்றாண்டுகளிலெல்லாம் இலக்கிய மரபுகள் மாறி வந்துள்ள போதிலும், ஹோமரின் புகழ் குறைந்து விடவில்லை.

> அவற்றின் நீளத்தைப் பார்க்கும்போது (இரண்டும் சேர்ந்து 28,000 செய்யுள்கள்) அவை இயற்றப்பட்ட கொஞ்சக் காலத்திற்குள் எழுதப் பெற்றிருந்தாலன்றி, அவற்றை நுட்பதிட்பமாக வாய்மொழி மூலம் வழங்கியிருக்க முடியாது என்பது தெரிகின்றது.

ஹோமரைப் பொறுத்தவரையில், அவருடைய புகழுக்கும் அவரால் வரலாற்றில் ஏற்பட்ட விளைவுகளின் அளவிற்கும் பெரும் வேறுபாடு இருக்கின்றது. அவருடைய படைப்புகளைப் பள்ளிகளில் மாணவர் அடிக்கடி படிக்கின்ற போதிலும், இன்றைய உலகில் பள்ளியையோ, கல்லூரியையோ விட்டு வெளியேறிய பின் ஒருசிலரே அவற்றை வாசிக்கின்றனர். இதற்கு மாறாக ஷேக்ஸ்பியரின் நாடகங்களையும் கவிதைகளையும் பலர் வாசிக்கின்றனர். அவருடைய நாடகங்களும் பலமுறை நடிக்கப்பெறுகின்றன. மக்களும் திரளாக அவற்றைப் பார்க்கின்றனர்.

ஹோமர் கவிதைகளிலிருந்தும் மேற்கோள் பரவலாக எடுத்துக் கூறப்படுவதில்லை. பார்ட்லெட்டின் நூலில் ஹோமரின் மேற்கோள் இடம் பெற்றிருப்பினும், அன்றாட உரையாடலில் அவை இடம் பெறுவதில்லை. மாறாக ஷேக்ஸ்பியரையும், பெஞ்சமின் ஃபிராங்களின், உமர்கய்யாம் போன்ற எழுத்தாளர்களையும் குறிப்பிடலாம். பலமுறை கூறப்படும், 'சேமித்த காசு ஈட்டிய காசைப் போன்றது' எனும் மேற்கோள் தனிமனிதனின் செயலையும் அரசியல் நோக்குகளையும், முடிவுகளையுமே பாதிக்கக்கூடியது. இவ்வாறு பரவலாக எடுத்தாளப்படும் மேற்கோள் ஹோமரின் கவிதைகளில் இல்லை.

கடந்த பல நூற்றாண்டுகளாக ஹோமரின் கவிதைகளைப் பெருந்திரளானோர் கேட்டிருக்கின்றனர் அல்லது படித்திருக்கின்றனர். பண்டைய உலகில் ஹோமரின் கவிதைகள் இன்றிருப்பதைவிட, மிகப் புகழ் பெற்றிருந்தன. கிரேக்க நாட்டில் அவருடைய படைப்புகளைப் பொது மக்கள் அறிந்திருந்தனர். அவை, சமய, அறநெறி நோக்குகளை நீண்டகாலமாகப் பாதித்துவந்தன. 'ஒடிசி', 'இலியட்' ஆகிய இலக்கியங்களை இலக்கிய அறிஞர்கள் மட்டுமன்றி, படைத்துறை அரசியல் தலைவர்களும் நன்கு அறிந்திருந்தனர். பல பண்டைய ரோமானியத் தலைவர்கள் ஹோமர் கவிதைகளிலிருந்தும் மேற்கோள் காட்டினர். மகா அலெக்சாந்தர் தம் படையெடுப்புகளின் போது 'இலியட்டை' எடுத்துச் சொல்வாராம். இன்றும் சிலர் மிகுதியாக விரும்பும் கவிஞராக ஹோமர் இருக்கின்றார். நம்மில் சிலர் அவருடைய படைப்புகளை (ஓரளவாவது) பள்ளியில் படித்திருக்கிறோம்.

இலக்கியத்தில் ஹோமர் ஏற்படுத்திய விளைவுகள் இதைவிட முக்கியமானவை. எல்லா பண்டைய கவிஞரிடமும் நாடக ஆசிரியரிடமும் ஹோமரின் விளைவுகளைக் காணலாம். சோஃபோக்கிளிஸ், யூரிப்பிடிஸ், அரிஸ்டாட்டில் போன்றோர் ஹோமரின் மரபில் திளைத்தவர்கள். அவர்கள் அனைவரும் இலக்கிய சிறப்பு பற்றிய கருத்துகளை அவரிடமிருந்தே பெற்றனர்.

பண்டைய ரோமானிய எழுத்தாளரையும் ஹோமர் பெரிதும் கவர்ந்தார். அவர்கள் அனைவரும் ஹோமரின் கவிதையையே சிறப்பின் அளவு கோலாகக் கொண்டனர். ரோமானிய எழுத்தாளருள் மிகச் சிறந்தவராகக் கருதப்படும் வெர்ஜில், தமது 'ஈனிட்' எனும் அரும் படைப்பை ஹோமரின் 'இலியட்', 'ஒடிசி' போலவே அமைத்தார்.

தற்காலத்திலும்கூட, சிறந்த எழுத்தாளர்கள் எல்லோரையும் ஹோமர் கவர்ந்துள்ளார். அல்லது அவரால் ஈர்க்கப்பெற்ற சோஃபோக்கிளிஸ் அல்லது வெர்ஜில் போன்றோர் கவர்ந்துள்ளனர். வரலாற்றில் வேறு எந்த எழுத்தாளரும் இவ்வளவு பரவலான, நீண்டகாலச் செல்வாக்கைப் பெற்றிருக்கவில்லை.

இறுதியில் கூறிய குறிப்பு முக்கியமானது. கடந்த ஒரு நூற்றாண்டாக ஹோமரைவிட அதிகச் செல்வாக்கை டால்ஸ்டாய் பெற்றிருக்கக்கூடும். மேலும் ஹோமரைவிட டால்ஸ்டாய், அதற்குமுன் 26 நூற்றாண்டுகளாக எவ்வகையான செல்வாக்கையும் பெறவில்லை. ஆனால் ஹோமரின் செல்வாக்கு தொடர்ந்து 2,700 ஆண்டுகளாக நிலை பெற்று வந்துள்ளது. அது மிக நீண்ட காலமாகும். பல இலக்கிய படைப்பாளர்கள் அல்லது மனிதனின் முயற்சியில் எத்துறையைச் சேர்ந்தவர்களும் . அத்தகைய நிலைக்கு உயர இயலாதெனலாம்.

டென்மார்க்கில் இருந்து முதல் முறையாக வெளியாகும் TeleCard

**Universal Tele Card**

எமது வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கும் இன்னும் ஏராளமான நாடுகளுக்கும் அதிக நேரங்களுடன் வெளிவருகிறது Universal Tele Card என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறார்கள் DKS-NÆRKØB ஸ்தாபனத்தினர்.

மொத்தமாகவும், சில்லறையாகவும் கொள்வனவு செய்யவிரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

Korskaervej - 104, 7000 Fredericia-DK


Tlf: 75915804 - 75915805 - Fax: 75915842

எம்மிடம் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு டென்மார்க் நாட்டின் அங்கோரத்துடன்

★ பற்றுச்சீட்டு வழங்கப்படும்.

★ அத்துடன் UNIVERSAL Tele Card தொடர்புகளுக்கு ஏற்படும் இடையூறுகளை உடனுக்குடன் கவனிக்க இதற்கான தொழில்நுட்ப அலுவலகம் பரடோ நகரில் கூந்திருக்கிறது என்பதை உத்தரவாதப்படுத்துகிறார்கள் DKS நியர்குமிப் ஸ்தாபனத்தார்.

100DK





UNIVERSAL Tele Card

Pub

# கங்குலிக்கு சியட் சர்வதேச விருது

1999ம் ஆண்டு மே முதலாம் திகதியிலிருந்து 2000ம் ஆண்டு ஏப்ரல் முப்பதாம் திகதி வரையான காலப்பகுதியில் நடைபெற்ற டெஸ்ட், ஒருநாள் கிரிக்கட் போட்டிகளை வைத்து சியட் (Ceat) சர்வதேச விருது வழங்கப்படுகிறது. இம்முறை இவ்விருதை இந்திய அணித்தலைவர் கங்குலி பெற்றுக்கொள்கிறார். 1996ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சியட் சர்வதேச விருது வழங்கலில் இரண்டாம் தடவையாக இந்திய வீரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 1996 - 97ம் ஆண்டுக்கான



விருதினை வேகப்பந்து வீச்சாளர் வெங்கடேஷ் பிரசாத் முதலாவது இந்தியராக பெற்றுக்கொண்டார். இம்முறைக்கான விருதைத் தெரிவுசெய்வதில் இந்தியாவின் சுனில் கவாஸ்கர், அவுஸ்திரேலியாவின் இயன் சப்பல், மேற்கிந்தியத் தீவுகளின் கிளைவ் லொயிட் அடங்கிய குழுவினர் ஈடுபட்டனர். இக்குழுவினர் சரியான வீரனைத் தெரிவு செய்வதில் பலத்த போட்டி நிலவியது. கங்குலி, டெண்டூல்கர் ஆகிய இந்திய வீரர்களுடன் நியூசிலாந்து வீரன் ஹெர்ன்ஸ் முக்கிய போட்டியாளர்களாக இருந்தபோதிலும் துடுப்பாட்டம், பந்துவீச்சு, மைதானத்தடுப்பு அனைத்தையும் அலசி ஆராய்ந்ததில் கங்குலியே சிறு புள்ளிகள் வித்தியாசத்தில் தெரிவானார். 98 புள்ளிகளுடன் கங்குலி தெரிவாக, 95 புள்ளிகளுடன் டெண்டூல்கர் ஹெர்ன்ஸ் கூட்டாக இரண்டாம் இடத்தை வகித்தனர். சியட் விருது வழங்கலில் மிகவும் குறைந்த புள்ளி வித்தியாசத்தில் தலைசிறந்த வீரன் தேர்வு செய்யப்படுவது இதுவே முதல் முறையாகும். விருதைப் பெறும் இந்திய அணித் தலைவருக்கு 5 இலட்சம் இந்திய ரூபாய்களும் விருதுக்கான கோப்பையும் கிடைக்கிறது. விருதுக்கான வரையறை செய்த காலப் பகுதியில் கங்குலி 468 ஓட்டங்களையும் 11 கச்சுகளை டெஸ்ட் போட்டிகளிலும், 1902 ஓட்டங்களையும் 18 விக்கட்டுக்களையும் 10 கச்சுகளை ஒருநாள் போட்டிகளிலும் பெற்றார். உலகக்கிண்ணப் போட்டியில் சிறீலங்காவுக்கெதிராக 183 ஓட்டங்களை நொருக்கித்தள்ளியதும் குறிப்பிடத்தக்கது.

### இம்முறைக்கான சியட் வீரர்கள் தரநிலை வருமாறு:

| வீரர் | நாடு | புள்ளிகள் |
|---|---|---|
| 1. கங்குலி | இந்தியா | 98 |
| 2. டெண்டூல்கர் | இந்தியா | 95 |
| ஹெர்ன்ஸ் | நியூசிலாந்து | 95 |
| 4. கில்கிறிஸ்ட் | அவுஸ்திரேலியா | 84 |
| 5. கலிஸ் | தென்னாபிரிக்கா | 80 |
| 6. பொயின்டிங் | அவுஸ்திரேலியா | 76 |
| மைக்கிறாத் | அவுஸ்திரேலியா | 76 |
| குளுஸ்ணர் | தென்னாபிரிக்கா | 76 |
| 9. திராவிட் | இந்தியா | 75 |
| மார்க் வோவ் | அவுஸ்திரேலியா | 75 |

### இதுவரை சியட் சர்வதேச விருது பெற்றோர்கள் விபரம்:

| | | |
|---|---|---|
| 1996 | லாறா | மேற்கிந்தியதீவுகள் |
| 1997 | பிரசாத் | இந்தியா |
| 1998 | ஜெயசூரியா | சிறீலங்கா |
| 1999 | கலிஸ் | தென்னாபிரிக்கா |
| 2000 | கங்குலி | இந்தியா |

# கபில்தேவ் குமுறல்

உலகை கலக்கியடித்துக் கொண்டிருக்கும் கிரிக்கட் சூதாட்டம் பற்றிய செய்திகளில் கபில்தேவ் பற்றிய செய்தியும் சூடுபிடித்துள்ளது. இந்திய கிரிக்கட்டின் சாதனை நாயகன், உலகக்கிண்ணத்தை இந்தியாவுக்குப் பெற்றுத் தந்த அணியின் தலைவன், ஹரியானா சிங்கம் என்றெல்லாம் பெருமையாகப் பேசப்பட்ட கபில்தேவ் மீது பேரிடியை போட்டிருக்கிறார் இந்திரஜித் சிங் பிந்தரா. இந்திய கிரிக்கட் வாரியத்தின் முன்னாள் தலைவரான பிந்தரா கபில்தேவ் மீது போட்ட குற்றச்சாட்டு என்னவென்றால் 1994ம் ஆண்டு இந்திய அணியின் சிறீலங்கா விஜயத்தின்போது மோசமாக ஆடவேண்டி மனோச் பிரபாகருக்கு 25 இலட்சம் இந்திய ரூபாய்கள் கொடுக்க முயன்றது என்பதாகும். இது தொடர்பாக பி.பி.சிக்கு பேட்டி வழங்கிய கபில்தேவ் 'கிரிக்கட்டில் என் பெயர் ஆண்டாண்டுக்கும் காக்கப்பட்டு வந்தது' பிந்தரா கூறிய



குற்றச்சாட்டில் அத்தனையும் முடிந்துவிட்டது. இதுபோன்ற கேவலமான செயலை நான் செய்யும் நிலை வந்தால் உயிர் விடுவேனே தவிர சூதாட்டம் செய்து வாழமாட்டேன். யாருக்காவது என்பணம் முழுவதையும் வேண்டுமானால் கொடுக்கத் தயார்.

ஆனால் எனக்கு கௌரவந்தான் மிகவும் முக்கியம். அதை இழந்துவிட்டு வாழ்வதைவிட சாவதே சிறந்தது. இத்தனை காலமும் கிரிக்கட்டுக்காக வாழ்ந்ததை நினைக்கும்போது இப்போது வெட்கப்படுகின்றேன். வேதனை அடைகின்றேன். என் மீது சந்தேகம் தீரவில்லை என்றால் என் வங்கிக் கணக்குகளைச் சோதித்துப்பார்க்கலாம். அதற்கும் நான் தயார். இதுபோன்ற போலிக் குற்றச்சாட்டுகளுக்குப் பயந்து நான் என்னுடைய பொறுப்பை விட்டுவிட்மாட்டேன். இந்திய அணியின் பயிற்சியாளராகத் தொடர்ந்தும் நீடிப்பேன்' என குமுறியுள்ளார்.

# அவுஸ்திரேலியா முன்னிலையில் உள்ளது

1996 இலிருந்து நடைமுறையிலுள்ள சியட் (Ceat) சர்வதேச விருது வழங்கலில் வீரர்களுக்கு மட்டுமன்றி நாடுகளுக்கும் வழங்கப்படுகிறது. ஒவ்வொருநாடும் பங்குபற்றும் ஒருநாள், டெஸ்ட் போட்டிகளில் ஏற்படுத்தும் வெற்றி தோல்விகளை அடிப்படையாகக் கொண்டே நாடுகளின் தரம் கணிக்கப்படுகிறது. கடந்த ஒருவருடமாக அவுஸ்திரேலிய அணியின் இமாலய வெற்றிகளுக்குப் பின்னும் அதற்கு விருது கிடைக்காமல் போகுமா? இதுவரை வழங்கிய சியட் விருதுகளிலேயே அதிகூடிய புள்ளிகளைப் பெற்று கங்காருதேசம் அசைக்க முடியாத இடத்தில் உள்ளது. 1999 உலகக்கிண்ண வெற்றியுடன் தொடர்ச்சியான சிம்பாவே, பாகிஸ்தான், இந்தியா, நியூசிலாந்து நாடுகளுக்கெதிராக 10 டெஸ்ட் வெற்றிகள் இத்துடன் தொடர்ந்து 13 ஒருதினபோட்டிகளில் மகுடம் சூட்டிய முடிவுகள் அவுஸ்திரேலிய அணிக்கு மிக சாதகமாக அமைந்தது. 1999-2000 காலப் பகுதியில் 13 டெஸ்ட்டுகளில் விளையாடி 10 வெற்றி ஒன்றில் மட்டும் தோல்வி, ஒருதினப் போட்டிகளில் 37-ல் கலந்து 29-ல் வெற்றிவாகை பெற்ற பலமான அவுஸ்திரேலிய அணிக்கு 154 புள்ளிகள் கிடைத்தன. மிகக் கூடிய புள்ளிகளான 53 புள்ளிகள் பின்தள்ளிய நிலையில் தென்னாபிரிக்கா இரண்டாம் இடத்தைப் பெற்றது. 1998ம் ஆண்டிலும் அவுஸ்திரேலியா சியட் விருதினைத் தட்டிச் சென்றுள்ளது. இம்முறைக்கான சியட் தரநிலை நாடுகளுக்கான அட்டவணை பின்வருமாறு:

| நாடு | டெஸ்ட் புள்ளிகள் | ஒருநாள் புள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1. அவுஸ்திரேலியா | 78 | 76 | 154 |
| 2. தென்னாபிரிக்கா | 49 | 52 | 101 |
| 3. சிறீலங்கா | 39 | 30 | 69 |
| 4. பாகிஸ்தான் | 6 | 60 | 66 |
| 5. நியூசிலாந்து | 34 | 26 | 60 |
| 6. இந்தியா | 8 | 44 | 52 |
| 7. மேற்கிந்திய தீவுகள் | 14 | 35 | 49 |
| 8. இங்கிலாந்து | 15 | 18 | 33 |
| 9. சிம்பாவே | 0 | 14 | 14 |
| 10. பங்களாதேஷ் | 0 | 4 | 4 |

# கிங்கிஸ் மீண்டும் முதல் நிலைக்கு

டெனிஸ் உலகை குறுகிய காலத்தில் கலக்கிவிட்ட மார்டீனா கிங்கிஸ் கம்பூர்க் (Hamburg) போட்டியை வெற்றி கொண்டதன் மூலம் டவன்போட்டிடம் இழந்த முதல்நிலையை மீண்டும் தட்டிப் பறித்துவிட்டார். இறுதியாட்டத்தில் சஞ்சேயை 6:3, 6:3 என வெற்றி கொண்டு முதல்நிலையை அடைந்தது மட்டுமன்றி 87,000 அமெரிக்க டொலர்களையும் பரிசாக கிங்கிஸ்பெற்றுக் கொண்டார். தனது 14 ஆவது வயதில் கம்பூர்க் போட்டியில் இறுதியாட்



டத்தை எட்டிப்பார்த்த கிங்கிஸ் தற்போதைய வெற்றிமூலம் 137 வார தனது முதல்நிலையை தொடர்கிறார்.

31.03.97 முதல் முறையாக கிங்கிஸ் முதல்நிலையைப் பெறத் தொடங்கிய போது வயது 16.

தொகுப்பு:
பொன். தாமோதரம்

# பார்சலோனாவில் மக்லேறனுக்கு இரட்டை மகிழ்ச்சி

ஆரம்பப் போட்டிகளில் வெற்றிகொண்ட ஃபறாறி ஓட்டுநர்களைப் பின்தள்ளி வைத்துவிட்டு மக்லேறன் ஓட்டுநர்கள் முன்னேறி வருகின்றனர். 07.04.2000 பார்சலோனா நகரில் நடைபெற்ற கார்ஓட்டப் பந்தயத்தில் (Formula 1) முதல் இரு இடங்களும் மக்லேறனுக்கே கிடைத்துள்ளது. ஹக்கினன் முதலாம் இடத்தையும் குல்தாட் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொள்ள ஃபறாறி ஓட்டுநர் பார்ச்சிலோ மூன்றாம் இடத்தையே பெற முடிந்தது. சென்ற வருடத்தைப் போல் இவ்வருடமும் மக்லேறன். ஃபறாறி போட்டி கடுமையாகிவருகிறது.

இவை இரண்டுக்கும் இணையாக மற்ற நிறுவன தயாரிப்பு கார்கள் போட்டியிட முடியவில்லை.



## அடுத்த வாரம் முதல்
## சுகிர்தராஜ் எழுதும்
## சார்ள்ஸ் து கோல் வரலாறு



2ம் உலகமகா யுத்தத்தின்போது ஜேர்மனியால் பிரான்ஸ் ஆக்கிரமிக்கப்பட்டது. அவ்வேளையில் யாருக்குமே தெரியாது. ஒரு சாதாரண அதிகாரியாக இருந்த சார்ள்ஸ் து கோல் (Charls de Gaulle) நான்கு ஆண்டுகளாக வீரத்துடன் போராடி ஜேர்மன் நாஜிப்படைகளிடம் இருந்து பிரான்சை மீட்டெடுத்தார். அம் மாவீரனின் வரலாறு அடுத்த வாரம் முதல் ஈழமுரசில் தொடராக வெளிவரவுள்ளது.


SFR
PHONE 2000
DISCOUNTER
130
V3688
Motorola
T28
T185
T105
Ericsson
8210
8850
3210
7110
9110
Nokia
C25
S25
Siemens
5110
6150
Nokia
GH600
GH2100
GH2200
GH2400
Samsung
Ericsson T28s
→ 199F
1F
ACCES à INTERNET Illimité
Portail Net-Up.
Adresses e-mail.
Pages personnelles jusqu'à 50 Mo.
COMMUNICATIONS
5 heures/mois incluses dans chaque forfait.
Une solution @ business
16 LOGICIELS Gratuits
Lotus Smartsuite (traitement de texte, tableur, organiseur...) et Norton Antivirus
Sous Windows 98.
ACQUISITION D'UN ORDINATEUR IBM Multimédia
Modem fax intégré.
Lecteur CD-Rom ou DVD.
Ecran 15" ou 17".
Micro-processeur jusqu'à 450 Mhz.
BOUQUET de SERVICES Gratuits
Livraison et dépannage à domicile.
Garantie et maintenance 36 mois.
Assistance téléphonique (0,99FTTC/min).
NIMH LI-ION
Nokia 8850
→ 2490F
Motorola V3688
→ 199F
☆ தொலைபேசிகள் திருத்திக் கொடுக்கப்படும்.
☆ 1F இல் இருந்து தொலைபேசிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
☆ எம்மிடம் மொத்தமாகவும் கொள்வனவு செய்யலாம்.
☆ பிரான்சில் ஏனைய வர்த்தக நிலையங்களைவிட எம்மிடம் மலிவான விலையில் தொலைபேசிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
PHONE 2000
85, Rue des Prénées,
75020 Paris.
☎: 01 40 09 13 15
Fax: 01 40 09 05 01
M°: Marîchers
PHONE GSM
Téléphone Direct
சிவா
☎: 06 20 21 11 11
PHONE 2000
5, Bld. davout,
75020 Paris.
☎: 01 43 71 40 30
Mobile: 06 17 17 28 17
M°: Porte de Vincennes
Pub.

# ஆனையிறவு ஊடாக போக்குவரத்து

(08.05.00)

ஆனையிறவு இயக்கச்சிப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரால் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகள் விடுதலைப் புலிகளால் அகற்றப்பட்டதையடுத்து ஆனையிறவு ஊடான போக்குவரத்துக்கள் ஆரம்பமாகியுள்ளதாகத் தெரியவருகிறது.

பச்சிளைப்பள்ளிப் பகுதியைச் சேர்ந்த பெருமளவு மக்கள் இப்பாதையூடாகப் பயணம் செய்து புதுக்குடியிருப்புப் பகுதியைச் சென்றடைந்ததாகவும் தெரியவருகிறது.

இது ஒருபுறமிருக்க ஆனையிறவு வெற்றியை அடுத்து இது தொடர்பான சுவரொட்டிகள் பல யாழ். குடாநாட்டில் பல பகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளன. யாழ். பல்கலைக்கழகத்தின் உள்ளேயும் இச் சுவரொட்டிகள் காணப்படுவதாக யாழ்ப்பாணச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## 59 உடல்கள் ஒப்படைக்கப்பட்டன

(08.05.00)

பளை இராணுவ முகாம் மீதான தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்களில் கடந்த செவ்வாயன்று 42 உடல்களை ஒப்படைத்த விடுதலைப்புலிகள், மறுநாள் மேலும் 17 உடல்களை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக இராணுவத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கடந்த புதனன்று கிளிநொச்சியில் வைத்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகப் பொறுப்பாளர் தங்கன் அவர்களால் சர்வதேசச் செஞ்சிலுவைக் குழுவினரிடம் இவ் உடல்கள் ஒப்படைக்கப்பட்டன.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

### பேர்லினில்....

ளது. அத்துடன் தொடர்சியான கூட்டங்களையும் பேர்லினில் வசிக்கும் சிங்கள மக்களிடையே நடத்தி வருகின்றது.

எதிர்வரும் 30ம் திகதி இவ் அமைப்பு நிதி திரட்டும் நோக்கில் சிங்கள கலை நிகழ்ச்சி ஒன்றை ஒழுங்கு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

### சந்திரிகாவின்....

பயன்படுத்த மறுத்துள்ளது, அவரது உள்நோக்கத்தை அம்பலப்படுத்தகிறது.

சிக்கிக்கொண்டுள்ள தனது இராணுவத்தினரை காப்பாற்றுவது என்ற பெயரால் ஆயுத உதவிகளை பெற்றுப் போரைத் தொடர்வதே அவரது நோக்கமாகும். சந்திரிகாவின் இந்தப் போர்வெறியை கண்டனம் செய்ய இந்திய அரசு முன்வர வேண்டும். இனி மனிதாபிமான உதவி உட்பட எத்தகைய உதவியும் இந்தியா அளிக்கக்கூடாது என்று வற்புறுத்துகிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

### சிறீலங்கா......

இலங்கை இந்தியாவின் அண்டை நாடு. அதன் இறையாண்மையும், பிராந்திய ஒருமைப்பாடும் பாதுகாக்கப்பட வேண்டும். இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணப்பட வேண்டும். இது தொடர்பாக இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் கேட்டுக் கொண்டால் மாத்திரமே இந்தியா மத்தியஸ்தராக இருந்து அவர்களுக்குள் சமரசம் செய்து வைப்பது பற்றி யோசிக்கும் எனத் தனது பேட்டியில் தெரிவித்திருந்தார்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

### யாழ்.குடைவை....

இராணுவத்தை வெளியேற்றப் போவதில்லை எனவும், அதனால் பயமின்றி உறுப்பினர்களை அங்கு வைத்திருக்கும்படியும் சந்திரிகா தெரிவித்துள்ளார். இச் சந்திப்பில் ஈ.பி.டி.பி., புளொட் குழுக்களின் பொறுப்பாளர்களான டக்ளஸ் தேவானந்தா, சித்தார்த்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

### இலக்கை......

மார்ச்சில் இன்னும் இரண்டு வாரங்களில் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகிக்கொள்ளப் போவதாக பிரபாகரன் குமாரதுங்காவிற்குக் கடிதம் எழுதினார். ஆனால் இராணுவத்திற்கு அது தெரியப்படுத்தப்படவில்லை. மீண்டும் யுத்தம் ஆரம்பமாகிய போது இராணுவம் தயார் நிலையில் இருக்கவில்லை. அடுத்த கட்டமாக விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக நசுக்க இராணுவம் புறப்பட்டது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதில் வெற்றிகள் கிடைத்தனதான். ஆனால் பிரதான நகரங்களைக் காப்பாற்றப் போதுமான படையினர் அனுப்பி வைக்கப்படவில்லை. பொருளாதார இராணுவ வளங்கள் முழுவதையும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதிலேயே அரசாங்கம் செலவிட்டது. வவுனியாவிற்கும் ஆனையிறவுக்கும் இடையிலான நெடுஞ்சாலையைக் கைப்பற்ற அவர்கள் நகர்ந்தபோது இராணுவம் அங்கு பரவிவிடப்பட்டது. இந்தத்தருணத்தில், விடுதலைப் புலிகள் தங்களை மீளத் தயார்படுத்தி இராணுவத்திற்குத் தோல்விகளை ஏற்படுத்தத் தொடங்கினார்கள். இப்போது அரசாங்கம் இராணுவத் தீர்வு என்பதைக்கைவிட்டு விடவேண்டும். ஆனால் அரசினால் முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வுத்திட்டம் விடுதலைப் புலிகளால் நிராகரிக்கப்பட்டுள்ளது என அவர் தனது பேட்டியில் மேலும் தெரிவித்திருந்தார்.

## கண்ணீரால் காத்தோம் கருகத் திருவுளமோ ?

**அந்த 26 உயிர்களுக்காய் உங்களிடம் கையேந்தி நின்றோம்.**
**கடிதங்கள் வரைந்தோம்**
**முடிந்தவரை போராடினோம்.**

**இனியேது செய்வோம்?**

**இம்மூவருக்கும் நாள் குறிக்கும்வரை பார்த்திருப்போமா?**
**கடைசி முயற்சியாய் இந்தியக் குடியரசுத் தலைவரின்**
**மனச்சாட்சியை அசைக்க முயல்வோம்.**
**கருணைமனுவிற்கு வலிமை சேர்க்க**
**கடிதங்கள் எழுதுவோம், மகஜர்கள் அனுப்புவோம் இந்த**
**அப்பாவிகளின் உயிர்களை மீட்டுத்தாருங்கள் என்று இந்திய**
**மனச்சாட்சியிடம் மன்றாடுவோம்.**

**அன்பான தமிழ் மக்களே,**
**நின்று நிதானிக்க நேரமில்லை.**
**மூன்று உயிர்களுக்காய் விரைந்து பணிசெய்வோம்.**

மனுக்கள் அனுப்பவேண்டிய முகவரி:


**Mr. K.R. Narayanan**
*President of India*
Office of The President
Rashtrapati Bhavan
New Delmi - 110 004, Indida
Telegrams - President, Newdelhi, India
Faxes -+91 11 301 7290

## பிரான்ஸ் மாவீரர் நினைவுப் போட்டிகள் ஆரம்பமாகின்றன



தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுக் கிளையினர் நடாத்தும் மாவீரர் நினைவு விளையாட்டுப் போட்டிகள் 2000த்தில், மாவீரர் நாள் நினைவு துடுப்பெடுத்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 21.05.2000 ஞாயிறன்று காலை 10 மணிக்கு Vincennes மைதானத்தில் நடைபெறும். போட்டிக்கான தேர்வுகள் முதல்நாள் சனிக்கிழமை [20.05.2000] அன்று மாலை 7 மணிக்கு பாரிஸ் தமிழ்ச்சோலை மண்டபத்தில் நடைபெறும்.

குறிப்பு:- தேர்விற்கு வரும் கழகங்கள் மட்டுமே மண்டபத்தில் அனுமதிக்கப்படுவார்கள்.



இதேவேளை, மாவீரர் நினைவு சதுரங்கம், கரம் ஆகிய போட்டிகள் எதிர்வரும் 28.05.2000 ஞாயிறன்று காலை 10 மணிக்கு பாரிஸ் தமிழர் கல்வி நிலைய மண்டபத்தில் [21, Rue de Voltaire - 75011 Paris] நடைபெறும். பங்குபற்றுபவர்கள் காலை 9 மணிக்கு சமூகமளிக்கவும்.

உங்கள் மேலதிகத் தொடர்புகளுக்கு 01 43 58 11 42 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பிரஞ்சுப் பணியகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.


**தமிழ்நாடு, இந்தியா சுற்றுலாவா?**
**சென்னையில் தங்குமிட வசதியா?**

சென்னையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு, திருமணம், சுற்றுலா ஒழுங்குகள் முதலியன நம்பிக்கையுடன் செய்து தரப்படும். குறிப்பாக சென்னையில் கடற்கரையோரம், சந்தை வசதியுடனும் வீடுகள் உண்டு.

விபரங்களுக்கு:
040 4910430 / 0621 1222617 / 0171 2719836

Pub.


(22-ம் பக்கத் தொடர்ச்சி)

### ஆர்மேனியா...

கௌக்காஸ் பிராந்தியத்தை கைப்பற்றிக்கொண்டது. 1820ல் டிரான்ஸ் கௌக்காசின் ஈரானிய பகுதிகளை ரஷ்யா கைப்பற்றிக்கொண்டது. ஹன்செக் எனும் ஆர்மேனிய தேசியவாத அமைப்பினர் சோசலிச ஆர்மேனிய சுதந்திரத்திற்காக போராட்டங்களை ஆரம்பித்தனர். ஒட்டமான் ஆட்சியாளர்கள் 1894- 1896 ஆண்டுகளில் பல ஆயிரம் ஆர்மேனியர்களை கொன்றொழித்தனர். முதலாம் உலகப் போர் காலத்தில் ஆர்மேனியர் ரஸ்யாவிற்கு ஆதரவாக செயற்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டில் ஒட்டோமான் ஆட்சியாளர்களால் பல ஆயிரம் இளம் ஆர்மேனியர்கள் கொல்லப்பட்டனர். அத்துடன் சிரியா போன்ற பகுதிகளுக்கு பலாத்கரமாக வெளியேற்றவும் பட்டனர். ரஷ்யாவும் ஐரோப்பிய நாடுகளும் இப்படுகொலைகளை கண்டித்தபோதிலும் இதில் தலையிடவில்லை. உலகப்போர் முடிவடைந்திருக்கையில் 8 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆர்மேனியர்கள் இவ்வகையில் கொல்லப்பட்டிருந்தனர். 1923ம் ஆண்டில் தற்போதைய ஆசிய துருக்கியில் இருக்கும் அனொத்தோலியா பகுதியில் இருந்து ஆர்மேனியர்கள் துடைத்தெறியப்பட்டிருந்தனர். 20ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் உலகப்போர் நேச அமைப்புக்களுடன் ஒட்டோமான் செய்துகொண்ட ஒப்பந்தங்களின்படி ஆர்மேனியாவிற்கு சுதந்திரம் வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் துருக்கிய தேசியவாதியான முஸ்தபா கமால் அடாடுர்க் ஆட்சிப்பொறுப்பை கையேற்றவுடன் சுதந்திரப் பிரகடனத்தை ஏற்றுக்கொள்ளாமல் மீண்டும் ஆர்மேனியாவை ஆக்கிரமித்துக் கொண்டார். இதனை எதிர்த்த சோவியத் ஆட்சியாளர்கள் ஒரு பகுதியை தாமும் ஆக்கிரமித்துக் கொண்டனர். 1923ல் சோவியத் யூனியன் தோற்றம்பெற்றபோது சோவியத்தின் குடியரசுகளில் ஒன்றாக அதுவும் இணைந்துகொண்டது. 1991ம் ஆண்டு செம்டெம்பர் மாதம் ஆர்மேனியா வாக்களார்கள் சோவியத் ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவதற்கான வாக்களிப்பு அனுமதியை வழங்கினர். அடுத்து வந்த மாதத்தில் லெபாண்டர் பெற்றோய்ச்சான் முதலாவது ஜனாதிபதியாக தெரிவாகினார். அதேவருடம் டிசெம்பர் மாதம் சோவித் யூனியனில் இருந்து உத்தியோபூர்வமாக ஆர்மேனியா விலகிக்கொண்டது.


தங்க மாளிகை ஜுவல்லர்ஸ்

திங்கள் தவிர்ந்த வாரத்தில் ஒவ்வொரு நாட்களும் காலை 10.30 மணிமுதல் மாலை 6.30 மணிவரை திறந்திருக்கும்

மங்கையர்க்கொரு மாளிகை தங்க மாளிகை

Thanga Maligai Jewellers
Amalia House

276, Lewisham High Street,
London,
SE13 6JZ.

Tel: 020 8690 3686
Fax: 020 8690 4157

Pub

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 0181/813 91 26
Pub

# இலக்கை அடைவதில் திறமையுடனும், உறுதியுடனும் செயற்படும் ஒரு தலைவர்

## நமது தேசியத் தலைவர் பற்றி ரணில் விக்கிரமசிங்க

(08.05.00)
பிரபாகரன் ஓர் இலக்குடன் அதனை அடைவதற்காகச் செயற்படுகின்றார். அவர் அதை அடைவதில் அந்த இலக்கிற்காக அவர் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.. கடந்த பல தடவைகளில் தான் ஒரு திறமை மிக்க, கண்டிப்பு நிறைந்த தலைவர் என்பதை நிரூபித்துள்ளார். அத்துடன் இராணுவ ரீதியாக ஓர் அமைப்பைக் கட்டியெழுப்பும் திறன் தன்னிடம் உண்டு என்பதையும் அவர் காட்டியுள்ளார். இவ்வாறு சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இந்தியாவில் இருந்து வெளிவரும் 'த வீக்' என்ற சஞ்சிகைக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார். அச் சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியின்போது, ஒரு பிரதமர் என்கின்ற ரீதியில் விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருந்திருக்கின்றீர்கள். பிரபாகரன் பற்றி உங்களுடைய கருத்து என்ன? என கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார். அப் பேட்டியின் போது, ஆனையிறவு படைத்தளத்தின் வீழ்ச்சிக்கு இராணுவத்தைக் குற்றம் சுமத்துவதில் அர்த்தமில்லை. அரசாங்கம்தான் அரசியல் கால அட்டவணைக்கு ஏற்றவாறு யுத்தத்தை நடத்தியது. அதனால் ஏற்பட்ட தோல்விதான் இது. 80களின் ஆரம்பத்தில் இருந்தே நிலைத்திருந்த ஆனையிறவு இழக்கப்பட்டதானது மிகப்பெரும் தோல்வியென்றார். அப்படியானால் அரசாங்கம் தவறாக கணிப்பிட்டதா என நிருபர் கேட்டதற்கு, 1994ல் அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்குப் போனது ஆனால் அனுபவம் வாய்ந்தவர்கள் அனுப்பி வைக்கப்படவில்லை. சென்றவர்கள் விடுதலைப்புலிகளைக் குறைத்து மதிப்பிட்டார்கள். 95

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# சந்திரிகாவின் உள்நோக்கம் அம்பலமாகி விட்டது

## – பழ.நெடுமாறன் –

(08.05.00)
சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகாவின் உண்மையான உள்நோக்கம் தற்போது அம்பலமாகி விட்டது எனத் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த போர் நிறுத்த அறிவிப்பை ஏற்க சிறீலங்கா அரசு மறுப்புத் தெரிவித்ததையடுத்தே இவ்வாறு கூறியுள்ளார். இது தொடர்பாக இவர் விடுத்துள்ள அறிக்கையொன்றில்,

யாழ். குடா பகுதியில் சிக்கிக் கொண்டுள்ள சிங்கள இராணுவம் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு வாய்ப்புக்கொடுத்து தற்காலிகப் போர் நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் அறிவித்தனர். மேலும் சிங்கள இராணுவம் வெளியேறுவதைப் பார்வையிட வருமாறு செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு புலிகள் அழைப்பு விடுத்தனர். யாழ்.குடாவில் இருந்து மதிப்புடனும், கௌரவத்துடனும், உயிரிழப்பின்றியும் வெளியேறுவதற்கு விடுதலைப் புலிகள் அளித்த இந்த வாய்ப்பை இலங்கை அதிபர் சந்திரிகா

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# சிறீலங்கா அரசு–விடுதலைப் புலிகள் கேட்டால் மத்தியஸ்தம் வகிப்பது பற்றி யோசிப்போம்

## – இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் –

(08.05.00)
இலங்கையில் ஏற்பட்டுள்ள இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் எம்மைக் கேட்டுக்கொண்டால் அவர்களுக்கிடையில் சமரசம் செய்து வைப்பது பற்றி இந்தியா பரிசீலிக்கும் என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந் சிங் தெரிவித்துள்ளார். நேற்று தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்துவரும் போரைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளை இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. அங்கு இந்தியா தனது இராணுவத்தை அனுப்பி வைப்பதற்கான வாய்ப்பே இல்லை. மருந்துகள் மற்றும் உணவுப்பொருட்களை அனுப்பி வைப்பது போன்ற மனிதாபிமான உதவிகளை மட்டும் செய்யத் தயாராக இருப்பதாக இலங்கை அரசிடம் தெரிவித்துள்ளோம்.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# யாழ். குடாவை விட்டு வெளியேறத் தேவையில்லை

## தமிழ்க்குழுக்களுக்கு சந்திரிகா

(08.05.00)
விடுதலைப் புலிகள் மீண்டும் யாழ். குடாவை மீட்டுவருவதையடுத்து சிறீலங்காப் படைகளுடன் இணைந்து இயங்கும் தமிழ்க் குழுக்கள் தமது குழுவினரை அங்கிருந்து விலக்கிக்கொள்ளும் நிலைகுறித்து ஆராய்ந்துள்ளனர். இது குறித்து சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு தெரியப்படுத்தியதையடுத்து அக் குழுக்களின் தலைவர்களை நேற்று அழைத்துப் பேசியுள்ளார்.

இதன்போது யாழ். குடாவை விட்டு, தமது உறுப்பினர்களை வெளியேற்றுவது குறித்து, மேற்படி கூலிக்குழுவினர் பிரஸ்தாபித்ததற்கு, யாழ். நகரைவிட்டு,

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# பேர்லினில் சிங்கள வீரவிதான

(08.05.00)
தமிழர்களுக்கு எதிராக இனத்துவேசத்தை கக்கிவரும் சிங்கள வீரவிதானவின் கிளையொன்று ஜேர்மன் பெர்லின் நகரில் அமைக்கப்பட்டுள்ளது. பேர்லினில் வசிக்கும் சிங்களவர்களை திரட்டி அமைக்கப்பட்டுள்ள இவ் அமைப்பு தற்பொழுது சிறீலங்காப் படையினருக்கென நிதிச் சேகரிப்பையும் ஆரம்பித்துள்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

K.R.S. ENTERPRISES
கே.ஆர்.எஸ். என்ரபிறைசெஸ்
537 High Road,
Wembley
Middlesey, HA0 2DJ,
Tel: 0181- 9024590
நிர்வாகி: G.சதீஸ்
Pub



- Leela அரிசிமா - 89P ல் இருந்து
- Kingfish- 2.59 ல் இருந்து
- நீலக்கால் [துப்பரவு செய்த] நண்டு £3.89 ல் இருந்து
- 20 Kg Broken Basmath £7.99 இலிருந்து
- CD 2.99 இல் இருந்து - ★ Audio 99 இல் இருந்து
- நல்லெண்ணை £3.49; 1/2 போத்தல் £1.79
- அனைத்துத் தொலைபேசி அட்டைகளும் 10% விலைக் கழிவில்

£20 இற்கு மேல் கொள்வனவு செய்தால் 1 Kg லீலா அரிசிமா இலவசம்!
லீலாவின் அனைத்துத் தயாரிப்புக்களும் மலிவு விலையில்!!